விலை: 30.00
பக்கங்கள் : இருபத்து நான்கு + II

website : www.valampurii.lk
Viber : 076 636 3378

Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
# Valampurii

E-mail: valampurii@yahoo.com,
valampurii@sltnet.lk

கல்யாண மாலை
[சர்வதேச திருமண சேவை]
T.P: 021 720 1005

இல.144,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.
Email:Kalyanamalai.jaffna@gmail.com
பதிவுக்கட்டணம்
1000/= + 300/= மட்டுமே

சங்கு 20 வள்ளுவர் ஆண்டு 2050 ஆடி 09 வியாழக்கிழமை (25.07.2019) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 218

## பயங்கரவாதத் தாக்குதல்
# ஐ.எஸ் அமைப்புக்கு தொடர்பில்லை

### பாராளுமன்ற தெரிவுக்குழுவில் சி.ஐ.டி பணிப்பாளர் சாட்சியம்



(கொழும்பு)

பயங்கரவாதத் தாக்குதலுக்கும் ஐ.எஸ் அமைப்புக்கும் தொடர்பு இருப்பதாக குற்றப் புலனாய்வுப் பிரிவினர் முன்னெடுத்துவரும் விசாரணைகளில் எந்தச் சாட்சிகளும் கிடைக்கவில்லை என்று குற்றப்புலனாய்வுப் பிரிவுக்கு பொறுப்பான சிரேஷ்ட பிரதி பொலிஸ்மா அதிபர் ரவி செனவிரத்ன பாராளுமன்ற தெரிவுக்குழு முன் நேற்று சாட்சியமளித்தார்.

(23ஆம் பக்கம் பார்க்க)

## பிரபாகரன் இருந்திருந்தால் உங்களுக்கு இந்த தைரியம் வந்திருக்குமா? சபையில் சார்ள்ஸ்

(கொழும்பு)

தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரன் இருந்திருந்தால் கன்னியாவில் இந்து மத குருமார் மீது இவ்வாறு சுடு தண்ணீர் ஊற்றியிருக்க முடியுமா? அவ்வாறு ஊற்ற அவர்களுக்கு தைரியம்

23

## வல்வெட்டித்துறை பகுதியில் 30 கிலோ கஞ்சா மீட்பு
### சந்தேகத்தில் ஒருவர் கைது



(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் வல்வெட்டித்துறை பகுதியில் 30 கிலோ கஞ்சாவுடன் ஒருவரை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

வல்வெட்டித்துறை பகுதியில் உள்ளவீடொன்றில் இருந்தே கஞ்சா மீட்கப்பட்டதுடன், 55 வயதுடைய திருகோணமலைப் பகுதியைச் சேர்ந்த நபர்

24

## யாழ்.மாநகர சபையின் 5 ஜி திட்டத்துக்கு எதிராக நீதிமன்றில் வழக்குத் தாக்கல்

(யாழ்ப்பாணம்)

யாழ் மாநகர சபையால் நடைமுறைப்படுத்தப்படும் ஸ்மார்ட் போல் திட்டத்தை உடனடியாக இடைநிறுத்தக் கோரி, யாழ் மேல் நீதிமன்றத்

23

## வைரஸ் காய்ச்சல் இளம் பெண் மருத்துவர் மரணம்



23

### கதிர்காமர் கொலை
## முன்னாள் புலி உறுப்பினருக்கு எதிராக ஜேர்மனியில் குற்றச்சாட்டு

(கொழும்பு)

இலங்கையின் வெளியுறவுத் துறை அமைச்சராக இருந்த லக்ஷ்மன் கதிர்காமர் கொலை தொடர்பாக ஜேர்மனியில் கைது செய்யப்பட்ட புலிகள்

23

### பாராளுமன்றில் ஏற்பட்ட சர்ச்சையை அடுத்து
## ஐ.நா சிறப்பு அறிக்கையாளருக்கும் நீதிபதிகளுக்கும் இடையிலான சந்திப்பு இரத்து

(கொழும்பு)

பாராளுமன்றத்தில் ஏற்பட்ட சர்ச்சையை அடுத்து ஐ.நா. சிறப்பு அறிக்கையாளர் மற்றும் உயர்நீதிமன்ற நீதிபதிகளுக்கு இடையே நடைபெறவிருந்த கூட்டம் இரத்து செய்யப்பட்டுள்ளது.

இந்த விவகாரம் தொடர்பாக நீதி அமைச்சு மற்றும் வெளியுறவு அமைச்சுடன் கலந்துரையாடியதாக சபாநாயகர் கரு ஜயசூரிய நேற்று புதன்கிழமை பாராளுமன்றில் தெரிவித்தார்.

இதன் விளைவாக கூட்டம் இரத்து செய்யப்

23

## நாவற்குழி சிவபூமி திருவாசக சிவதெட்சணாமூர்த்தி கோவிலில்
### ஐம்பொன்னிலான பிள்ளையார் சிலை திருட்டு

(யாழ்ப்பாணம்)

நாவற்குழி சிவபூமி திருவாசக அரண்மனை சிவதெட்சணாமூர்த்தி திருக்கோவிலில் காணப்பட்ட ஐம்பொன்னினால் ஆன பிள்ளையார் சிலை

23

## வீதியைக் கடக்க முற்பட்ட மோ.சைக்கிளை மோதித் தள்ளிய டிப்பர் வாகனம்
### இளைஞன் உயிரிழப்பு; நெல்லியடியில் சம்பவம்



(கரணவாய்)

அதி வேகமாக பயணித்த டிப்பர் வாகனம் வீதியைக் கடக்க முற்பட்ட மோட்டார் சைக்கிளை மோதித் தள்ளியதில் மோட்டார் சைக்கிளை செலுத்தி சென்ற இளைஞர் ஒருவர் பரிதாபகரமாக உயிரிழந்தார்.

நேற்று புதன்கிழமை காலை 6.00 மணியளவில் நெல்லியடி சந்தியில்

23

## மாநகர முதல்வரின் முறையற்ற நிர்வாகத்துக்கு எதிராக
### நம்பிக்கையில்லாப் பிரேரணை

(யாழ்ப்பாணம்)

யாழ் மாநகரசபை முதல்வர் இம்மானுவேல் ஆர்னல்ட்டின் முறையற்ற நிர்வாகத்தினால், அவர் மீது நம்பிக்கை இல்லையென்பதை

23

## வாள்வெட்டுடன் தொடர்புடைய இருவர் சாவகச்சேரியில் கைது

(யாழ்ப்பாணம்)

துப்பாக்கி பிரயோகத்தில் உயிரிழந்த வாள்வெட்டுக்குழுவின் உறுப்பினருடன் தொடர்புடையவர்கள் என்ற சந்தேகத்தின் பேரில், இருவரை மானிப்பாய் பொலிஸார் கைது செய்துள்ளனர்.

யாழ்ப்பாணம் சாவகச்சேரி பகுதியைச் சேர்ந்த இரு இளைஞர்களை மானிப்பாய்

23

## ஐ.நா விசேட பிரதிநிதியுடன் ஆளுநர் சுரேன் ராகவன் சந்திப்பு



(கொழும்பு)

இலங்கைக்கு விஜயம் மேற்கொண்டுள்ள சுதந்திர உரிமைக்கான ஐநா சமாதான சபையின் விசேட பிரதிநிதி Mr.Clément Nyaletsossi Voulé க்கும் ஆளுநர் கலாநிதி சுரேன் ராகவனுக்குமிடையிலான சந்திப்பு நேற்று பிற்பகல் கொழும்பில் இடம்பெற்றது.

23

## சந்திரிகா கொண்டு வந்த தமிழருக்கான அரசியல் தீர்வை
### தீயிட்டுக் கொளுத்திய ஐ.தே.க முதலைக் கண்ணீர் வடிக்கிறது - தயாசிறி

(கொழும்பு)

தமிழரின் அரசியல் தீர்வை தீயிட்டுக் கொளுத்திய ஐக்கிய தேசியக் கட்சி

23

## பெண் பணியாளர் தேவை

சிறிய குடும்பம் ஒன்றிற்கு
வீட்டு வேலைகளைத் தங்கி நின்று
செய்யக்கூடிய பொறுப்புக்களற்ற
பெண் பணியாளர் தேவை
உணவு, தங்குமிடவசதியுடன்
நியாயமான சம்பளமும் தரப்படும்,
பணிபுரிய விரும்புவோர் நேரடியாக
தொடர்பு கொள்ளவும்
இடம்: நெல்லியடி

(c-7077)

**076 484 7171**


# கல்முனை பிரதேச செயலகத்தை 3 நிர்வாக செயலகங்களாக பிரிக்க கொள்கையளவில் இணக்கம் – ஹரிஸ்

கல்முனை செயலகத்தை யாருக்கும் பாதிப்பில்லாத வகையில் கல்முனை பிரதேச செயலகம், கல்முனை வடக்கு பிரதேச செயலகம், மருதமுனை- நற்பட்டிமுனை பிரதேசத்தை இணைத்து மருதமுனை பிரதேச செயலகம் என 3 நிர்வாக செயலகங்களாக பிரிக்க கொள்கையளவில் இணக்கம் காணப்பட்டுள்ளது என ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சியின் பிரதி தலைவரும், பாராளுமன்ற உறுப்பினருமான எச்.எம்.எம். ஹரீஸ் தெரிவித்தார்.

கல்முனை விவகாரம் குறித்து தொடர்ந்தும் உள்ளூராட்சி, மாகாண சபைகள், உள்நாட்டலுவல்கள் அமைச்சர் வஜிர அபயவர்த்தனவை சந்தித்து வரும் முஸ்லிம், தமிழ் தரப்பினரின் நிலைப்பாடுகள் தொடர்பில் வினவிய போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

மேலும் கருத்து தெரிவித்த அவர்,

நேற்று உள்நாட்டு அலுவல்கள் அமைச்சர் வஜிர அபேவர்த்தனவை அமைச்சில் வைத்து சந்தித்து பேசினோம்.

கல்முனைபிரதேச செயலக எல்லைப் பிரச்சினையை நீண்ட நேரம் பேசினோம். இங்கு நற்பட்டிமுனை மருதமுனை மக்களின் தேவைகளை உணர்த்தி மருதமுனைக்கான பிரதேச செயலக உருவாக்கத்தின் அவசியம், மற்றும் அது சார்பிலான சாத்தியபாடுகளை தெளிவாக விளக்கி கூறியவுடன் அந்த கோரிக்கையின் தேவையை அமைச்சரும் ஏற்றுக் கொண்டார் என அவர் மேலும் தெரிவித்தார்.


## சேல்ஸ்மான் தேவை

எமது ஜவுலி நிறுவனத்துக்கு புடவை அனுபவம் உள்ள ஆண்/பெண் விற்பனையாளர் தேவை. தொழில் பழக விரும்புவர்களும் விரும்பத்தக்கது.

சிவகணேசன் ரெக்ஸ்
41, பெரியகடைவீதி, யாழ்ப்பாணம். (9701)



## பணியாளர் & பயிற்சிப் பணியாளர் தேவை

நெல்லியடிப் பகுதியில் அமைந்துள்ள நிறுவனம் ஒன்றிற்கு பின்வரும் பணி நிலைகளுக்கு பெண் பணியாளர்கள் தேவை

1. பியூட்டி பார்லர் வேலைகள்
2. ஸ்கிறீன் பிறிண்ட் வேலைகள்
3. விற்பனை மற்றும் ஓடர்கள் ஏற்பவர்
4. வளங்கள் மற்றும் நிலையப் பராமரிப்பாளர்

*பொறுப்புடன் பணிசெய்யக் கூடியவர்கள் நேரில் வரவும் சம்பளத்துடன் வேலைகள் பழக விரும்புவர்களும் வரலாம்*

இல: 11 பொன் கந்தையா பாதை, மத்திய கல்லூரி வீதி, நெல்லியடி
பொறுப்பாளர் 077 914 3171



இல: 11 பொன் கந்தையா பாதை, மத்திய கல்லூரி வீதி, நெல்லியடி
பொறுப்பாளர் 077 914 3171



## கணினி திருத்தம்

சகலவிதமான கணினி லப்டொப்கள்
வீடுகள் அலுவலகங்களுக்கே வந்து
2 மணித்தியாலத்தில் திருத்தி தரப்படும்.
நியாயவிலை விற்பனை சேவை

## சிசிரிவி கமரா

2 கமராக்கள் கொண்ட பக்கேஜ்
பொருத்துதல் உட்பட 25000/=மட்டுமே.

## பில்லிங் சொப்ட்வெயார்

வியாபார நிலையங்களுக்கான இலகு
கணக்கு பார்கோட் சொவ்ட்வெயார்
சிஸ்டம்
நெற்வேர்க்கிங்
ஸ்மார்ட் வகுப்பறை
விரல்ரேகை பதிவு இயந்திரம்
உலோகம் கண்டறியும் கருவி
பிறின்டர் விற்பனை திருத்தம்
உள்ளக தொலைபேசி இணைப்பு

**GUNA BEST PC**
522 Manipay Road,Oddumadam Junction,Jaffna
Computer Repair Sale
CCTV Camera 077 9086737
POS System Software
Smart Class Room
Metal Detector
Networking Printer Sale Repair
Fingerprint Machine Intercom
(c-7005)



## SAAMSON இன் மூன்றுமாத வார, வார இறுதி இலவச ஆங்கிலப்பயிற்சிநெறி

13 வயதிலிருந்து 60 வயதிற்குட்பட்ட ஆங்கிலம் கற்க ஆர்வமுள்ள எவரும் இம் மூன்றுமாத இலவச ஆங்கிலப்பயிற்சியில் இணையமுடியும்

| சனி,ஞாயிறு பிரிவுகள் 27.07.2019 | | செவ் & வியாழன் பிரிவுகள் 25.07.2019 |
|---|---|---|
| 1.காலை 10.00 | உடனடியாக முன்பதிவு செய்யுங்கள் | 1.மதியம் 02.00 |
| 2.மதியம் 12.00 | | 2.மாலை 03.00 |
| 3.பி.ப 02.00 | | 3.மாலை 04.00 |

அடிப்படை ஆங்கில அறிவற்றவர்களும் இப்பயிற்சியில் இணைமுடியும்
Modules கட்டணம் ரூபா 1000 மட்டும் செலுத்துதல் வேண்டும். பின்லாந்து நிறுவனத்தின் டிப்ளோமா சான்றிதழ்

(c-7096)

SAAMSON
Experts in English Training
403, வெலிங்டன் சந்தி,
சன்மார்க்க மகா வித்தியாலயம் முன்பாக
யாழ்நகர்,
077 621 4567
021 222 4282


## யாழ்ப்பாணம் மாநகர சபை

சந்தைகள், இறைச்சிக்கடைகள், கருவாட்டுக்கடைகள், கோழிக்கடைகள், என்பவற்றை குத்தகைக்கு வழங்குவதற்கான

# மீள்கேள்வி அறிவித்தல் –2019

யாழ் மாநகர சபையினால் 02.11.2018 ம் திகதிய பத்திரிகைகளில் பிரசுரிக்கப்பட்ட கேள்வி அறிவித்தல் நிபந்தனைகளுக்கும், கீழ்க்குறிப்பிட்ட நிபந்தனைகளுக்கும் அமைவாக, இதன்கீழ் அட்டவணைப்படுத் தப்பட்டுள்ள மேற்படி கடைகள் 15.08.2019 - 31.12.2019 திகதி வரையான காலப்பகுதிக்கு குத்தகைக்கு வழங்குவதற்கான அரக்கு முத்திரையிடப்பட்ட கேள்விகள் யாழ்ப்பாணம் மாநகர சபையால் கோரப்படுகின்றது.

| | | |
|---|---|---|
| கேள்விப்படிவக்கட்டணம் | - | ரூபா 500.00 (வரி நீங்கலாக) |
| கேள்விப்படிவம் விநியோகித்தல் | - | 26.07.2019 - 08.08.2019 (மு.ப 9.00 - பி.ப 3.00 மணி வரை) |
| கேள்விப்படிவம் ஏற்றுக்கொள்ளல் | - | 08.08.2019 பி.ப. 3.30 மணி வரை |
| கேள்விப்படிவம் திறத்தல் | - | 09.08.2019 மு.ப 10.00 மணிக்கு |

- 2019 ம் ஆண்டுக்கான கேள்வியில் சித்தி பெற்று 1/3 பணம் செலுத்தாத கேள்விதாரர்கள் மீள் கேள்வியில் சித்தி பெறினும் பரிசீலிக்கப்பட மாட்டார்கள்
- மேலதிக நிபந்தனைகள் விண்ணப்ப படிவத்துடன் இணைத்து வழங்கப்படும்.

### மீள் கேள்வி அறிவித்தல் அட்டவணை
### இறைச்சிக்கடை குத்தகை – 2019

| தொ. இல | இறைச்சிக்கடை | கடை இல. | மீளளிக்கக்கூடிய கேள்வி பிணைப்பணம் | ஏற்றுக்கொள்ளக்கூடிய ஆகக் குறைந்த கேள்வித்தொகை (வரி நீங்கலாக) |
|---|---|---|---|---|
| 1 | பண்ணை கருவாட்டுக்கடை | இல.02 | 5,000.00 | 21,827.95 |
| 2 | பண்ணை ஆட்டிறைச்சிக்கடை | இல.03 | 5,000.00 | 77,908.99 |
| 3 | பண்ணை கோழிக்கடை | இல.07 | 5,000.00 | 326,986.42 |
| 4 | பாசையூர் மாட்டிறைச்சிக்கடை | இல.01 | 5,000.00 | 299,546.63 |
| 5 | புங்கன்குளம் ஆட்டிறைச்சிக்கடை | இல.01 | 5,000.00 | 34,488.16 |
| 6 | நாவாந்துறை மாட்டிறைச்சிக்கடை | இல.04 | 5,000.00 | 134,325.84 |
| 7 | நாவாந்துறை மாட்டிறைச்சிக்கடை | இல.05 | 5,000.00 | 119,400.75 |
| 8 | நாவாந்துறை மாட்டிறைச்சிக்கடை | இல.06 | 5,000.00 | 83,990.96 |
| 9 | நாவாந்துறை மாட்டிறைச்சிக்கடை | இல.07 | 5,000.00 | 83,953.65 |
| 10 | நாவாந்துறை மாட்டிறைச்சிக்கடை | இல.08 | 5,000.00 | 74,681.44 |
| 11 | நாவாந்துறை மாட்டிறைச்சிக்கடை | இல.09 | 5,000.00 | 82,946.21 |
| 12 | நாவாந்துறை கோழிக்கடை | இல.10 | 5,000.00 | 129,475.19 |
| 13 | நாவாந்துறை ஆட்டிறைச்சிக்கடை | இல.11 | 5,000.00 | 22,298.09 |
| 14 | நாவாந்துறை கருவாட்டுக்கடை | இல.12 | 5,000.00 | 4,306.82 |
| 15 | அரியாலை ஆட்டிறைச்சிக்கடை | இல.01 | 5,000.00 | 26,902.48 |
| 16 | குருநகர் மாட்டிறைச்சிக்கடை | இல.06 | 7,000.00 | 197,985.10 |
| 17 | குருநகர் மாட்டிறைச்சிக்கடை | இல.07 | 7,000.00 | 152,459.83 |


### பொதுச்சந்தைக் குத்தகை 2019

| தொ. இல | பொதுச்சந்தைகள் | மீளளிக்கக்கூடிய கேள்வி பிணைப்பணம் | ஏற்றுக்கொள்ளக்கூடிய ஆகக் குறைந்த கேள்வித்தொகை (வரி நீங்கலாக) |
|---|---|---|---|
| 01 | புங்கன் குளம் உள்ளூர் உணவு உற்பத்தியாளர்களின் அறிமுகச் சந்தை | 2,000.00 | 3,030.73 |

மேலதிக விபரங்களை மாநகர சபையின் நானாவித இறைவரிப் பகுதியில் அலுவலக நேரங்களில் பெற்றுக் கொள்ளலாம்.

தலைவர்,
பிராந்திய பெறுகைக்குழு,
மாநகர சபை, யாழ்ப்பாணம்.
25.07.2019

# மரண அறிவித்தல்



## சின்னத்தம்பி இராசையா

சங்கமம் வீதி மாதாகோவிலடி, கோப்பாய்தெற்கு கோப்பாயைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட அமரர் சின்னத்தம்பி இராசையா அவர்கள் 24.07.2019 புதன் கிழமை காலமானார் அன்னார் சின்னத்தம்பி- செல்லி தம்பதிகளின் சிரேஷ்ட புத்திரனும், கந்தையா, அமரர் சின்னையா பொன்னம்மா ராசாத்தி ஆகியோரின் அன்புச் சகோதரனும் நாகேஸ்வரியின் பாசமிகு கணவரும், அமரர்களான சின்னத்தம்பி செல்லம் தம்பதிகளின் மருமகனும் வவா,வதனி, ரயனி, ஜீவா,புஸபலதா, விஜி, சஞ்சு ஆகியோரின் பாசமிகு தந்தையுமாவார். விமலநாதன், ரூபன், ஈசன், ராதிகா, தவரத்தினம் ஆகியோரின் மாமனாரும் ஜென்ஷா, டனு, கவி, சாருஜன் ஆகியோரின் பாசமிகு தாத்தாவுமாவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் 25.07.2019 இன்று வியாழக் கிழமை காலை 10.30 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கோப்பாய் கந்தன்காடு இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இத்தகவலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறோம்.

*சங்கமம் வீதி,*
*மாதா கோவிலடி, கோப்பாய்.* (9698) *குடும்பத்தினர்.*

# காணாமல்போன மகனை தேடியலைந்த தாய் உயிரிழப்பு



(பனிக்கன்குளம்)

இராணுவத்திடம் கையளித்து காணாமல் ஆக்கப்பட்ட தனது மகனை தேடி அலைந்த தாயார் ஒருவர் முல்லைத்தீவில் நேற்று உயிரிழந்துள்ளார்.

புதுக்குடியிருப்பு இரணைப்பாலையைச் சேர்ந்த செபமாலை திரேசம்பாள் என்பவரே மேற்படி உயிரிழந்தவராவார்.

இராணுவத்திடம் கையளித்து காணாமல் ஆக்கப்பட்ட உறவுகள் மற்றும் யுத்த காலங்களில் காணாமல் ஆக்கப்பட்ட உறவுகள் வெள்ளை வானில் கடத்தப்பட்டு காணாமல் ஆக்கப்பட்ட உறவுகள் என பல்வேறு வகைகளில் காணாமல் ஆக்கப்பட்ட தங்களுடைய பிள்ளைகளை தேடி முல்லைத்தீவு மாவட்டத்தில் வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்கள் 2017 ஆம் ஆண்டு மார்ச் மாதம் எட்டாம் திகதி முதல் தொடர் கவனயீர்ப்பு போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர்.

அந்த வகையிலே முல்லைத்தீவு மாவட்டத்தில் இடம்பெற்று வரும் வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களை தேடி நடத்தப்படுகின்ற அனைத்துப் போராட்டங்களிலும் பங்கெடுத்து வந்த தனது மகனை இராணுவத்திடம் கையளித்து காணாமல் ஆக்கப்பட்ட நிலையில் அவரை தேடி வந்த தாய் ஒருவர் நேற்று மாரடைப்பு காரணமாக உயிரிழந்துள்ளார்.

தங்களுடைய உயிர்கள் பிரிவதற்கு முன்பதாக உறவுகளை ஒரு நாளாவது எங்களோடு வாழ விடுங்கள் என கோரிக்கையை முன்வைத்துப் போராடி வருகின்ற நிலையிலும் அந்தக் கோரிக்கைகள் பலனளிக்காத நிலையில் மற்றுமொரு தாயார் இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

இவருடைய இழப்புக்கு முல்லைத்தீவு வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் சங்கம் இரங்கல் தெரிவித்துள்ளது.(9-281)

# பயங்கரவாதத்தை தடுக்க உடனடி நடவடிக்கை

## அரசு தீர்மானம்

(கொழும்பு)

நாட்டின் பிரஜைகள் பயங்கரவாதிகளாவதை தடுக்கும் நோக்காகக் கொண்டும் எதிர்காலத்தில் பயங்கரவாத குழுக்கள் உருவாகுவதை தடுப்பதற்காகவும் புதிய உடனடி நடவடிக்கையை அறிமுகப்படுத்துவது காலத்தின் தேவையாகியுள்ளதாக அரசாங்கம் தெரிவித்துள்ளது.

பயங்கரவாதம் ஊக்குவிக்கப்படுவதை தடுத்தல் மற்றும் பெயரிடப்படும் வெளிநாட்டில் இருந்து பயங்கரவாதத்திற்கு துணைபோதல் மற்றும் ஆதரவளித்தல் மற்றும் உயிரியற் செய்திகளின் ஆயளவு தரவுகளை கட்டுப்படுத்தல் போன்ற துறை தொடர்பில் கவனம் செலுத்தி பிரதமரினால் அமைச்சரவைக்கு பரிந்துரைக்கப்பட்டுள்ளது.

• பேச்சுவார்த்தை நடத்திய பின்னர் அமெரிக்கா உள்ளிட்ட ஏனைய நாடுகளில் இது தொடர்பாக உள்ள சட்டங்கள் குறித்து மதிப்பீடு செய்து அமைச்சரவைக்கு விடயங்களை சமர்ப்பிப்பதற்காக வெளிநாட்டலுவல்கள் அமைச்சர் தலைமையிலான அமைச்சரவை துணைக்குழுவொன்றை நியமிப்பதற்காக அமைச்சரவையினால் அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது.(7-9)

# இஸ்லாமிய மாநாட்டை இலங்கையில் நடத்த வேண்டாம் - ஞானசார தேரர்

(கொழும்பு)

சர்வதேச இஸ்லாமிய மாநாட்டை இலங்கையில் நடத்துவதற்கு அனுமதி வழங்கக் கூடாது எனவும் அதனை நிறுத்த வேண்டும் எனவும் பொதுபல சேனாவின் பொதுச் செயலாளர் கலகொட அத்தே ஞானசார தேரர் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

நேற்று முன்தினம் கொழும்பில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.



சவுதிக்கு வேண்டியவாறு இந்த நாடு செயற்படத் தேவையில்லை. சவுதியின் செல்வாக்குக்கு உட்பட்டு இந்த நாடு இவ்வாறான தீர்மானத்தை எடுப்பதையிட்டு நாம் வெட்கப்பட வேண்டும்.

முஸ்லிம்களின் வாக்குகளுக்கு ஆசைப்பட்டு இந்த நாட்டின் அரசியல் தலைவர்கள் செயற்பட வேண்டாம்.

இம்மாநாட்டை நடத்துவதற்குத் தேவையான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளதாக மேல் மாகாண ஆளுநர் ஏ.ஜே.எம். முஸம்மில் கடந்த 14 ஆம் திகதி கண்டி தலதா மாளிகைக்குச் சென்று அஸ்கிரிய மகாநாயக்க தேரர்களைச் சந்தித்து தெளிவுபடுத்தியிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (7-9)

# தமிழர்களின் மரபுவழித்தாயகத்தை ஏற்றுக்கொண்டிருந்தால் நாட்டில் பிரச்சினைகள் ஏற்பட்டிருக்காது

## சங்கரத்ன தேரரிடம் சி.வி.விக்னேஸ்வரன் எடுத்துரைப்பு

(ஏறாவூர்)

பாரம்பரியமாக தமிழ் மொழி பேசும் மக்கள் வாழும் வடக்கு- கிழக்கு பிரதேசத்தை 1956 இல் ஏற்றுக்கொண்டிருந்தால் நாட்டில் இவ்வளவு பிரச்சினையும் ஏற்பட்டிருக்காது என ரன்முத்துகல சங்கரத்ன தேரரை சந்தித்து உரையாடியபோது வடக்கு மாகாண முன்னாள் முதலமைச்சரும் தமிழ் மக்கள் கூட்டணியின் செயலாளர் நாயகமுமாகிய நீதியரசர் சி.வி.விக்னேஸ்வரன் எடுத்துரைத்துள்ளார்.

கிழக்கு மாகாணம் மட்டக்களப்பு மாவட்ட மக்களின் குறைகளை கேட்டறியும் முகமாக தமிழ் மக்கள் கூட்டணியின் செயலாளர் சி.வி.விக்னேஸ்வரன் தலைமையிலான மத்திய குழு அணியினர் மட்டக்களப்பில் தங்கியிருந்து மூன்று நாட்களாக மக்கள் சந்திப்புகளை மேற்கொண்டிருந்த நிலையில் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை கல்முனைக்கு சென்றபோது, அப்பகுதி தமிழ் மக்களுக்காக தொடர்ந்து குரல்கொடுத்து வருவதுடன் அண்மையில் கல்முனை வடக்கு உப பிரதேச செயலகத்தை தரமுயர்த்தக்கோரி முன்னெடுக்கப்பட்ட சாகும்வரை உண்ணாவிரதப் போராட்டத்தில் பங்கேற்றிருந்தவருமான கல்முனை சுபத்திரா ராமய விகாரையின் விகாராதிபதி ரன்முத்துகல சங்கரத்ன தேரரைச் சந்தித்து உரையாடிய போது மேற்படி தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

தர்மபால அரசனிற்கு முடிசூட்டும் வைபவத்திற்கான சடங்குகளை செய்வதற்குரிய முனிகள் இல்லாத காரணத்தினால் தமிழ்நாட்டில் உள்ள மதுரையில் இருந்து முப்பதிற்கு மேற்பட்ட இளம் இந்து பிராமண முனிகள் வரவழைக்கப்பட்டிருந்தார்கள். இவ்வாறு முடிசூடும் விழாவிற்காக வரவழைக்கப்பட்டிருந்த முனிகளுக்கு பௌத்த சிங்கள பெண்களை மணம் முடித்து வைத்து நிலங்களையும் வழங்கி இங்கேயே இருக்குமாறு தர்மபால அரசர் கேட்கப்பட்டதற்கிணங்க அவர்களும் அவ்வாறே இங்கு தங்கிவிட்டார்கள். அவர்களிடம் வழித்தோன்றல்கள்தான் வெற்றி முனி போன்றவர்கள். இவர்கள் எல்லோரும் சுமார் ஐநூறு ஆண்டுகளுக்கு முன்னர் மதுரையில் இருந்து வந்த இந்து பிராமணர்கள். ஆனால் தற்போது சிங்கள பௌத்தர்களாக உள்ளார்கள். ஆகவேதான் பெரும்பான்மையினருடன் சிறுபான்மையினர் சேரும் போது அவர்களது தனித்துவம் இல்லாது போகும் நிலையேற்படும். அதனால் தான் வடக்கு- கிழக்கு மாகாணங்களில் உள்ள தமிழ் மொழி பேசும் மக்களது தனித்துவம் உறுதிப்படுத்தப்பட வேண்டும் என வலியுறுத்தி வருகின்றோம்.

பாரம்பரியமாக தமிழ் மொழி பேசும் மக்கள் வாழும் வடக்கு- கிழக்கு பிரதேசத்தை தமிழர்களின் தாயகமாக 1956 இல் ஏற்றுக்கொண்டிருந்தால் இவ்வளவு பிரச்சினைகளும் ஏற்பட்டிருக்காது. ஆட்சிக்கு வருவதற்காக S.W.R.D.பண்டாரநாயக்க அதை செய்திருந்தாலும் ஒரு சில வருடங்களில் Reasonable use of Tamil என்ற சட்டத்தைக் கொண்டுவந்திருந்தார். இருநூற்றிற்கு மேற்பட்ட புத்த பிக்குகள் தான் அன்று அதனை கிழித்தெறிந்து நிறுத்தியிருந்தார்கள். அதே போன்ற பல சம்பவங்கள் பின்னரும் நடைபெற்றுவந்தபடியால் பிரச்சினை 70 வருடமாக இழுபட்டு போகுகிறது.

அந்த அடிப்படையில் பார்ப்பதானால் அந்தந்த இடத்தில் இருக்கிற மக்கள் தம்மைத்தாமே பார்த்துக்கொள்ளக்கூடிய ஏற்பாட்டை செய்ய வேண்டியது கட்டாயம். மலை நாட்டில் இந்திய வம்சாவழித் தமிழர்கள் இருக்கிறார்கள். அவர்களுடைய கலாசாரம், மொழி மற்றும் பின்னணி ஆகியவற்றின் அடிப்படையில் அதனை அவர்கள் பாதுகாத்துக்கொள்ள வழியை ஏற்படுத்திக் கொடுக்க வேண்டும். அந்த அடிப்படையில் தான் முஸ்லிம்களுக்கு தனியான அலகொன்றை உள்ளடக்கியதாக வடக்கு- கிழக்கு மாகாணத்தை இணைக்க வேண்டும் என்று வலியுறுத்தி வருகின்றோம். இணைந்த வடக்கு- கிழக்கில் முஸ்லிம்களுக்கு ஒரு தனி அலகு கொடுக்க வேண்டும் என்பது எமது கட்சியின் நிலைப்பாடு.(7-9)

# காதை வெட்டி கையில் தருவேன் கம்மன்பிலவுக்கு மரிக்கார் சவால்

பிவிதுரு ஹெல உறுமய கட்சியின் தலைவர் உதய கம்மன்பில தேர்தலில் தனியாக போட்டியிட்டு முடியுமானால் 10 ஆயிரம் வாக்குகளைப் பெற்றுக் காட்டுமாறு ஐக்கிய தேசியக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் எஸ்.எம்.மரிக்கார் பகிரங்க சவால் விடுத்தார்.

ஐக்கிய தேசியக் கட்சியின் தலைமையகத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு ஊடகவியலாளர் ஒருவர் எழுப்பிய கேள்விக்குப் பதிலளிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

உதய கம்மன்பிலவின் கட்சிக்கு எத்தனை உறுப்பினர்கள் இருக்கின்றார்கள், அவருடைய கட்சியில் எத்தனை பாராளுமன்ற உறுப்பினர்கள் உள்ளனர்,

உதய கம்மன்பில எம்.பி. மகிந்த ராஜபக்ஷவின் பெயரை முன்னிலைப்படுத்தி அரசியலில் ஈடுபட்டு கரைசேரும் ஒருவராகவே காணப்படுகின்றார். முடியுமானால் அவர் தனியாக போட்டியிட்டு 10 ஆயிரம் வாக்குகளை எடுத்துக் காட்டட்டும். நான் எனது காதை வெட்டி கையில் தருகின்றேன் எனவும் அவர் மேலும் தெரிவித்தார். (7-9)

# தமிழர்களின் பிரச்சினைகளை தீர்க்க த.தே.கூ.நடவடிக்கை எடுக்கவில்லை

## மகிந்த ராஜபக்ஷ தெரிவிப்பு

(கொழும்பு)

அரசியல் தீர்வு தொடர்பில் ஒரு தரப்பின் கோரிக்கைகளை நிறைவேற்ற முயற்சிக்கும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் தமிழ் மக்களின் அடிப்படை பிரச்சினைகளுக்கு தீர்வு காண இதுவரையில் எவ்வித நடவடிக்கைகளையும் முன்னெடுக்கவில்லை என எதிர்க்கட்சித் தலைவர் மகிந்த ராஜபக்ஷ தெரிவித்தார்.

யாழ்ப்பாணம், மன்னார், வவுனியா, முல்லைத்தீவு மற்றும் கிளிநொச்சி உள்ளிட்ட பிரதேசங்களில் வாழும் மக்களுக்கும் எதிர்க்கட்சி தலைவர் மகிந்த ராஜபக்ஷவிற்கும் இடையிலான சந்திப்பு நேற்று முன்தினம் எதிர்க்கட்சி தலைவர் அலுவலகத்தில் இடம்பெற்றது.

வடக்கு தமிழ் மக்கள் அன்றாடம் எதிர்கொள்ளும் அத்தியாவசிய பிரச்சினைகளை எடுத்துரைக்கும் நோக்கில் இந்த சந்திப்பு இடம்பெற்றுள்ளது. இதன் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். (7-9)

# உலகச் சம்பியன் நேற்று பரிதாபம்



அயர்லாந்துக்கு எதிரான லார்ட்ஸ் டெஸ்டில் இங்கிலாந்து 23.4 ஓவர்கள் மட்டுமே தாக் குப்பிடித்து 85 ரன்னில் சுருண்டு படு மோசமான நிகழ்வை சந்தித்துள்ளது.

இங்கிலாந்து - அயர்லாந்து அணிகளுக்கு இடையிலான ஒரேயொரு போட்டி கொண்ட டெஸ்ட் தொடர் லண்டன் லார்ட்ஸ் மைதானத்தில் நேற்று தொடங்கியது. டாஸ் வென்ற் இங்கிலாந்து பேட்டிங் தேர்வு செய்தது.

கத்துக்குட்டி அணியான அயர்லாந்துக்கு எதிராக இங்கிலாந்து வீரர்கள் ரன்குவிக்கும் நோக்கத்தோடு களம் இறங்கினர். அவர்கள், நினைப்பை அடியோடு குழிதோண்டி புதைத்தனர் அயர்லாந்து பந்து வீச்சாளர்கள்.

ரோரி பர்ன்ஸ், ஜேசன் ராய் ஆகியோர் தொடக்க வீரர்களாக களம் இறங்கினர். ராய் 5 ரன்னிலும், ரோரி பர்ன்ஸ் 6 ரன்னிலும் அடுத்தடுத்து வெளியேறினர்.

**5 விக்கெட் வீழ்த்திய அயர்லாந்து வீரர் முர்டாக்**

3-வது வீரராக களம் இறங்கிய டென்லி ஓரவிற்கு தாக்குப்பிடிக்க, ஜோ ரூட் (2), பேர்ஸ்டோவ் (0), மொயீன் அலி (0), கிறிஸ் வோக்ஸ் (0) அடுத்தடுத்து நடையை கட்டினர். இதனால் இங்கிலாந்து 43 ரன்கள் எடுப்பதற்குள் 7 விக்கெட்டுக்களை இழந்து தத்தளித்தது.

டென்லி 23 ரன்களும், சாம் குர்ரான் 18 ரன்களும், ஸ்டோன் 19 ரன்களும் அடிக்க இங்கிலாந்து முதல் இன்னிங்சில் 23.4 ஓவரிலேயே 85 ரன்னில் சுருண்டது. மூன்று பேர் மட்டுமே இரட்டை இலக்க ரன்னைக் கடந்தனர்.

அயர்லாந்து அணி சார்பில் முர்டாக் 5 விக்கெட்டும், அடைர் 3 விக்கெட்டும், ராங்கின் 2 விக்கெட்டும் வீழ்த்தினர்.

# இவர்களுக்கு இடமில்லையா? சவுரவ் கங்குலி ஆச்சரியம்!

வெஸ்ட் இண்டீஸ் தொடருக்கான இந்திய ஒருநாள் கிரிக்கெட் அணியில் இருவருக்கும் இடம் கிடைக்காதது ஆச்சர்யம் அளிக்கிறது என்று சவுரவ் கங்குலி தெரிவித்துள்ளார்.

வெஸ்ட் இண்டீஸ் தொடருக்கான இந்திய அணி கடந்த ஞாயிற்றுக்கிழமை அறிவிக்கப்பட்டது. ஒருநாள் கிரிக்கெட் போட்டியில் இளம் வீரரான சுப்மான் கில்லுக்கு இடம் கிடைக்கும் என்று எதிர்பார்க்கப்பட்டது. அதே போல் டெஸ்ட் அணியில் இடம் பிடித்துள்ள ரகானேவுக்கும் இடம் கிடைக்கவில்லை.

இருவருக்கும் ஒருநாள் கிரிக்கெட் போட்டிக்கான இந்திய அணியில் இடம் கிடைக்காதது ஆச்சர்யம் அளிக்கிறது என்று சவுரவ் கங்குலி தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து கங்குலி கூறுகையில் "ஒரு வீரரை அனைத்து வகை கிரிக்கெட்டிற்கும் தேர்வு செய்ய வேண்டும். அப்போதுதான் ரிதம் மற்றும் நம்பிக்கை அவர்களுக்கு கிடைக்கும், சில வீரர்கள் மட்டுமே எல்லா வகை கிரிக்கெட்டிலும் விளையாடுகிறார்கள். சிறந்த அணிகள் சீராக விளையாடும் வீரர்களை கொண்டுள்ளது. நாட்டிற்காகவும், சீராக விளையாடுவதற்காகவும் சிறந்த வீரர்களை தேர்வு செய்ய வேண்டும்.

**ரகானே சுப்மான் கில்**

அனைத்து வகை கிரிக்கெட் போட்டியிலும் பெரும்பாலான வீரர்கள் இடம்பிடித்துள்ள நிலையில், சுப்மான் கில் அணியில் இல்லாததும், ரகேனே ஒருநாள் போட்டிக்கான அணியில் இல்லாததும் ஆச்சர்யம் அளிக்கிறது" என்றார்.




# ஜான்டி ரோட்ஸ் இந்தியாவின் பயிற்சியாளராக விருப்பம்

தென் ஆபிரிக்காவின் பீல்டிங் ஜாம்பவானான ஜான்டி ரோட்ஸ் இந்திய சீனியர் அணியின் பீல்டிங் பயிற்சியாளர் பதவிக்கு விண்ணப்பித்துள்ளார்.

இந்திய சீனியர் கிரிக்கெட் அணியின் தலைமை பயிற்சியாளர், பேட்டிங் பயிற்சியாளர், பந்து வீச்சு பயிற்சியாளர் ஆகியோரின் பதவிக்காலம் உலகக் கிண்ணத்துடன் முடிவடைந்தது. உடனடியாக வெஸ்ட் இண்டீஸ் தொடர் தொடங்க இருப்பதால் மூன்று பேரின் பதவிக்காலம் மேலும் 45 நாட்களுக்கு நீடிக்கப்பட்டுள்ளது.

உலகக்கிண்ண கிரிக்கெட் தொடர் முடிந்தவுடன் மூன்று பதவிகளுக்கும் விண்ணப்பிக்க விரும்புவர்களின் விண்ணப்பங்கள் வரவேற்கப்படும் என்று தெரிவித்த பிசிசிஐ, இதற்கான விண்ணப்பத்தை அதிகாரப்பூர்வ இணைய தளத்தில் வெளியிட்டது.

யார் யார் விண்ணப்பித்திருக்கிறார்கள் என்ற செய்தி வெளிவராத நிலையில் இரண்டு நாட்களுக்கு முன், இலங்கை அணியின் முன்னாள் கேப்டனும், தலைசிறந்த பேட்ஸ்மேனும் ஆன ஜெயவர்தன தலைமை பயிற்சியாளர் பதவிக்கு விண்ணப்பிக்க இருக்கிறார் என்ற செய்தி வெளிவந்த வண்ணம் உள்ளன.

**ஜான்டி ரோட்ஸ**

இந்நிலையில் தென் ஆபிரிக்காவின் முன்னாள் வீரர் ஜான்டி ரோட்ஸ் பீல்டிங் பயிற்சியாளர் பதவிக்கு விண்ணப்பித்துள்ளதாக தெரியவந்துள்ளது. விருப்ப மனுவுக்கான கடைசி நாள் ஜூலை 30-ந்தேதியாகும்.

ஜான்டி ரோட்ஸ் 2017-ம் ஆண்டு வரை ஐபிஎல் மும்பை இந்தியன்ஸ் அணியின் பீல்டிங் பயிற்சியாளராக இருந்துள்ளார். உலகின் தலைசிறந்த பீல்டர் என்று போற்றப்படுபவர் ஜான்டி ரோட்ஸ் என்பது குறிப்பிடத்தக்கது.



# அவமானப்படுத்தி விட்டார்கள் வசிம் அக்ரம் வேதனை

பாகிஸ்தான் அணியின் முன்னாள் வேகப்பந்து வீச்சு ஜாம்பவானான வாசிம் அக்ரம் மான்செஸ்டர் விமான நிலைய அதிகாரிகளால் தரக்குறைவாக நடத்தப்பட்டுள்ளார்.

நீரிழிவு நோயால் அவதிப்பட்டு வரும் வாசிம் அக்ரம், 1997-ம் ஆண்டு முதல் தற்போது வுரை இன்சுலின் ஊசியைப் பயன்படுத்தி வருகிறார். எங்கு சென்றாலும் இன்சுலின் ஊசிகள் அடங்கிய பையை எடுத்துச் செல்ல அவர் தவறுவதில்லை.

அண்மையில் நடந்து முடிந்த உலகக்கிண்ண கிரிக்கெட் தொடரின் வர்ணனையாளர்களின் குழுவிலும் அவர் இடம்பெற்று இருந்தார். இந்த நிலையில், கிரிக்கெட் தொடர் முடிந்து நாடு திரும்புகையில் மான்செஸ்டர் விமான நிலையத்தில் தன்னை அதிகாரிகள் அவமானப்படுத்தி விட்டதாக ட்விட்டர் பக்கத்தில் அவர் பதிவிட்டுள்ளார்.



மேலும், "இன்சுலின் பை தொடர்பாக அதிகாரிகள் நாகரிகமற்ற முறையில் கேள்விகள் எழுப்பியதாகவும், இன்சுலின் ஊசிகளை சிறிய குளிர் பெட்டிகளில் இருந்து வெளியே எடுத்து பிளாஸ்டிக் பையில் வைக்குமாறு கண்டித்ததாகவும் குறிப்பிட்டுள்ளார்.

பாதுகாப்பு முன்னெச்சரிக்கை நடவடிக்கை என்பதை தாம் புரிந்து கொள்வதாகவும், இருப்பினும் அவமானப்படுத்தும் வகையிலா செயல்படுவது? என்றும் கேள்வி எழுப்பியுள்ளார். இதற்கு முன் இப்படியொரு சங்கடத்தையும், அவமானத்தையும் சந்தித்ததில்லை" என தனது வேதனையை வெளிப்படுத்தியுள்ளார்.

# ஒரு பதிவுக்கு 19,600 டொலர்

இன்ஸ்டாகிராமில் ஸ்பான்சர் பதிவுகள் மூலம் பணம் ஈட்டும் விளையாட்டு வீரர்கள் வரிசையில் ஒரே ஒரு கிரிக்கெட் வீரராக இந்திய அணியின் விராட் கோலி இடம்பெற்றுள்ளார்.

இன்ஸ்டாகிராம் தளத்தில் ஸ்பான்சர்களின் பதிவுகளை பிரபலங்கள் தங்களின் கணக்குகளிலிருந்து பதிவிடுவதற்கு தொகை வசூலிப்பது வழக்கம்.

அந்தவகையில் அவர்கள் வசூலிக்கும் தொகை கணக்கின்படி, இன்ஸ்டாகிராமில் பணக்காரர்கள் யார் என்று ஆய்வு மேற்கொள்ளப்பட்டது.

இந்த ஆய்வின்படி விளையாட்டு வீரர்களில் ஸ்பான்சர் பதிவுகளுக்கு யார் அதிக பணம் சம்பாதிக்கின்றனர் என்ற பட்டியல் வெளியிடப்பட்டது.

இந்தப் பட்டியலில் உலகளவில் முதல் 10 இடங்களில் ஒரே ஒரு கிரிக்கெட் வீரர் மட்டுமே இடம்பெற்றுள்ளார்.

அந்த வீரர் இந்திய கிரிக்கெட் அணித் தலைவர் விராட் கோஹ்லி தான். விராட் கோஹ்லியின் இன்ஸ்டாகிராம் பக்கத்தை 38 கோடி பேர் பின் தொடர்ந்து வருகின்றனர்.

தன் இன்ஸ்டாகிராம் பக்கத்தில் ஸ்பான்சர் தொடர்பாக ஒரு பதிவுக்கு விராட் கோஹ்லி 19,600 டொலர் வசூலிக்கிறார்.

உலகளவில் இவ்வாறு வருவாய் ஈட்டும் வீரர்கள் பட்டியலில் விராட் கோஹ்லி ஒன்பதாவது இடத்தில் உள்ளார்.

இந்தப் பட்டியலில் முதல் இடத்தில் போர்த்துகலின் கால்பந்து நட்சத்திரம் கிறிஸ்டியானோ ரொனால்டோ உள்ளார்.

# சரமாரியாக அடிவாங்கி உயிரிழந்த குத்துச்சண்டை வீரர்

அமெரிக்காவில் நடந்த குத்துச்சண்டை போட்டியின் போது சரமாரியாக அடி வாங்கி மருத்துவமனையில் உயிரிழந்த ரஷ்ய் குத்துச்சண்டை வீரரின் மனைவி போட்டுள்ள சபதம் அனைவரையும் அதிர்ச்சிக்குள்ளாகியுள்ளது.

மேரிலாந்தின், ஆக்சன் ஹில்லில் உள்ள எம்ஜிஎம் தேசிய துறைமுகத்தில் உள்ள தியேட்டரில் வெள்ளிக்கிழமை நடந்த லைட்-வெல்டர்வெயிட் குத்துச்சண்டை போட்டியில் 27 வயதான புவேர்ட்டோ ரிக்கன் வீரர் சுப்ரியல் மத்தியாஸ், 28 வயதான ரஷ்ய வீரர் மாக்சிம் தாதாஷேவ் மோதினர்.

போட்டியின் 11வது சுற்றில் ரிக்கன், தாதாஷேவின் தலையில் சரமாரியாக தாக்கினார். இதனையடுத்து, தாதாஷேவ் போட்டியிலிருந்து விலகுவதாக பயிற்சியாளர் அறிவிக்க, ரிக்கன் வெற்றிப்பெற்றார். பலத்த காயமடைந்த தாதாஷேவ், உடனே மருத்துவமனைக்கு கொண்டு செல்லப்பட்டார். அங்கு அவருக்கு தீவிர சிகிச்சை அளிக்கப்பட்டு வந்த நிலையில் நேற்று முன்தினம் உயிரிழந்தார்.

மாக்சின் தாதாஷேவ் மறைவுக்கு குத்துச்சண்டை வீரர்கள் அஞ்சலி செலுத்தி வரும் நிலையில், தாதாஷேவின் மனைவி வெளியிட்ட அறிக்கை அனைவரையும் அதிர வைத்துள்ளது.

தாதாஷேவின் மனைவி கூறியதாவது, தங்கள் மகன் தனது அப்பாவைப் போலவே வளர்க்கப்படுவான் என்பதை நான் உறுதி செய்கிறேன். என் கணவர் மாக்சிம் தாதாஷேவ் காலமானதை நான் மிகுந்த சோகத்துடன் உறுதி செய்கிறேன்.

அவர் மிகவும் கனிவான நபர், கடைசி வரை போராடினார். எங்கள் மகன் தொடர்ந்து தந்தையைப் போன்ற ஒரு பெரிய மனிதனாக வளர்க்கப்படுவார் என கூறியுள்ளார்.

# ஐ.தே.கவின் நகர்வுகள் முக்கியமானவை மைத்திரி-மகிந்த சந்தித்து தீர்வுகாண வேண்டும்

## சுதந்திரக்கட்சி அழுத்தம்

(கொழும்பு)

பரந்துபட்ட கூட்டணியை அமைக்காது வேட்பாளரை தெரிவு செய்வதென்பது சாத்தியமற்ற விடயமாகும். எனவே ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன மற்றும் எதிர்க்கட்சித் தலைவர் மகிந்த ராஜபக்ஷ உள்ளிட்ட தலைவர்கள் விரைவில் கலந்துரையாடி தீர்மானத்திற்கு வர வேண்டும் என சுதந்திரக் கட்சி தெரிவித்துள்ளது.

இந்த விடயத்தில் ஐக்கிய தேசியக் கட்சியின் நகர்வுகள் முக்கியமானவையாகும் எனவும் அக்கட்சி குறிப்பிட்டுள்ளது.

ஸ்ரீலங்கா சுதந்திர கட்சியின் தலைமையகத்தில் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை இடம்பெற்ற ஊடக சந்திப்பிலேயே மேற்கண்டவாறு தெரிவிக்கப்பட்டது.

இதன்போது கட்சியின் பொதுச் செயலாளர் பாராளுமன்ற உறுப்பினர் தயாசிறி ஜெயசேகர தெரிவிக்கையில்.

நிலையான கொள்கையுடைய அரசாங்கத்தை நோக்கி நகர வேண்டும். தனி நபர்கள் மற்றும் அரசியல் கட்சிகளினால் நாட்டின் பிரச்சினைகள் தீரப்போவதில்லை. எனவே நாட்டிற்கு நிலையான கொள்கை ஒன்று அத்தியாவசியமாகின்றது. மாறாத கொள்கையை நோக்கிய அரசியல் பயணத்தை நாட்டில் ஏற்படுத்தும் நோக்குடன் ஸ்ரீலங்கா சுதந்திர கட்சி செயற்படும்.



இல்லையென்றால் இன்னும் நூறு ஆண்டுகள் ஆனாலும் நாடு பாதாளத்திலேயே இருக்கும். கட்சி பேதங்களை மறந்து நபர்களுக்கு முக்கியத்தும் கொடுக்காது அனைவரும் ஒன்றிணைந்து செயற்பட முன்வர வேண்டும் என்பதே சுதந்திரக் கட்சியின் நிலைப்பாடாகும்.

மத்திய செயற்குழுவிலும் நிலையான கொள்கைத் திட்டம் குறித்து பேசப்பட உள்ளது. அதற்கமைவாகவே எதிர்கால செயற்பாடுகள் காணப்படும் அதேபோன்று எதிர்கால தேர்தல்களை மையப்படுத்தி கூட்டணிகள் அமைக்கப்படும் பட்சத்தில் இந்த கொள்கை திட்டத்துடன் இணக்கப்பாட்டை ஏற்றுக்கொள்வோம். வலுவான கூட்டணியொன்று அமைக்காது ஜனாதிபதி வேட்பாளர் குறித்து பேசுவதில் பலனில்லை.

1994 பொடி ஹப்புவாமியின் கட்சியுடன் தான் முதற் தடவையாக சுதந்திர கட்சி கூட்டணி அமைத்தது. அன்று முதல் இன்று வரை சுதந்திர கட்சி பல கட்சிகளை இணைத்து கூட்டணியாகவே தேர்தல்களில் போட்டியிடுகின்றது. கூட்டணி அமைக்க முன்னர் வேட்பாளரை எந்வொரு சந்தர்ப்பத்திலும் தெரிவு செய்யப்படவில்லை.

எனவே ஜனாதிப்தி மைத்திரிபால சிறிசேன மற்றும் எதிர்க்கட்சி தலைவர் மகிந்த ராஜபக்ஷ உள்ளிட்ட தினேஷ்குணவர்தண போன்ற கட்சி தலைவர்களுடன் ஒன்றிணைந்து கலந்துரையாடி எவ்வாறு வலுவான கூட்டணியை உருவாக்குவது என்பதை தீர்மானிக்க வேண்டும். அதன் பின்னரே வேட்பாளரை தெரிவு செய்ய வேண்டும். இதற்கு அப்பால் சென்று செயற்பட முடியாது. எனவே தலைவரை அறிவிக்க அவசரப்பட தேவையில்லை. ஒற்றுமையுடன் முதலில் கூட்டணியை உருவாக்குவோம்.

ஐக்கிய தேசிய கட்சி இன்னும் வேட்பாளரை அறிவிக்கவில்லை. மாறாக எதிர்வரும் 5 ஆம் திகதி கூட்டணியை அமைக்கப் போவதாக அறிவித்துள்ளது. இவ்வாறே செயற்பட வேண்டும். ஜனாதிபதி சம்பந்தப்பட்ட தரப்புகளுடன் விரைவில் பேச்சுவார்த்தையை முன்னெடுப்பார் என நம்புகின்றேன் எனத் தெரிவித்தார். (ஐ)

## கிணறு ஒன்றில் இருந்து ஒருவரின் சடலம் மீட்பு

(ஹோமாகம)

ஹோமாகம நகரில் உள்ள விடுதி ஒன்றின் பின்னால் உள்ள கிணறு ஒன்றில் இருந்து நபர் ஒருவரின் சடலம் மீட்கப்பட்டுள்ளது. நேற்றுக்காலை குறித்த சடலம் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. பன்னல பகுதியை சேர்ந்த 42 வயதுடைய அப்துல்லா என்பவரே இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

குறித்த நபர் கிணற்றில் விழுந்து உயிரிழந்தாரா? அல்லது கொலை செய்யப்பட்டாரா? என்பது தொடர்பில் சந்தேகம் நிலவுவதாக பொலிஸார் தெரிவிக்கின்றனர். சம்பவம் தொடர்பில் ஹோமாகம பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ஐ)

## மதுபோதையில் சாரத்தியம்; இதுவரை 5042 பேர் கைது

(கொழும்பு)

நேற்றுமுதல் இன்று வரையான காலப்பகுதியில் மதுபோதையில் வாகனம் செலுத்திய 201 சாரதிகள் கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸ் தலைமையகம் தெரிவித்துள்ளது. மதுபோதையுடன் வாகனம் செலுத்தும் சார்திகளை கைது செய்வதற்கான விசேட நடவடிக்கை கடந்த 5 ஆம் திகதி ஆரம்பமானது. அதன்படி குறித்த தினத்திலிருந்து இதுவரை மதுபோதையில் வாகனம் செலுத்திய 5042 வாகன சாரதிகள் கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸ் தலைமையகம் தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஐ)


## வீட்டுக்கிருத்திய அழைப்பு

அமரர் **வைத்தீஸ்வரன் குணாளன்**



கடந்த 23.06.2019 ஞாயிற்றுக்கிழமை சிவபதம் அடைந்த எமது குடும்பத் தலைவர் அமரர் **வைத்தீஸ்வரன் குணாளன்** அவர்களின் சிவபதப்பேறு குறித்த வீட்டுக்கிருத்திய கிரியைகள் இன்று வியாழக்கிழமை மதியம் 12 மணியளவில் பன்னாலை வரத்தலம் கற்பகவிநாயகர் ஆலய மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து அன்னாரின் ஆத்ம சாந்தி வழிபாட்டிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்து கொள்ளும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

தயவு செய்து இந்த அழைப்பையே தனிப்பட்ட அழைப்பாக மனம் உவந்து ஏற்றுக் கொண்டு. அன்னாரின் வீட்டுக்கிருத்திய கிரியையிலும் அதனைத் தொடர்ந்து இடம் பெறும் மதியபோசனத்திலும் பங்கேற்குமாறு அன்புரிமையுடன் கேட்டு நிற்கின்றோம்.

வன்னியசிங்கம் வீதி,
தெல்லிப்பழை மேற்கு.

(C-7089)

குடும்பத்தினர்
077 749 9697

பழைமை வாய்ந்த
**ஆதி சக்தி வாய்ந்த மலையாள மந்திரம்**



- ஆண், பெண் வசியம் (கவரும் வசியம், ராஜ வசியம், பிறப்பு வசியம்)
- பிரிந்து சென்றவர்களை மூன்று பொழுதில் சேரும்படி செய்ய முடியும்
- கணவன்-மனைவிக்குள் பிரச்சினையா?
- காணி விற்பனையில் பிரச்சினையா?
- வியாபார முன்னேற்றம்
- வீட்டில் ஒற்றுமை உண்டாக
- பெற்றோர் ஆசீர்வாதம் பெற

இரகசியம் பேணப்படும்

ஒருமுறை தொடர்பு கொண்டு பாருங்கள் வெற்றி நிச்சயம் சகல காரியங்களும் வசியமுறைப்படி செய்து தரப்படும். (பின் விளைவுகள் எதுவும் ஏற்படாது) மூன்று பொழுதில் பலன்.

(உங்களால் நேரில் வர முடியாவிட்டால் பதிவுத் தபால் மூலம் செய்து கொள்ளலாம்)

றெங்கசாமி
கண்டி, அம்பத்தன்ன -077 939 5222
Viber:076 466 4153.

வெளிநாட்டில் உள்ளவர்களும் தொடர்பு கொள்ளலாம்

வலம்புரி விளம்பரத் தொடர்புகளுக்கு
021 221 7603,
021 567 1532


## இராசி பலன்

**மீனம்:** எதிர்பாராத தனவரவுகள் வந்து சேரலாம், தொழிலை விரிவுபடுத்தும் எண்ணம் உருவாகும், சுபகாரியப் பேச்சுக்களில் முன்னேற்றம் காண்பீர்கள்.

**மேடம்:** உடல் நலனில் அக்கறை காட்டுவீர்கள், கனவு பலிதமுண்டு, எதிர்பார்க்காமல் செய்த வேலையொன்றில் கணிசமான ஆதாயம் கிடைக்கலாம்.

**இடபம்:** சேமிப்பில் சிறிது கரையலாம், குதூகலம் தரும் பயணங்கள் இடம்பெறலாம், சயன சுகக் குறைவுகள் ஏற்படலாம், விருப்பங்கள் நிறைவேற வழிபாட்டை மேற்கொள்ள வேண்டிய நாள்.

**மிதுனம்:** இயல்பான வாழ்க்கையில் இன்பங்கள் கூடும் நாள், வெளியூர்த் தொடர்புகள் அனுகூலம் தரும், வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும்.

**கும்பம்:** பொல்லாதவர்கள் உங்களை விட்டு விலகுவர், குடும்ப பொறுப்புக்கள் கூடும் நாள், செய்தொழிலில் மேன்மையும் உயரும் கிடைக்கும், போசன சுகமுண்டு.

| | | | |
|---|---|---|---|
| | சந் | | ராகு, புத |
| | இராசி பலன்<br>கிரகநிலை<br>சந்திராஷ்டமம்<br>சித்திரை-சுவாதி | | சூரி, சுக், செவ் |
| | | | |
| சனி, கேது | குரு | | |

25.07.2019
ஆடி 09, வியாழக்கிழமை
சூரிய உதயம் காலை 5.58 மணிக்கு
அட்டமி பிற்பகல் 4.07 மணிவரை
அச்சுவினி பிற்பகல் 3.20 மணிவரை
சுபநேரம் 7.32-9.02 மணிவரை
இராகுகாலம் 1.32-3.02 மணிவரை
அட்டமி-நவமி

வளவன்

**கடகம்:** வாழ்க்கைத்தரம் உயர வழிவகை செய்வீர்கள், உங்களின் யோசனைக்கு நல்ல பாராட்டுக்கள் கிடைக்கும், குடும்பத்தில் மகிழ்ச்சி கூடும் நாள்.

**மகரம்:** பொது வாழ்வில் மதிப்பும் மரியாதையும் உயரும், பிறருக்காக எடுத்த முயற்சிகள் வெற்றி தரும், அதிர்ஷ்ட வாய்ப்புக்கள் வந்து சேரலாம், சுப செய்திகள் வந்து சேரலாம்.

**சிம்மம்:** ஆரோக்கியத்தில் முன்னேற்றம் காண்பீர்கள், வருங்கால நலன்கருதி புதிய திட்டங்கள் தீட்டுவீர்கள், பேச்சில் இனிமை ஏற்படும், பயணங்களால் பலனுண்டு.

**தனுசு:** நெடுநாளைய கனவுகள் நனவாகலாம், இல்லம் தேடி இனிய செய்திகள் வந்து சேரலாம், பொதுப்பணிகளில் ஆர்வம் காட்டுவீர்கள், வியாபார விருத்தியுண்டு.

**விருச்சிகம்:** எண்ணங்கள் எளிதில் நிறைவேறும் நாள், மனக் குழப்பம் அகலும், பயணங்களால் பலனுண்டு, செய்தொழிலில் சிறப்புக்கள் வந்து சேரலாம்.

**துலாம்:** வெளியூர் பயணமொன்றால் ஆதாயமுண்டு, குடும்பத்தினரிடையே அந்நியோன்னியம் கூடும், புதிய பொருட்களை வாங்கும் வாய்ப்புண்டு, போசன சுகமுண்டு.

**கன்னி:** குடும்ப பெரியவர்கள் உங்களின் செயற்பாடுகளில் குறை கண்டு கூறலாம், வாகன பழுதுச் செலவுகள் ஏற்படலாம், கவலைகள் தீர கடவுளை வழிபட வேண்டிய நாள்.

# நவாலியூர் சோமசுந்தரப்புலவர் நினைவரங்கம்







(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத் தமிழ்ச்சங்கம் முன்னெடுத்த நவாலியூர் சோம சுந்தரப் புலவர் நினைவரங்க மும் ஆடிப்பிறப்பு விழாவும் கட ந்த 16 ஆம் திகதி நவாலி மகா வித்தியாலயத்தில் தமிழ்ச் சங்க உறுப்பினர் ஜீ.சஜீவன் தலை மையில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் பேராசிரியர் அ.சண்முகதாஸ், செந்தமிழ்ச் சொல்லருவி ச.லலீசன், செஞ் சொற்செல்வர் கலாநிதி ஆறு. திருமுருகன் ஆகியோர் கலந்து கொண்டனர். (5)

# வீதிகள் புனரமைப்பு ஆரம்பம்

(கொடிகாமம்)

யாழ்.தென்மராட்சி வரணி பிரதேசத்திற்கு கம்பரெலிய அபி விருத்தி யுத்தம் என்ற திட்ட நிதி மூலத்திலிருந்து பாடசாலைகள் மற்றும் வீதிகள் போன்றவற் றிற்கு நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு அபிவிருத்தி வேலைகள் இடம் பெற்று வருகின்றன.

வரணி நாவற்காடு கரம்பை அ.மி.த.க. பாடசாலையின் மைதா னத்துக்கான மதில் அமைப்ப தற்கு 0.3 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கப்பட்டு வேலைகள் நடை பெற்று வருவதாக அறிய முடிகி றது.

அத்துடன் வரணி பிரதேசத் தின் பல வீதிகளும் நிதி ஒதுக் ப்பட்டு முதற்கட்டமாக புனரமை ப்பு வேலைகள் நடைபெறுகின் றன.

அந்தவகையில் வரணி திக் கில் வீதி, கரம்பைக்குறிச்சி சமு ர்த்தி வங்கி வீதி, வரணி இய ற்றாலை தும்புருவில் வீதி, நாவ ற்காடு குடலைபீறி வீதி, நாவற் காடு இரகணி வீதி, குடமியன் ஆதிசிவன் வீதி ஆகிய வீதிக ளின் புனரமைப்பு வேலைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. (5-114)

# பண்பாட்டுப் பெருவிழா

(யாழ்ப்பாணம்)

வடமாகாண பண்பாட்டலு வல்கள் திணைக்களம், கலாசார அலுவல்கள் திணைக்களம், ஆகியவற்றின் அனுசரணை யுடன் யாழ்.பிரதேச செயலகமும் பிரதேச கலாசாரப் பேரவையும் அதிகாரசபையும் இணைந்து நடத்தும் "பண்பாட்டுப் பெரு விழா-2019" நாளை 26 ஆம் திகதி வெள்ளிக்கிழமை பிற்பகல் 2.30 மணிக்கு யா/ஒஸ்மானியா கல்லூரியில் யாழ்.பிரதேச செய லாளரும் கலாசாரப் பேரவை அதிகாரசபைத் தலைவருமான சா.சுதர்சன் தலைமையில் நடை பெறும்.

இந் நிகழ்வில் பிரதம விருந்தி னராக யாழ். மாவட்ட செயலாளர் நா.வேதநாயகன், சிறப்பு விருந் தினர்களாக வடமாகாண பண் பாட்டலுவல்கள் திணைக்கள உத விப் பணிப்பாளர் திருமதி.சுஜீவா சிவதாஸ், யா/ஒஸ்மானியாக் கல் லூரி அதிபர் ஜனாப் எம்.சேகுரா ஜீது, யா/கதீஜா பெண்கள் கல் லூரி அதிபர் ஜனபா ஏ.சி. ஜான்சி, கௌரவ விருந்தினர்களாக யாழ் ப்பாணம் ஊடகவியலாளரும் எழு த்தாளருமான கலாபூஷணம் மீராலெவ்வை லாபீர் ஆகியோர் கலந்து கொள்வர். இந் நிகழ்வில் யாழ்பாடி நூல் வெளியீடும் இடம்பெ றும். இந்நூலின் முதற்பிரதியை எழுத்தாளர் எம்.எவ். இக்பால் (ஜே.பி) பெற்றுக்கொள்வார். (5)

# விருது வழங்கல்

கொமர்ஷல் வங்கியின் அரு ணலு விருது வழங்கும் நிகழ்வு நாளை 26 ஆம் திகதி வெள் ளிக்கிழமை பிற்பகல் 4 மணிக்கு கொமர்ஷல் வங்கி சுன்னாகம் கிளையில் இடம்பெறும். (5)

# இலவச பரிசோதனை முகாம்

(யாழ்ப்பாணம்)

கண் மற்றும் காதுக்கான இலவச பரிசோதனைச் சேவை யும் வடமாகாண வங்கி ஓய்வு நிலை வங்கியாளர் நலன்புரிச் சங்க வருடாந்த ஒன்றுகூடல் நிகழ்வும் நாளை மறுதினம் 27 ஆம் திகதி சனிக்கிழமை காலை 9.30 மணி தொடக்கம் இல.461, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் அமைந்து ள்ள யாழ்.முற்றம் மண்டபத்தில் (ஆரியகுளம் சந்தியிலிருந்து கிழக்குப் பக்கமாக யாழ்.புகை யிரத நிலையத்திற்கு பின்புறம்) ஒன்றுகூடல் நடைபெறும்.

இந்நிகழ்வு சங்கத்தின் 25 ஆவது வருடமாக அமைய இருப் பதால் சகல சங்கங்களின் ஓய்வு நிலை வங்கியாளர்களுக்கும் பொதுமக்களுக்கும் "விஷன் கெயார் நிறுவனத்தினால் கண் மற்றும் காதுக்கான இலவச பரி சோதனையை மேற்கொள்ளவு ள்ளதாக வடமாகாண வங்கி ஓய்வு நிலை வங்கியாளர் நலன் புரிச் சங்கத் தலைவர் தெரி வித்துள்ளார். (5)

# பகிரங்க ஏலவிற்பனை

(யாழ்ப்பாணம்)

யாழ்.நீதவான் நீதிமன்ற வழக்குகளில் பறிமுதல் செய் யப்பட்ட உரிமைகோரப்படாத பொருட்கள் எதிர்வரும் 3 ஆம் திகதி சனிக்கிழமை காலை 9.30 மணிக்கு நீதிமன்ற வளா கத்தில் பகிரங்க ஏலத்தில் விற் பனை செய்யப்படவுள்ளது.

குறித்த பகிரங்க ஏலத்தில் விற்கப்படும் பொருட்கள் கொள் வனவு செய்பவர்கள் கொடுப் பனவுகளை பணமாகவே செலு த்த வேண்டும். காசோலை ஏற் றுக்கொள்ளப்படமாட்டாது. ஏல த்தில் விற்கப்படும் பொருட்களை கொள்வனவு செய்ய வருபவர்கள் தமது தேசிய அடையாள அட்டை யுடன் சமுகமளிக்கவும். அத்து டன் ஏலவிற்பனையில் பெற்றுக் கொள்ளும் பொருட்களை அன் றையதினம் உடனடியாகவே வளாகத்திலிருந்து அகற்ற வேண் டும் என யாழ்.நீதவான் நீதிம ன்ற பதிவாளர் அறிவித்துள் ளார். (5)

## சமாதான நீதவானாக சத்தியப்பிரமாணம்



(யாழ்ப்பாணம்)

ஓய்வு பெற்ற உதவித் தபால திபர் செல்லத்துரை லட்சுமி காந் தன் நேற்று யாழ்.மாவட்ட மேல் நீதிமன்ற நீதிபதி அன்னலிங்கம் பிரேம்சங்கர் முன்னிலையில் அகில இலங்கை சமாதான நீத வானாக சத்தியப்பிரமாணம் செய்து கொண்டார், கோண்டா வில் குட்செட் வீதியைச் சேர்ந்த இவர் கோண்டாவில் வளர்பிறை சனசமூக நிலையத் தலைவரும் கொக்குவில் நந்தாவில் கற்புல த்து மனோன்மணி அம்பாள் தேவஸ்தான நிர்வாக சபை உறுப் பினருமாவார். (5)

# தவறணை முகாமையாளரை வாளால் வெட்டி பணம் பறிப்பு

(சாவகச்சேரி)

கொடிகாமம் -மந்துவில் பகுதி யில் உள்ள கள்ளுத் தவறணை ஒன்றில் முகாமையாளராகப் பணியாற்றும் நபரை வாளால் வெட்டி அவரிடம் இருந்த பணத் தைப் பறித்த சம்பவம் ஒன்று நேற்று முன்தினம் செவ்வாய்க் கிழமை இரவு 7 மணியளவில் மந்துவில் பகுதியில் இடம்பெற்று ள்ளது.

கள்ளுத் தவறணையை பூட்டி விட்டு வீடு திரும்பும் வேளையில் மந்துவில் தெருவோரம் பிள்ளை யார் கோவிலடியில் வைத்து வழி மறித்த நால்வர் முகாமையா ளரை வாளால் வெட்டிக் காயப் படுத்தி விட்டு அவரிடம் இருந்த 38,000 ரூபாய் பணத்தினை யும் அபகரித்துக்கொண்டு தப்பித் துச் சென்றுள்ளதாகத் தெரிவிக்க ப்படுகிறது.

கொடிகாமம் தவசிக்குளம் பகுதியைச் சேர்ந்த 48 வயது கள்ளுத் தவறணை முகாமையா ளரே காயமடைந்த நிலையில் சாவகச்சேரி ஆதார வைத்தியசா லையில் சிகிச்சைக்காக அனும திக்கப்பட்டுள்ளார்.

மேலதிக விசாரணைகளை கொடிகாமம் பொலிஸார் முன்னெ டுத்து வருகின்றனர். (5-30-114)

## அலங்கார உற்சவம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் கோட்டை ஸ்ரீ முனீஸ்வரன் தேவஸ்தான மண வாளக் கோல அலங்கார உற்ச வத்தின் வேட்டைத் திருவிழா நீண் டகாலமாக நடைபெற வில்லை. மீண்டும் இவ் வருடம் இடம் பெற வுள்ளது.

இவ் வேட்டைத்திருவிழாவா னது இன்று 25 ஆம் திகதி வியா ழக்கிழமை பிற்பகல் 4.30 மணி யளவில் ஆலய முன்றலில் இடம் பெறும் எனத் தெரிவிக்கப்பட்டுள் ளது. (5)




## மீள்வாழ்வு சிகிச்சை நிலையம் திறப்பு

குவைத் நாட்டு மக்களின் நன்கொடையில் யாழ்.போதனா வைத்தியசாலையில் நிர்மாணிக் கப்பட்ட குவைத் செம்பிறை மீள் வாழ்வு சிகிச்சை நிலையம் (KUWAIT RED CRESCENT REHABILITATION CENTRE) சுகாதார, போசணை மற்றும் சுதேச வைத் திய அமைச்சர் வைத்திய கலா நிதி ராஜித சேனாரட்ன, குவைத் செம்பிறை சங்கத் தலைவர் வைத் திய கலாநிதி ஹிலால் முசேட் அல்சேயம், இலங்கைக்கான குவைத் நாட்டுத் தூதுவர் கலாவ்(ப்) பூ தாஃபியர் ஆகியோரது பங்களி ப்புடன் இன்று முற்பகல் 10 மணி க்கு திறந்து வைக்கப்படும். (5)





**சாவகச்சேரி பொலிஸ் நிலையத்தின் வருட இறுதி அரை ஆண்டிற்கான பரிசோதனை நிகழ்வுகள் கடந்த திங்கட்கிழமை காலை இடம்பெற்றன. சாவகச்சேரி பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி கே.எம்.ஏ.கே. கோனார தலைமையில் இடம்பெற்ற இந் நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ்.மாவட்ட உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் நிகால் தல்துவ கலந்து கொண்டு பரிசோதனைகளை மேற்கொண்டார். சாவகச்சேரி பொலிஸ் நிலைய உத்தியோகத்தர்களின் அணிவகுப்பு, பொலிஸ் உத்தியோகத்தர்கள் பரிசோதனை மற்றும் வாகனப் பரிசோதனை ஆகிய நிகழ்வுகள் இடம்பெற்றன.**

# புதிய அரசியல் பாதையின் திறவுகோலாக இம்முறை ஜனாதிபதித் தேர்தல் இருக்கும்

## சமந்த வித்யாரத்ன நம்பிக்கை

(கொழும்பு)

புதிய அரசியல் பாதை ஒன்றை திறந்து வைக்கும் தேர்தலாக இம்முறை ஜனாதிபதித் தேர்தல் இருக்கும் என மக்கள் விடுதலை முன்னணியின் ஊவா மாகாண சபை உறுப்பினர் சமந்த வித்யாரத்ன தெரிவித்துள்ளார்.

மகியங்கன பகுதியில் நேற்றும் முன்தினம் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அத்துடன் இம்முறை ஜனாதிபதித் தேர்தலுக்கு மக்கள் விடுதலை முன்னணி மற்றும் ஏனைய சில குழுக்கள் இணைந்து, பொது வேட்பாளர் ஒருவரை களமிறக்க போவதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

கடந்த ஜனாதிபதித் தேர்தலில் சிறிய அளவு வாக்கு வித்தியாசத்திலேயே வெற்றி பெற்றதாகவும் இம்முறை எந்தவொரு கட்சியி



னாலும் வெற்றிபெற முடியாது எனவும் அவர் தெரிவித்துள்ளார். (ஐ)

## ரயிலுடன் ஜீப் மோதி மூவர் படுகாயம்



ஹபரனை- பளுகஸ்வெவ, கல்கடவல பிரதேசத்தில் ஜீப் ஒன்று ரயிலுடன் மோதியதில், வைத்தியர் ஒருவர் உள்ளிட்ட மூவர் படுகாயமடைந்துள்ளனரென ஹபரனை பொலிஸார் தெரிவித்துள்ளனர். பாதுகாப்பற்ற ரயில் கடவை ஊடாக ஜீப் வண்டி பயணித்த போதே இந்த விபத்து இடம்பெற்றுள்ளது. (ஐ)

# ரவியின் அமைச்சரவைப் பத்திரத்திற்கு மங்கள சமரவீர கடும் எதிர்ப்பு





(கொழும்பு)

மின்சக்தி, சக்தி வலு மற்றும் வர்த்தக அபிவிருத்தி அமைச்சை இடமாற்றம் செய்வதற்கு திறைசேரியிடமிருந்து 364 மில்லியன் ரூபாவை பெற்றுத் தருமாறு அமைச்சர் ரவி கருணாநாயக்க அமைச்சரவையில் முன்வைத்த அமைச்சரவைப் பத்திரத்திற்கு நிதியமைச்சர் மங்கள சமரவீர கடும் எதிர்ப்பினை வெளியிட்டுள்ளார்.

இதற்கு முன்னர் இடம்பெற்ற அமைச்சரவைக் கூட்டத்தின் போது ரவி கருணாநாயக்க இந்த விடயத்தை அமைச்சின் கவனத்திற்கொண்டு வந்தபோதும் மங்கள சமரவீர அதன்போதும் எதிர்ப்பினை வெளியிட்டிருந்தார்.

இந் நிலையில் நேற்று முன்தினம் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன முன்னிலையில் இடம்பெற்ற அமைச்சரவைக் கூட்டத்தின் போதே அமைச்சர் ரவி கருணாநாயக்க மேற்படி அமைச்சரவை பத்திரத்தை முன்வைத்திருந்தார்.

இந்த அமைச்சரவைப் பத்திரத்தில் தற்போது கொழும்பு, ஆனந்த குமாரசாமி மாவத்தையில் அமைந்துள்ள மின்சக்தி, சக்தி வலு மற்றும் வர்த்தக அபிவிருத்தி அமைச்சை கொழும்பு, நவம் மாவத்தைக்கு இடமாற்றுவதற்காகவே அவர் திறைசேரியிடமிருந்து 364 மில்லியன் ரூபாவை பெற்றுத் தருமாறு கோரிக்கை விடுத்திருந்தார்.

அத்துடன் தற்போதைய அமைச்சின் கட்டடத்தில் போதியளவு இடவசதி இல்லாமையின் காரணமாகவே அமைச்சை வேறு இடத்திற்கு மாற்றுவதற்கான கோரிக்கையை விடுத்துள்ளதாகவும் அமைச்சர் ரவி கருணாநாயக்க குறித்த அமைச்சரவைப் பத்திரத்தில் சுட்டிக்காட்டியுள்ளார். (ஐ)

# பிரிட்டன் புதிய பிரதமருக்கு ஜனாதிபதி மைத்திரி வாழ்த்து





(கொழும்பு)

கொன்சர்வேற்றிவ் கட்சியின் தலைமைப் போட்டியில் வெற்றிபெற்ற பொரிஸ் ஜோன்சன் பிரித்தானியாவின் புதிய பிரதமராகத் தெரிவு செய்யப்பட்ட நிலையில் இலங்கை ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன வாழ்த்துத் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக டுவிட்டரில் நேற்று புதன்கிழமை பதிவிட்டுள்ள ஜனாதிபதி மைத்திரி, "பிரதமராகத் தேர்ந்தெடுக்கப்பட்ட பொரிஸ் ஜோன்சனுக்கு வாழ்த்துக்கள். எங்கள் இருதரப்பு உறவுகளை மேலும் வலுப்படுத்த உங்களுடன் பணியாற்ற நான் ஆர்வமாக இருக்கின்றேன்" என அதில் குறிப்பிட்டுள்ளார்.

கொன்சர்வேற்றிவ் கட்சியின் தலைமைப் போட்டியில் பொரிஸ் ஜோன்சன் மற்றும் ஜெரமி ஹன்ட் இருவரும் போட்டியிட்டனர். கொன்சர்வேற்றிவ் கட்சி உறுப்பினர்களின் வாக்குப்பதிவில் பொரிஸ் ஜோன்சன் 92,153 வாக்குகளைப் பெற்று புதிய தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார் என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

# பயங்கரவாதம் தொடர்பில் இளைஞர், யுவதிகளுக்கு விழிப்புணர்வு



(மன்னார்)

நாட்டில் ஏற்பட்டுள்ள பயங்கரவாதம், அடிப்படைவாதம் மற்றும் தீவரவாத செயற்பாடுகளின் போது இளைஞர்களின் செயற்பாடுகள் தொடர்பாகவும் இன, மத கலாசார ரீதியான பிரிவினைகள் மற்றும் முரண்பாடுகளை இளைஞர்கள் மத்தியில் தீர்த்துக் கொள்வது தொடர்பான செயலமர்வு நேற்று மன்னார் வாழ்வுதயத்தில் மன்னார் மாவட்ட இளைஞர் கழக சம்மேளன பிரதிநிதி ஜோசப்நயன் தலைமையில் இடம்பெற்றது.

தேசிய இளைஞர் சேவைகள் மன்றம் மற்றும் இலங்கை இளைஞர் கழக சம்மேளனத்தின் ஏற்பாட்டில் குறித்த செயலமர்வு இடம்பெற்றது.

இந்தச் செயலமர்வுக்கு பிரதம விருந்தினராக தேசிய இளைஞர் சேவை மன்றத்தின் மன்னார் மாவட்ட இளைஞர் சேவை அதிகாரி ரீ.பூலோகராஜா, இலங்கை இளைஞர் கழக சம்மேளன உப தலைவர் ஜசோதரன், மடு இளைஞர் சேவை அதிகாரி ராகவேந்தர், மன்னார் இளைஞர் பாராளுமன்ற உறுப்பினர் ஜேசுராஜ் லோ உட்பட மன்னார் மாவட்டத்தில் உள்ள ஐந்து பிரதேச செயலகங்களையும் பிரதிநிதித்துவப்படுத்தும் வகையில் மும்மதங்களையும் சேர்ந்த இளைஞர், யுவதிகள் கலந்து கொண்டனர்.

குறித்த செயலமர்வு மூலம் இளைஞர் மத்தியில் சேகரிக்கப்படும் கருத்துக்கள் அனைத்தும் வருகின்ற மாதம் தேசிய ரீதியில் இடம்பெறவுள்ள இளைஞர் தினத்தின் போது விசேட அறிக்கையாகத் தயாரிக்கப்பட்டு வெளியிடப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (9-285)

# உதயம் நகர், ஆதவன் நகர் வீட்டுத்திட்டங்கள் அமைச்சர் சஜித்தால் மக்களிடம் கையளிப்பு

(பனிக்கன்குளம்)

முல்லைத்தீவு மாவட்டத்தின் கரைதுறைப்பற்று பிரதேச செயலகப் பிரிவுக்குட்பட்ட கள்ளப்பாடு தெற்கு கிராம அலுவலர் பிரிவில் அமைக்கப்பட்ட உதயம் நகர் மற்றும் ஆதவன் நகர் ஆகிய இரண்டு மாதிரிக் கிராமங்களில் அமைக்கப்பட்ட 50 வீடுகள் நேற்று மக்களிடம் கையளிக்கப்பட்டது.



வீடமைப்பு நிர்மாணத்துறை மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சின் கீழ் உள்ள தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபையினால் முல்லைத்தீவு மாவட்டத்தின் கரைதுறைப்பற்று பிரதேச செயலகப் பிரிவில் உதயம் நகர் மாதிரிக் கிராமத்திற்குள் 25 வீடுகளும் ஆதவன் நகர் மாதிரி கிராமத்தில் 25 வீடுகளுமாக மொத்தமாக ஐம்பது வீடுகள் அமைக்கப்பட்டு இருந்தன.

அந்த வகையிலே நாடளாவிய ரீதியில் அமைக்கப்பட்டு மக்களிடம் கையளிக்கப்படுகின்ற மாதிரிக் கிராமங்கள் வரிசையிலே 223 ஆவது மற்றும் 224 மாதிரிக் கிராமங்களான உதயம் நகர் மற்றும் ஆதவன் நகர் கிராமங்களின் வீடுகளை மக்களிடம் நேற்று வீடமைப்பு நிர்மாணத்துறை மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சர் சஜித் பிரேமதாஸ மக்களிடம் கையளித்தார்.

அத்துடன் பல்வேறு வாழ்வாதாரத் திட்டங்கள், வீடமைப்பு கடன்கள், மூக்கு கண்ணாடிகள் வழங்கும் நிகழ்வும் இடம்பெற்றன. (9-281)

# நியமனம் வழங்க உறுதி அளித்த சஜித்

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு - சப்த கன்னிமார் ஆலய வளாகத்தில் அமைக்கப்பட்டிருந்த அறநெறிப் பாடசாலையினைத் திறந்து வைக்கும் நிகழ்வில் கலந்து கொண்ட அமைச்சர் சஜித் பிரேமதாஸ இருவரை அரச வேலைக்கு நியமிப்பதாக உறுதியளித்துச் சென்றார்.

குறித்த நிகழ்வில் அமைச்சர் சஜித் பிரேமதாஸவினை அழகாக ஓவியம் வரைந்த ஒரு இளைஞன் மற்றும் குறித்த சப்த கன்னிமார் அறநெறிப் பாடசாலையில் கல்வி கற்பிக்கும் ஒரு ஆசிரியைக்குமே இவ்வாறு அரச வேலைவாய்ப்பிற்கான நியமனத்தை நாளை வழங்குவதாக உறுதியளித்துள்ளார். (9)

# ஆடி மாத இராசி பலன்கள்

## 17.07.2019-17.08.2019

ஜோதிடக் கலாமணி சிவல்புரி சிங்காரம்



விகாரி வருடம் ஆடிமாதக் கிரக நிலைகளை ஆராய்ந்து பார்க்கும் பொழுது, மாதத் தொடக்கத்தில் உங்கள் இராசிநாதன் சுக்கிரன் புதனோடு இணைந்து புத-சுக்கிர யோகத்தை உருவாக்கும் விதத்தில் பலம்பெற்றுச் சஞ்சரிக்கின்றார். எனவே பொன், பொருள் சேரும். புகழ் கூடும். புதிய திருப்பங்கள் ஏற்படும். வீட்டிற்குத் தேவையான விலை உயர்ந்த பொருட்கள் வாங்குவதில் கவனம் கொள்வீர்கள். மின் சாதனப் பொருட்கள் பழுதானவற்றை எல்லாம் நீக்கிவிட்டுப் புதியவற்றை பொருத்தும் முயற்சியில் ஆர்வம் காட்டுவீர்கள்.

9இல் ராகு இருப்பதால் உடனுக்குடன் பணத்தேவைகள் பூர்த்தியாகும். கேட்ட இடத்தில் உதவியும் கிடைக்கும். தந்தை வழிச் சொத்துக்களில் இருந்த தகராறுகள் மாறும். எந்த வழியிலேனும் நீங்கள் செய்த முயற்சியின் விளைவாக வரவேண்டிய பாக்கிகள் வசூலாகும். சொந்தம், சுற்றங்கள் உங்கள் முன்னேற்றத்தைக் கண்டு ஆச்சரியப்படுவர்.

தன சப்தமாதிபதியான செவ்வாய் நீச்சம் பெற்றிருக்கின்றார். அவரோடு கடக இராசியில் சூரியனும் சேர்ந்து வலுவிழக்க வைக்கின்றார். குடும்ப ஸ்தானாதிபதியாக செவ்வாய் விளங்குவதால் குடும்பத்தில் சில பிரச்சினைகள் தலைதூக்கினாலும் சமாளித்து விடுவீர்கள். உடன் பிறப்புகளைச் கொஞ்சம் அனுசரித்துக்கொள்வது நல்லது. "குற்றம் பார்க்கின் சுற்றம் இல்லை" என்பதற்கேற்ப அவர்கள் மீது நீங்கள் குறை சொல்லாமல் அனுசரித்துச் செல்வது நல்லது.

3ஆம் இடத்தில் சந்திரன், சனி, கேது ஆகிய மூன்று கிரகங்களும் இருக்கின்றன. தொழில் ஸ்தானாதிபதியான சந்திரன் சுக பஞ்சமாதிபதியான சனியுடன் கூடியிருப்பதால் தொழில் வளர்ச்சியில் எந்தப் பாதிப்புகளும் ஏற்படாது. புதிய நண்பர்களின் அறிமுகத்தோடு பொருளாதார நிலையை உயர்த்திக்கொள்ள புதிய முயற்சிகளில் ஈடுபட்டு வெற்றிபெறும் வாய்ப்பை குரு பகவான் உங்களுக்கு வழங்கப் போகின்றார்.

காரணம் குருபகவான் மாதத் தொடக்கத்தில் வக்கிரம் பெற்றிருந்தாலும், ஓகஸ்ட் 7ஆம் திகதி வக்கிர நிவர்த்தியாகி பலம் பெறுகின்றார். அப்பொழுது அதன் பார்வைக்கு பலன் அதிகம் கிடைக்கின்றது. உத்தியோக முன்னேற்றம், ஊர் மாற்றங்களால் நன்மை, தொழில் வளர்ச்சி, சமூகத்தில் உயர்ந்தநிலை போன்றவற்றை இந்தக் குரு பார்வை வழங்கும்.

இம்மாதம் வெள்ளிக்கிழமை தோறும் விரதமிருந்து அம்பிகை வழிபாட்டை மேற்கொள்ளுங்கள். ஆடி அமாவாசை அன்று முன்னோர்களை வழிபட்டு வருவதன் மூலம் உங்கள் முயற்சிகளில் வெற்றி கிடைக்கும்.

**கடக சுக்கிரனும் சிம்மச் சுக்கிரனும் சஞ்சாரம்**

ஜூலை 24 ஆம்திகதி கடக இராசிக்குச் சுக்கிரன் செல்கின்றார். ஓகஸ்ட் 17 ஆம்திகதி சிம்ம இராசிக்குச் சுக்கிரன் செல்கின்றார். உங்கள் இராசிக்குப் பத்தாமிடமான கடகத்தில் சுக்கிரன் சஞ்சரிக்கும் பொழுது தொழில் வளர்ச்சி சிறப்பாக இருக்கும். தொலை தூரத்திலிருந்து வரும் தகவல் மூலம் வெளிநாட்டில் பணிபுரியும் வாய்ப்பு கிடைக்கலாம். புத ஆதித்ய யோகம் செயற்படுவதால் தங்கம், வெள்ளி வாங்குவதில் தனிக்கவனம் செலுத்துவீர்கள். பொதுவாழ்வில் புதிய பொறுப்புகள் கிடைக்கும். கல்வி சம்பந்தமாக எடுத்த முயற்சி கைகூடும். இலாப ஸ்தானத்தில் சுக்கிரன் சஞ்சரிக்கும் பொழுது பணத்தேவைகள் உடனுக்குடன் பூர்த்தியாகும். பெண்வழி ஒத்துழைப்புகளும் உண்டு.

**கடக புதனின் சஞ்சாரம்**

ஓகஸ்ட் 3 ஆம்திகதி கடக இராசிக்குப் புதன் செல்கின்றார். அங்குள்ள சூரியன், சுக்கிரனுடன் இணைந்து அற்புதமான பலன்களை அள்ளி வழங்கப் போகின்றார். குறிப்பாக வெளிநாடு சென்று படிக்க விரும்பும் பிள்ளைகளுக்குரிய ஏற்பாடுகளை செய்தால் அதில் வெற்றி கிடைக்




கும். தூரத்து நாடுகளில் நீங்கள் பணிபுரிய விண்ணப்பித்திருந்தாலும் அழைப்புகள் வந்து சேரலாம். மாமன், மைத்துனர் வழியில் ஏற்பட்ட மனக்கசப்புகள் மாறும். விலகிச் சென்ற சொந்தங்கள் விரும்பி வந்து இணைவர்.

## விலையுயர்ந்த பொருட்களை வாங்கும் யோகம்

**சிம்மச் செவ்வாயின் சஞ்சாரம்**

ஓகஸ்ட் 10 ஆம்திகதி சிம்மத்திற்கு செவ்வாய் செல்கின்றார். இக் காலம் ஒரு பொற்காலமாகும். 2,7 ஆகிய இடங்களுக்கு அதிபதியான செவ்வாய்இலாபஸ்தானத்தில்பலம்பெறும்பொழுது, குடும்ப முன்னேற்றம் கூடுதலாக இருக்கும். கொடுக்கல்-வாங்கல்கள் ஒழு ங்காகும். சொத்துக்கள் வாங்க, விற்க வாய்ப்பு கள் கைகூடி வரும். உடன்பிறப்புகளின் ஒத்து ழைப்போடு ஒரு நல்ல காரியம் இல்லத்தில் நடைபெறும்.

**குருவின் வக்கிர நிவர்த்திக் காலம்**

இதுவரை விருச்சிக இராசியில் வக்கிர இயக்கத்தில் இருந்த குரு பகவான் ஓகஸ்ட் 7ஆம் திகதி வக்கிர நிவர்த்தியாகின்றார். பலம்பெற்ற குருவின் பார்வை உங்கள் இராசிக்கு ஜீவன ஸ்தானம், உத்தியோக ஸ்தானம், ஆயுள் ஸ்தானம் ஆகியவற்றின்மீது பதிவாகின்றது. எனவே வேலை கிடைக்கும், தொழில் சம்பந்தமாக முயற்சி எடுத்தவர்களுக்கு புதிய ஒப்பந்தங்கள் வந்து சேரும். ஆரோக்கியத் தொல்லை அகலும். மாற்று மருத்துவம் உடல்நலத்தைச் சீராக்கும். இம்மாதம் ராகு-கேதுக்களுக்கு உரிய வழிபாடுகளை செவ்வாய்க்கிழமை அன்று செய்வது நல்லது.

**பெண்களுக்கான பலன்கள்**

இம்மாதம் பணப்பற்றாக்குறை அகலும் மாதமாகும். தொழிலில் எதிர்பார்த்தலைக் காட்டிலும் கூடுதல் வருமானம் கிடைக்கும். கணவன்-மனைவிக்குள் பிணக்குகள் அகன்று இணக்கம் ஏற்படும். பிரியம் அதிகரிக்கும். உங்கள் பெயரிலேயே தொழில் தொடங்குவதற்கு குடும்ப உறுப்பினர்கள் சம்மதிப்பர். தாய்வழி ஆதரவு திருப்திதரும். உடன்பிறப்புகளில் ஒரு சிலர் மட்டும் உங்கள் குணமறிந்து நடந்து கொள்வர். அத்தியாவசியத்தேவைகளை முன்னிட்டு வாங்கிய கடனைக் கொடுத்து மகிழ்வீர்கள். பிள்ளைகளால் பெருமை வந்து சேரும். அவர்களின் கல்வி முன்னேற்றம் வியக்கத்தக்க விதம் அமையும். பணிபுரியும் பெண்களுக்கு பாராட்டும், புகழும் கூடும். விருப்ப ஓய்வில் வெளிவந்து சுய தொழில் தொடங்கும் முயற்சி ஒருசிலருக்கு கைகூடும். இம்மாதம் வெள்ளிக்கி ழமை அன்று லட்சுமி கவசம் பாடி அஷ்டலட்சுமியையும் வழிபாடு செய்து வருவது நல்லது.



விகாரி வருடம் ஆடிமாதக் கிரக நிலைகளை ஆராய்ந்து பார்க்கும் பொழுது மாதத் தொடக்கத்தில் உங்கள் இராசிநாதன் செவ்வாய், தொழில் ஸ்தானாதிபதி சூரியனுடன் இணைந்து 9ஆம் இடத்தில் சஞ்சரிக்கின்றார். விருச்சிகத்தில் உள்ள குருவின் பார்வை அதன்மீது பதிவதால் குரு மங்கள யோகம் ஏற்படுகின்றது. செவ்வாய் நீச்சம் பெற்றிருந்தாலும் கூட குருவின் பார்வை அதன்மீது பதிவதால் பலம்பெற்று சில நல்ல வாய்ப்புகள் உங்களுக்கு வரவழைத்துக் கொடுக்கப் போகின்றது.

இராசிநாதனாகவும், 6இற்கு அதிபதியாகவும் விளங்குபவர் செவ்வாய். எனவே 6இற்கு அதிபதி நீச்சம் பெறுவது ஒருவழிக்கு நன்மை தான். கொடுக்கல்-வாங்கல்கள் ஒழுங்காகும். வளர்ச்சிக்கு குறுக்கீடாக இருந்தவர்கள் விலகுவர். ஆரோக்கியம் சீராகி ஆனந்தப்படுத்தும். இதுவரை ஏற்பட்ட மருத்துவச் செலவுகள் குறைந்து மனநிம்மதியை ஏற்படுத்தும். வீடு கட்டும் முயற்சி இனி விறுவிறுப்பாக நடைபெறும். சூரிய பலம் நன்றாக இருப்பதால் காரியங்கள் அனைத்திலும் வெற்றி கிடைக்கும். நண்பர்கள் ஒத்துழைப்புச் செய்வர். அதிகாரப் பதவியில் உள்ளவர்கள் ஆதரவுக்கரம் நீட்டுவர்.

உங்கள் இராசிக்கு 2ஆம் இடத்தில் சனி வீற்றிருக்கின்றார். அவரோடு சந்திரன் மற்றும் கேது இணைந்து சஞ்சரிக்கின்றார்கள். சனி வக்கிர இயக்கத்தில் இருந்தாலும் கூட நல்ல காரியங்கள் பலவும் குடும்பத்தில் நடைபெற வழி வகுத்துக்கொடுப்பர். உங்கள் இராசிக்கு சகாய ஸ்தானம் மற்றும் சுக ஸ்தானத்திற்கு அதிபதியானவர் சனி. எனவே குடும்பத்தில் காலாகாலத்தில் நடைபெற வேண்டிய மங்கல நிகழ்வுகள் இனி துரிதமாக நடைபெறும். கடமையில் கண்ணும் கருத்துமாக இருப்பீர்கள். தொழிலில் புதிய ஒப்பந்தங்கள் அடுக்கடுக்காக வந்து சேரும். ஆன்மீகப் பயணங்கள் அதிகரிக்கும்.

8ஆம் இடத்தில் புதன் சுக்கிரன், ராகு ஆகிய மூன்று கிரகங்களும் சஞ்சரிக்கின்றார்கள். புத சுக்கிர யோகம் செயற்படப் போகின்றது. எனவே வீட்டிற்குத் தேவையான விலை உயர்ந்த பொருட்களையும், பிள்ளைகளின் கல்யாணத் தேவைகளை முன்னிட்டுத் தங்கம், வெள்ளி மற்றும் ஆடை, ஆபரணங்களையும் வாங்கும் வாய்ப்பு உருவாகும். மறைந்த ராகுவால் நிறைந்த தனலாபம் கிடைக்கும். இருப்பினும் 2இல் கேது 8இல் ராகு இருப்பதால் நாகசாந்திப் பரிகாரங்களைச் செய்வதன் மூலம் நன்மைகளை அதிகம் வரவழைத்துக்கொள்ள இயலும்.

இம்மாதம் அம்பிகைக்கு உகந்த மாதம் என்பதால் வெள்ளிக்கிழமை தோறும் அம்பிகை வழிபாட்டை மேற்கொள்ளுங்கள். ஆடி அமாவாசை அன்று முன்னோர்களை முறையாக வழிபட்டால் முன்னேற்றத்தின் முதல்படிக்குச் செல்ல இயலும்.

**கடகச் சுக்கிரனும், சிம்ம சுக்கிரனும்**

ஜூலை 24 ஆம் திகதி கடக இராசிக்கு சுக்கிரன் செல்கின்றார்.பிறகு ஓகஸ்ட் 17 ஆம் திகதி சிம்ம இராசிக்குச் சுக்கிரன் செல்கின்றார். இதன் விளைவாக தொழில் முன்னேற்றம் சிறப்பாக இருக்கும். கேட்ட இடத்தில் உதவிகள் கிடைக்கும். புதிய வாகனம் வாங்கும் யோகம், முதல் வீட்டை விரிவு செய்து கட்டும் யோகம் வரை படிப்படியாக நடைபெற இந்த சுக்கிரப் பெயர்ச்சி கைகொடுக்கப் போகின்றது. குறிப்பாக கடகத்தில் சுக்கிரன் சஞ்சரிக்கும் பொழுது தந்தை வழி ஒத்துழைப்பு கிடைக்கும். பெற்றோர்களின் பாசமழையில் நனையும் சூழ்நிலை உண்டு. அவர்களால் ஆதாயமும் கிடைக்கும். சிம் மத்தில் சுக்கிரன் சஞ் சரிக்கும் பொழுது பிரி ந்து சென்ற உறவினர் கள் பிரியமுடன் வந்திணைவர். அரசியல் வாதிகளின் அனுகூலம் கிடைக்கும். பெண்களால் பெருமை வந்து சேரும்.

**கடக புதனின் சஞ்சாரம்**

ஓகஸ்ட் 3 ஆம்திகதி கடக இராசிக்குப் புதன் வருகின்றார். அங்குள்ள சூரியனுடன் இணைந்து புத ஆதித்ய யோகத்தை உருவாக்குகின்றார். இதனால் கல்வி முன்னேற்றம், கடல் தாண்டிச் செல்லும் வாய்ப்பு, இளைய சகோதரத்தோடு இணக்கம், தொழிலில் எதிர்பார்த்ததைக் காட்டிலும் கூடுதல் இலாபம் போன்றவைகள்




கிடைக்கும். பொது நலம் மற்றும் அரசியலில் இருப்பவர்களுக்கு இக்காலத்தில் மேலிடத்து அனுகூலத்தோடு புதிய பொறுப்புகளும், பதவிகளும் கிடைக்கலாம்.

## வாய்ப்புக்கள் வாயில் தேடி வரும்

**சிம்மச் செவ்வாயின் சஞ்சாரம்**

ஓகஸ்ட் 10 ஆம்திகதி சிம்ம இராசிக்குச் செவ்வாய் செல்கின்றார். உங்கள் இராசிநாதனான செவ்வாய் தொழில் ஸ்தானத்தில் சஞ்சரிக்கும் இந்த நேரத்தில் தொழில் வெற்றி நடைபோடும். துணையாக இருக்கும் நண்பர்கள் தோள்கொடுத்து உதவுவர். மதிப்பும், மரியாதையும் உயரும். சமூகத்தில் உயர்ந்த அந்தஸ்து படைத்தவர்களின் ஒத்துழைப்போடு பொதுக்காரியங்களில் ஈடுபட்டு புகழ் சேர்ப்பீர்கள்.

**குருவின் வக்கிர நிவர்த்திக் காலம்**

ஓகஸ்ட் 7 ஆம்திகதி விருச்சிகத்தில் சஞ்சரிக்கும் குரு வக்கிர நிவர்த்தியாகின்றார். இப்பொழுது பலம்பெறும் குருவின் பார்வை 5, 7, 9 ஆகிய மூன்று இடங்களில் பதிவதால் அந்த இடங்கள் புனிதமடைந்து அற்புதப் பலன்களை அள்ளி வழங்கப்போகின்றது. பிள்ளைகளின் கல்யாணக் கனவுகளை நனவாக்குவீர்கள். வாழ்க்கைத் தேவைகள் பூர்த்தியாகும். பூர்வீக சொத்துக்களால் லாபம் கிடைக்கும். புதிய பங்குதாரர்கள் வந்திணைந்து பொருளாதார நிலை உயர வழிவகுத்துக் கொடுப்பர். உத்தியோகத்தர்களுக்கு பதவி உயர்வும், ஊதிய உயர்வும் கிடைக்கும். இம்மாதம் செவ்வாய்க்கிழமை தோறும் வராஹி அம்மனை வழிபட்டு வருவது நல்லது.

**பெண்களுக்கான பலன்கள்**

இம்மாதம் ஓர் இனிய மாத மாகும். குருமங்கள யோகமும், புத-சுக்கிர யோகமும் செயற்படும் மாதம் என்பதால் புதிய வாய்ப்புகள் உங்களைத் தேடி வரப்போகின்றது. முன்னேற்றம் அதிகரிக்கும். கணவன்-மனைவிக்குள் பாசமும், நேசமும் அதிகரிக்கும். ஒருவரை ஒருவர் புரிந்து கொண்டு செயற்பட்டு மற்றவர்களுக்கு முன் உதாரணமாக வாழ்ந்து காட்டுவீர்கள். பிள்ளைகளின் சுபகாரியங்கள் நினைத்தபடியே நிறைவேறும். சொத்துக்கள் வாங்கும் முயற்சி கைகூடும். கட்டிய வீட்டைப் பழுது பார்த்து அழகுபடுத்தும் முயற்சியிலும் ஆர்வம் காட்டுவீர்கள். இல்லத்தில் மங்கல நிகழ்ச்சி நடைபெறும் வாய்ப்பு உண்டு. தாய் வழி ஆதரவும், சகோதர வர்க்கத்தினரின் உறுதுணையும் மிகச்சிறப்பாக இருக்கும். பணிபுரியும் பெண்களுக்கு மேலிடத்து அனுகூலம் உண்டு. ஊதிய உயர்வோடு கூடிய பதவி உயர்வு கிடைக்கும். வடக்கு நோக்கிய அம்பிகையை வெள்ளிக்கிழமை தோறும் வழிபட்டு வருவது நல்லது.

(தொடரும்)

# அறிவும் ஆரோக்கியமும் நிறைந்த சமூகமே நாட்டின் வெற்றியாகும்

## ஜனாதிபதி தெரிவிப்பு



பால்மா இறக்குமதி மற்றும் பால் உணவுகளுக்காக வருடாந்தம் செலவாகும் 10,000 கோடி ரூபாவிற்கும் அதிகமான பெருந்தொகைப் பணத்தை நாட்டில் மீதப்படுத்துவதற்காகவும் நாட்டின் பிள்ளைகளை போசாக்கான ஒரு தலைமுறையாகக் கட்டியெழுப்புவதற்காகவும் சுதேச பாற் பண்ணையாளர்களை வலுவூட்ட வேண்டியுள்ளதாக ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்தார்.

இத்திட்டத்தின் ஒரு கட்டமாகப் பாடசாலை பிள்ளைகளுக்கு பசும்பால் வழங்கும் தேசிய செயற்றிட்டம் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தலைமையில் நேற்று முன்தினம் முற்பகல் இரத்தினபுரி, கலவான, கஜூகஸ் வத்த, சாஸ்திரோதய வித்தியாலயத்தில் ஆரம்பித்து வைக்கப்பட்டது.

2025 ஆம் ஆண்டளவில் இலங்கையில் பசும்பால் உற்பத்தியை அதிகரிப்பதற்கும் பாடசாலைகளில் ஆரம்பக் கல்வி கற்கும் மாணவ, மாணவிகளின் போசாக்கை மேம்படுத்தும் நோக்கத்துடனும் ஆரம்பப் பாடசாலை மாணவர்களுக்கு நாளாந்தம் காலையில் பசும்பால் பக்கெற் வழங்கும் தேசிய செயற்றிட்டம் ஜனாதிபதியின் பணிப்புரைக்கமைய "பால் உற்பத்தியில் தன்னிறைவடைந்த தேசம்" எனும் தொனிப் பொருளின் கீழ் ஆரம்பிக்கப்பட்டுள்ளதுடன், ஜனாதிபதி செயலகம் மற்றும் கிராமசக்தி மக்கள் இயக்கத்துடன் ஒன்றிணைந்து ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதுடன், கல்வி அமைச்சு மற்றும் கால்நடை வள அபிவிருத்தி அமைச்சு ஆகியன இதற்கு பங்களிப்பு அளிக்கின்றன.

இத்திட்டத்தின் முதலாம் கட்டமாக தரம் ஒன்று முதல் ஐந்து வரையிலான 4 இலட்சம் மாணவ, மாணவிகளுக்கு தினசரி 150 மில்லிலீற்றர் பசும்பால் வழங்கப்படவுள்ளதுடன், சுகாதார அமைச்சின் பரிந்துரைக்கமைய சுவையூட்டப்பட்ட பாலுக்கு பதிலாக தரம் உறுதி செய்யப்பட்ட திரவப்பால் பைக்கெற் வழங்கப்படும். பயன்படுத்தப்பட்ட பால் பக்கெற்றுகளை மீள் சுழற்சி செய்வதற்கான நிகழ்ச்சித் திட்டமும் நடைமுறைப்படுத்தப்படவுள்ளது.

மேலும் இந்நிகழ்வில் உரையாற்றிய ஜனாதிபதி, அறிவும் ஆரோக்கியமும் கொண்ட சமூகம் ஒரு நாட்டின் வெற்றியாகும் எனத் தெரிவித்தார். நாட்டின் சனத்தொகையில் சுமார் 15 வீத மானவர்கள் போசணைக் குறைபாட்டினை கொண்டிருப்பது நாடு என்ற வகையில் ஒரு நல்ல நிலைமையல்ல எனக் குறிப்பிட்ட ஜனாதிபதி, ஆரோக்கியமானதொரு சமூகத்தை உருவாக்கும் சவாலில் சுதேச பசும்பால் பயன்பாட்டை ஊக்குவிப்பது மிகவும் முக்கியமானதாகும் எனத் தெரிவித்தார்.

மேலும் கிராமிய பாற்பண்ணையாளர்களை வலுவூட்டுவதன் மூலம் கிராமிய வறுமையை குறைத்து சிறந்த பொருளாதார வளர்ச்சியை பெற்றுக்கொள்வது இச்செயற்றிட்டத்தின் முக்கிய நோக்கமாகுமென்றும் ஜனாதிபதி தெரிவித்தார்.

பாடசாலை மாணவர்களுக்கு பசும்பால் வழங்கும் செயற்றிட்டத்திற்காக 2019 ஆம் ஆண்டிற்காக இதுவரை அரசாங்கம் 4000 மில்லியன் ரூபாவிற்கும் அதிகமான தொகையை செலவிட்டிருப்பதாகவும் ஜனாதிபதி தெரிவித்தார். இதற்காக ஜனாதிபதி அலுவலகத்தினால் 1000 மில்லியன் ரூபாவிற்கும் அதிகமான தொகை செலவிடப்பட்டுள்ளதுடன், பால் பக்கெற்றுக்களை விநியோகிக்கும் பொறுப்பை கார்கில்ஸ் மற்றும் மில்கோ நிறுவனங்கள் ஏற்றிருக்கின்றன.

குறைகளை நிவர்த்தி செய்து தேசத்தின் பிள்ளைகளினதும் தேசத்தினதும் எதிர்காலத்திற்காக இந்தச் செயற்றிட்டத்தை வெற்றி பெறச் செய்வதற்கு அனைவரும் ஒத்துழைப்பு வழங்குவார்களென தான் எதிர்பார்ப்பதாக ஜனாதிபதி தெரிவித்தார். (ஐ)

# ஜனாதிபதி வேட்பாளராக சஜித் பிரேமதாஸவை களமிறக்குவதில் எந்த முரண்பாடுகளுமில்லை

## ஹரின் பெர்னாண்டோ தெரிவிப்பு





(கொழும்பு)

ஜனாதிபதி வேட்பாளராக சஜித்தைக் களமிறக்குவதில் எந்த முரண்பாடும் இல்லை எனத் தெரிவித்த அமைச்சர் ஹரின் பெர்னாண்டோ, இந்த விடயத்தில் நாங்கள் தீர்க்கமாகவுள்ளதாகவும் தெரிவித்தார்.

அத்துடன் ஐக்கிய தேசிய கட்சியின் ஜனாதிபதி வேட்பாளரைத் தெரிவு செய்வதில் எந்த முரண்பாடும் கிடையாது. கட்சியில் இடம்பெற்ற கலந்துரையாடலின் போது ஐக்கிய தேசிய கட்சியின் பிரதித் தலைவர் சஜித் பிரேமதாஸவுக்கும் உப தலைவர் ரவி கருணாநாயக்கவுக்கும் இடையில் தகராறுகள் எதுவும் ஏற்படவில்லை.

அமைச்சர் ரவி கருணாநாயக்க சில குற்றச்சாட்டுக்களை முன்வைத்தார். அதற்கு எங்களின் எதிர்கால ஜனாதிபதி வேட்பாளர் முறையான பதிலை முன் வைத்தார். அத்துடன் அந்தப் பிரச்சினை முடிவடைந்தது என்றும் அவர் தெரிவித்தார்.

வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் ஊடகவியலாளர்களின் கேள்விகளுக்கு பதிலளிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். (ஐ)

# ஜப்பான் தூதரக இணைப்பதிகாரி இராணுவத் தளபதியுடன் சந்திப்பு



(கொழும்பு)

இலங்கைக்கான ஜப்பான் தூதரகத்தின் இணைப்பதிகாரி முதலாம் லெப்டினன்ட் ஹக்குபுக்காவுர மற்றும் கப்டன் அத்சுஹிரோ மற்றும் இராணுவ தளபதி லெப்டினன்ட் ஜெனரல் மகேஷ் சேனாநாயக்க ஆகியோருக்கிடையிலான உத்தியோகபூர்வ சந்திப்பொன்று அண்மையில் இடம்பெற்றது.

இச்சந்திப்பின்போது பதவிக் காலம் முடிவுற்று செல்லும் கப்டன் மோரோவுக்கு இராணுவத் தளபதி நன்றிகளைத் தெரிவித்ததுடன், புதிதாக இந்தப் பதவிக்கு வருகை தந்த பாதுகாப்பு இணைப்பதிகாரியையும் தளபதி வரவேற்றார். பின்னர் கப்டன் மோரோ இராணுவத்தினர் வழங்கிய ஒத்துழைப்புக்கு இராணுவத் தளபதியிடம் நன்றிகளையும் தெரிவித்தார்.

சந்திப்பின் இறுதியில் இவர்கள் இருவருக்கும் இடையில் நினைவுச் சின்னங்கள் பரிமாறப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (ஐ)

# குறை'களை' பதிகம் 70

## சீரியல் காய்ச்சல்

எள்ளும் கொள்ளும் வெடிக்கும் முகங்கள்
எரிச்சலூட்டும் முகம் சுழிப்புக்கள்
கூட இருந்து குழி பறிக்கும் கூனித்தனங்கள்
பெண்மைக்கு பெண்மையே
மரணக்குழி பறிக்கும்
சூர்ப்பனகைத் தனங்கள்

காட்சிக்குக் காட்சி சதா
அழுகையும் பற்கடிப்புக்களும்
மாற்றான் தோட்டத்து மாம்பழத்தை
கசக்கிப் பிழிந்து சுவைக்கத் துடிக்கும்
மூர்க்கத் தனங்கள்
நீதி நியாயங்களை மறுதலிக்கும்
பரிசேயத் தனங்கள்

ஓங்கிய கை ஒருத்தியை அடிப்பதற்குக் கூட
ஒன்றரை மாதம் காத்திருக்க வேண்டும்
சினிமாவில் விட்டகுறை
தொட்ட குறை அனைத்தும்
சீரியல்களில் அரங்கேற்றம்

புறநானூற்றில் முறம் எடுத்து
புலி விரட்டிய எங்கள்
வீரமங்கையரின் விழுதுகள்
இன்று இரவும் பகலும்
முடங்கிக் கிடப்பது
சீரியல் தொடர்களுக்குள்

அன்றொருநாள் மனோன்மணி
மௌன இராகத்தை மௌன நிலையில்
இரசித்துக் கொண்டிருந்தாளாம்
கையில் ரிமோட் கண்களில் அடுத்த கட்டம்
எப்படி அமையுமோ என்ற ஏக்கம்

அடுப்படியில் குக்கரில்
வார்த்து வ்வைத்த தோசை
கருகி ஒலி எழுப்ப
சடுதியாய் துள்ளி எழுந்த ஏந்திழையாள்
அடுப்பங்கரைக்கு விரைந்து அவசரமாய்
தட்டகப்பைக்குப் பதிலாக
கையிலிருந்த ரிமோட்டினால்
தோசையைக் கிளப்ப
சூடுகண்ட ரிமோட் உருகி வெடித்து
இவள் கையின் விரலை
பதம் பார்த்த தன்றோ!

என்னே கொடுமை!
கட்டிய கணவனுக்கும்
கண்மணிகளாம் பிள்ளைகட்கும்
உரிய நேரத்தில் உணவில்லை

கட்டிய கணவன் உடனிருக்க
சீரியலில் தோன்றும்
சிமாட்டான நபர்களையே
தங்கள் இதய நாயகர்களாக
போற்றித் துதிக்கும் கொடுமைகளை
எங்கு காண்பீர்

நாமும் நமக்கென்றோர்
நவியாக் கலையுடையோம்
உணர்ந்திடுவீர்
உம் குறைகள் களைந்திடுவீர்

யாழ்.வதிரிவாசன்

# வடக்கில் 19064 அபாயகரமான வெடி பொருட்கள் அகற்றம்



(கண்டாவளை)

இலங்கையின் வடபகுதியில் மனிதாபிமான கண்ணிவெடியகற்றலில் ஜப்பான் நாட்டு நிதியுதவியுடன் ஸார்ப் (SHARP) மனிதாபிமானக் கண்ணிவெடியகற்றும் அரச சார்பற்ற நிறுவனம் ஈடுபட்டு வருகிறது.

2016 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் தொடக்கம் 2019 ஜூலை மாதம் 21 ஆம் திகதி வரையான காலப்பகுதியில் முல்லைத்தீவு மாவட்டத்தில் ஒட்டுசுட்டான் பிரதேச செயலகத்தின் கீழ் உள்ள அம்பகாமம் மற்றும் தச்சடம்பன் பகுதியிலும் கிளிநொச்சி மாவட்டத்தில் பச்சிலைப்பள்ளி பிரதேச செயலகத்தின் கீழ் உள்ள முகமாலையிலும் எட்டு இலட்சத்து நாற்பத்து எட்டாயிரத்து நூற்று அறுபத்து எட்டு சதுரமீற்றர் பரப்பளவில் (848,168Sqm) இருந்து பத்தொன்பதாயிரத்து அறுபத்து நான்கு (19.064) அபாயகரமான வெடிபொருட்களை அகற்றி அழிக்கப்பட்டுள்ளது என ஸார்ப் நிறுவனத்தின் நடவடிக்கை முகாமையாளர் ஓய்வுபெற்ற கப்டன் பிரபாத் நாரம்பனவ தெரிவித்தார்.

தொடர்ந்து இந்நிறுவனம் கண்ணிவெடியகற்றும் பணிகளை முகமாலையின் பல பகுதியில் துரித கதியில் முன்னெடுத்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (9-315)

# டிசெம்பருக்குள் நந்திக்கடல் மறுசீரமைக்கப்படும்

## மீனவர்களிடத்தில் அமைச்சர் சஜித் உறுதி

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு - வட்டுவால் சப்தகன்னிமார் அறநெறிப் பாடசாலை திறப்பு விழாவில் கலந்து கொண்ட அமைச்சர் சஜித் பிரேமதாஸ, நந்திக்கடல் களப்பு எதிர்வரும் டிசெம்பருக்குள் சீரமைப்பு வேலைகளை ஆரம்பிப்பதாக மீனவர்களுக்கு உறுதியளித்தார். நந்திக்கடல் களப்பானது ஆழங்குறைவாகவும், சேறும் சகதியுமாக காணப்படுவதாகவும், எனவே நீர் விரைவாக வற்றுவதால் மீன் கள் அதிகளவில் இறந்துபோவது மற்றும் மீனவர்கள் வருடம் முழுவதும் மீன்பிடியில் ஈடுபடமுடியாத நிலை ஏற்பட்டுள்ளதாக அப்பகுதி மக்கள் அமைச்சர் சஜித் பிரேமதாஸவிடம் தெரிவித்திருந்தனர்.

அந்தவகையில் தான் எதிர்வரும் டிசெம்பருக்குள் நந்திக்கடல் களப்பு சீரமைப்பு வேலைகளை ஆரம்பித்து வைப்பதாக மீனவர்களிடம் சஜித் பிரேமதாஸ உறுதியளித்திருந்தார். (9)

# சப்த கன்னிமார் அறநெறிப் பாடசாலை அமைச்சர் சஜித் பிரேமதாஸவால் திறந்துவைப்பு





(பனிக்கன்குளம்)

முல்லைத்தீவு மாவட்டத்தின் கரைதுறைப்பற்று பிரதேச செயலக பிரிவுக்குட்பட்ட வட்டுவாகல் பகுதியில் அமைந்துள்ள சப்த கன்னிமார் ஆலய வளாகத்தில் இயங்கி வருகின்ற சப்தகன்னிமார் அறநெறி பாடசாலைக்கு தேசிய வீடமைப்பு நிர்மாணத்துறை அமைச்சினால் அறநெறி பாடசாலை கட்டடம் ஒன்று அமைக்கப்பட்டது.

குறித்த கட்டடம் தேசிய வீடமைப்பு நிர்மாணத்துறை அமைச்சர் சஜித் பிரேமதாஸவால் குறித்த கட்டடம் நேற்று திறந்துமாணவர்களிடம் கையளிக்கப்பட்டது.

குறித்த நிகழ்வில் பாராளுமன்ற உறுப்பினர்களான சிவப்பிரகாசம் சிவமோகன் உள்ளிட்ட அரசியல் பிரமுகர்கள், முல்லைத் தீவு மாவட்ட அரசாங்க அதிபர் திருமதி ரூபவதி கேதீஸ வரன்,அரச அதிகாரிகள்,தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபை அதிகாரிகள், ஆலயத்தின் நிர்வாக சபை உறுப்பினர்கள், அறநெறி பாடசாலை மாணவர்கள், பெற்றோர்கள், நலன் விரும்பிகள் எனப் பலரும் கலந்து கொண்டனர். (9-281)

# 2 வருடங்களாக பாவனையற்று காணப்படும் தருமபுரம் வைத்தியசாலை கட்டடங்கள்



(அக்கராயன்)

கிளிநொச்சி தருமபுரம் பிரதேச வைத்தியசாலைக்கு புதிய வெளிநோயாளர் பிரிவு அமைக்கப்பட்டு இரண்டு வருடங்களாக பயன்பாடின்றி காணப்படுகிறது எனப் பொது மக்கள் குற்றம் சுமத்துகின்றனர்.

குறித்த வைத்தியசாலைக்குரிய வெளிநோயாளர் பிரிவானது எவ்வித திட்டமிடலும் இன்றி பொருத்தமற்ற இடத்தில் கட்டப்பட்டமையே இதற்கான காரணம் என தெரியவருகிறது.

தற்போது தருமபுரம் வைத்தியசாலை இங்கியவரும் காணியை அடுத்து தருமபுரம் கல்மடுநகர் வீதி செல்லுகிறது. வீதிக்கும் வைத்தியசாலைக் காணிக்கும் இடையில் வெள்ள வாய்க்கால் ஒன்றும் உள்ளது. இந்த வீதியைக் கடந்தால் காணப்படும் குடியிருப்பின் மத்தியில் புதிய வெளிநோயாளர் பிரிவானது 22 மில்லியன் செலவில் GFATM திட்டத்தின் உதவியுடன் 2016ஆம் ஆண்டில் கட்டப்பட்டு 2017ஆம் ஆண்டு ஆடி மாதம் 06ஆம் திகதி சுகாதாரத் திணைக்களத்திற்குக் கையளிக்கப்பட்டுள்ளது.

அதாவது வெளிநோயாளர் பிரிவு வீதியின் ஒருபுறமும் மகப்பேற்று விடுதி உள்ளிட்ட நோயாளர் விடுதிகள் அடங்கலான ஏனைய பகுதிகள் வீதியின் மறுபுறமும் என வெவ்வேறாக காணப்படுகின்றன.

இதனால் வெளிநோயாளர் பிரிவில் சிகிச்சைக்காக கொண்டு வரப்படுகின்ற நோயாளர் ஒருவர் வைத்தியரின் பரிசோதனைக்கு பின்னர் வைத்தியசாலை நோயாளர் விடுதியில் தங்க வைக்கப்படல் வேண்டும் என்றால் அந்த நோயாளி வீதியை கடந்து நோயாளர் விடுதிக்கு கொண்டு வரப்படல் வேண்டும். இந்த நடைமுறைச் சிக்கலைக் கவனத்தில் எடுக்காது அவசரம் அவசரமாக புதிய வெளிநோயாளர் பிரிவு தற்போதைய இடத்தில் அமைக்கப்பட்டுள்ளது.

இதனால் பல மில்லியன்கள் செலவில் அமைக்கப்பட்ட குறித்த கட்டடங்கள் இன்னமும் பயன்பாடின்றி காணப்படுகின்றன. இந்த கட்டடங்களை தற்போது மாடுகளே பயன்படுத்தி வருகின்றன.

எனவே சம்பந்தப்பட்ட திணைக்களங்கள் இந்த விடயத்தில் காணப்படுகின்ற நடைமுறைக் குறைபாடுகளை நிவர்த்தி செய்து குறித்த கட்டடங்களை விரைவில் மக்களின் பயன்பாட்டிற்கு கொண்டுவர வேண்டும் என பிரதேச மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (9-350)

# தொலைந்த தே.அ. அட்டைக்கான தண்டப்பணம் செலுத்துவதில் அவதியுறும் பொதுமக்கள்

(நெளுக்குளம்)

தொலைந்த அடையாள அட்டைக்குப் பதிலாக இணைப்பிரதி ஒன்றினைப் பெற்றுக் கொள்வதற்கு பலர் அவதியுறுவதாக தெரிவித்துள்ளனர்.

தேசிய அடையாள அட்டை பெறுவதற்காக அறவிடப்படும் கட்டணங்கள் கிராம அலுவலகத்தில் காட்சிப்படுத்தப்பட்டுள்ளது இதனடிப்படையில் 15வயதைப் பூர்த்தி செய்து முதற்தடவையாக தேசிய அடையாள அட்டையை பெற்றுக்கொள்வதற்கு ஒருவர் 100ரூபா செலுத்தல் வேண்டும்.

தேசிய அடையாள அட்டையைத்திருத்தி இணைப்பிரதியைப் பெற்றுக்கொள்வதற்கு 250ரூபாவும் தொலைந்த தேசிய அடையாள அட்டைக்குப்பதிலாக இணைப்பிரதியைப் பெற்றுக்கொள்வதற்கு 500ரூபாவும் பெற்றுக்கொள்ளப்பட்டு வருகின்றன. கடந்த காலத்தில் இத் தண்டப்பணத்தில் வசதியற்றவர்களுக்கு கிராம அலுவலகர் ஊடாக பிரதேச செயலாளருக்கு சிபாரிசு வழங்கும் பட்சத்தில் இத்தண்டப்பணம் விலக்கழிக்கப்பட்டிருந்தது.

எனினும் தற்போது அத்திட்டம் நிறுத்தப்பட்டு இத்தண்டப்பணங்கள் கட்டாயமாக்கப்பட்டுள்ளதால் பலர் இந்நடவடிக்கையினால் அவல நிலைக்குச் சென்றுள்ளனர்.

இதனால் தேசிய அடையாள அட்டையைத் தொலைத்த ஒருவர் 500ரூபா தண்டம், முத்திரைச் செலவுகள் புகைப்படம் உட்பட 1100ரூபாவிற்கு மேல் செலவு ஏற்பட்டுள்ளதாகவும் மேலும் தெரிவித்துள்ளனர்.(9-299)

# நைற்றா பரீட்சார்த்திகளுக்கு அறிவித்தல்

(நெளுக்குளம்)

வவுனியா (NAITA) நைற்றா ஊடாக NVQ - RPL சான்றிதழைப் பெற்றுக் கொள்வதற்கு விண்ணப்பித்தவர்களுக்கான அறிவு மதிப்பீட்டுப்பரீட்சை இடம்பெறவுள்ளதாக NAITA முகாமையாளரினால் அறிவிக்கப்பட்டுள்ளது.

எதிர்வரும் 27, 28 சனிக்கிழமை மற்றும் ஞாயிற்றுக்கிழமைகளில் வவுனியா தமிழ் மத்திய மகா வித்தியாலயத்தில் இடம்பெறவுள்ளது.

விண்ணப்பித்தவர்கள் தமது அடையாள அட்டைகளுடன் சமுகமளிக்குமாறு கோரப்பட்டுள்ளது. (9-299)

# புளியம்பொக்கணை நாகதம்பிரான் ஆலய தேர்த்திருவிழா

(கண்டாவளை)

கிளிநொச்சி கரைச்சி புளியம்பொக்கணை நாகதம்பிரான் ஆலயத்தின் வருடாந்த மஹோற்சவ விஞ்ஞாபனம் கடந்த 21ஆம் திகதி ஆரம்பமாகி நடைபெற்று வருகின்றது.

எதிர்வரும் 28ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை வேட்டைத்திருவிழாவும் 29ஆம் திகதி சப்பறத்திருவிழாவும் 30ஆம் திகதி தேர்த்திருவிழாவும் 31ஆம்திகதி புதன்கிழமை தீர்த்தத் திருவிழாவும் நடைபெறவுள்ளது.(9-315)

# புதுக்குடியிருப்பில் சட்டவிரோத மண் அகழ்வால் கடல்நீர் உட்புகும் அபாயம்

(அக்கராயன்)

முல்லைத்தீவு புதுக்குடியிருப்பின் சுதந்திரபுரம், மூங்கிலாறு, இருட்டுமடு ஆகிய பகுதிகளில் தொடர்கின்ற மணல் அகழ்வினால் கடல்நீர் உட்புகுகின்ற அபாயம் உருவாகி உள்ளதாக அப்பகுதி பொது அமைப்புகள் தெரிவிக்கின்றன.

2009 ஆம் ஆண்டின் பின்னர் இப்பகுதிகளில் பெருமளவு மணல் அகழ்வு நடைபெறுகின்றது. இதனைத் தடுப்பதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்படுவதில்லை.

இதன் காரணமாக கடல் நீர் உட்புகுந்து பெருமளவு அழிவுகளை ஏற்படுத்த உள்ளது. இப்பகுதிகளில் கடல் நீர் உட்புகுமானால் ஆயிரக்கணக்கான ஏக்கர் பயிர்ச் செய்கை நிலங்கள் உவர் நிலங்களாக மாறும். நன்னீர் நீர் நிலைகள் உவர் நீராக மாறும். உடையார்கட்டுக் குளத்தின் கீழான பெருமளவு வயல் நிலங்கள் பயிர்ச் செய்கை மேற்கொள்ள முடியாத நிலைமை ஏற்படும். எனவே மேற்படி கிராமங்களில் நடைபெறுகின்ற மணல் அகழ்வினைத் தடுத்து நிறுத்துவதற்கு அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வேண்டும். நடவடிக்கை எடுக்கத் தவறும் பட்சத்தில் கடல் நீர் உட்புகுவதற்கான சூழ்நிலை உருவாகும் எனவும் இப்பகுதி பொது அமைப்புகள் தெரிவிக்கின்றன. (9-350)

# மதுபோதையில் சாரத்தியம்; 76 ஆயிரம் ரூபா தண்டம்

(குருமன்காடு)

மது போதையில் மோட்டார் சைக்கிள் ஆவணங்களின்றி பயணித்தவருக்கு வவுனியா நீதவான் நீதிமன்றால் 76 ஆயிரம் ரூபாய் தண்டமாக அறிவிடப்பட்டது.

மது போதையில் மோட்டார் சைக்கிள் காப்புறுதிப்பத்திரம், வரிப்பத்திரம் இன்றி பயணித்த நபர் ஒருவரை வவுனியா போக்குவரத்து பொலிஸார் நேற்று முன்தினம் கைது செய்திருந்தனர்.

குறித்த நபரை நேற்று நீதிமன்றில் முற்படுத்திய போது மது போதையில் வாகனம் செலுத்தியமை, காப்புறுதிப் பத்திரம் இல்லாமல் பயணித்தமை, வரி பத்திரம் இல்லாமல் பயணித்தமை ஆகிய 3 குற்றச்சாட்டுக்களின் கீழ் குறித்த நபருக்கு 76 ஆயிரம் ரூபாய் குற்றப் பணமாக செலுத்த நீதிமன்று உத்தர விட்டது. (9-250)

# கேப்பாபிலவு மாதிரிக் கிராமத்தின் குடிநீர் பிரச்சினையை தீர்க்க கோரிக்கை

(அக்கராயன்)

முல்லைத்தீவு கேப்பாபிலவு மாதிரிக் கிராமத்தில் ஏற்பட்டுள்ள குடிநீர் நெருக்கடிக்கு அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வேண்டும் என பொதுமக்கள் வேண்டு கோள் விடுத்துள்ளனர்.

நலன்புரி முகாம்களில் இருந்து கேப்பாபிலவு மாதிரிக் கிராமத்தில் மக்கள் குடியேற்றம் செய்யப்பட்டனர். இதன்போது ஆழ்துளைக் கிணறுகள் பத்திற்கு மேற்பட் டவை அமைக்கப்பட்டன. ஆனால் இதில் பல கிணறுகள் தற்போது பழுதடைந்த நிலையில் காணப்படுவதன் காரணமாக குடிநீர் நெருக்கடி ஏற்பட்டுள்ளது.

கரைதுறைப்பற்று பிரதேச சபை குடிநீர் வழங்கலினை அதிகரிக்க வேண்டும்.பழுதடைந்த ஆழ்துளைக் கிணறுகளை திருத்தம் செய்ய வேண்டும் என கேப்பாபிலவு மாதிரிக் கிராம மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (9-350)

# கமக்கார அமைப்புக்களின் கவனக்குறைவால் அறுவடையில் வீழ்ச்சி ஏற்பட வாய்ப்பு

## கிளி/அரச அதிபர் தெரிவிப்பு

(கண்டாவளை)

கிளிநொச்சி மாவட்டத்தில் மேற்கொள்ளப்பட்டுள்ள சிறுபோக செய்கையில் கமக்கார அமைப்புக்களின் கவனயீனமான குறைபாடுகள் காரணமாக அறுவடைகளில் வீழச்சி ஏற்பட வாய்ப்புக்கள் காணப்படுவதாக மாவட்ட அரச அதிபர் சுந்தரம் அருமைநாயகம் தெரிவித்துள்ளார்.

கிளிநொச்சி மாவட்ட விவசாய ஒருங்கிணைப்புக்குழுக் கூட்டம் நேற்று முன்தினம் அரசாங்க அதிபர் தலைமையில் நடைபெற்றது. இதில் உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அவர், தொடர்ந்து உரையாற்றுகையில், தற்போது சிறுபோக அறுவடைகள் நடைபெற்று வருகின்றன.

வரட்சியான காலநிலை நிலவினாலும் வரட்சியால் அழிவுகள் ஏற்பட்டதாக முறைப்பாடுகள் எதுவும் கிடைக்கப்பெறவில்லை. நல்ல அறுவடை கிடைக்கக் கூடிய வாய்ப்புக்கள் உள்ளன.

நீர் விரயமாதல் அல்லது முறையற்ற நீரின் பயன்பாடுகள் தொடர்பில் சில கமக்கார அமைப்புக்கள் தவறாக நடந்துள்ளன. கமக்கார அமைப்புக்களின் கவனயீனமான குறைபாடுகள் காரணமாகவே அறுவடைகளில் வீழ்ச்சி ஏற்பட வாய்ப்புக்கள் காணப்படுகின்றன.

சிறுபோகத்தில் அறுவடை செய்யப்படும் நெல்லை கொள்வனவு செய்வதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

பலநோக்கு கூட்டுறவுச் சங்கங்கள் இதில் ஆர்வம் காட்டுவதாக இல்லை. சத்துணவுகளை வழங்குவதும் நிவாரணங்களை வழங்குவதிலும் தான் வேலையாகவுள்ளது. பலநோக்குக் கூட்டுறவுச்சங்கங்கள் நெல்லை கொள்வனவுசெய்ய வேண்டும்என அவர் மேலும் தெரிவித்தார். (9-315)

# முல்லைத்தீவில் நிலை கொண்டுள்ள வெளிமாவட்ட கடற்றொழிலாளர்களால் உள்ளூர் மக்களுக்கு நெருக்கடி

(அக்கராயன்)

முல்லைத்தீவு சாலையில் நிலை கொண்டுள்ள வெளி மாவட்ட கடற்றொழிலாளர்கள் புதுக்குடியிருப்பு எரிபொருள் நிலையத்தில் மிக அதிகமாக மண்ணெண்ணெயைக் கொள்வனவு செய்வதன் காரணமாக உள்ளூர் கடற்றொழிலாளர்கள் மற்றும் பொதுமக்கள் மண் ணெண்ணெயைப் பெற்றுக் கொள்வதில் நெருக்கடியை எதிர்கொண்டுள்ளனர்.

புதுக்குடியிருப்பு எரிபொருள் நிலையத்திற்கு ஓரளவான மண்ணெண்ணெய் கொழும்பில் இருந்து எடுத்து வரப்படும் நிலையில் சாலைப் பகுதியில் சட்ட விரோத மீன்பிடியில் ஈடுபடும் வெளி மாவட்டங்களைச் சேர்ந்தவர்கள் வாகனங்களில் வந்து பரல் பரல்களாக மண்ணெண்ணெயைக் கொள்வனவு செய்வதன் காரணமாக உள்ளூர் கடற்றொழிலாளர்கள், விவசாயிகள் மற்றும் பொதுமக்கள் மண்ணெண்ணெய் புதுக்குடியிருப்பில் இல்லாததன் காரணமாக கிளிநொச்சி, பரந்தன் எரிபொருள் நிலையத்திற்கே செல்ல வேண்டி உள்ளதாகவும் தெரிவிக்கின்றனர்.

இதேவேளை முல்லைத்தீவு கரைதுறைப்பற்றின் எரிபொருள் நிலையத்திற்கு 6.600 லீற்றர் மண்ணெண்ணெய் கொழும்பில் இருந்து எடுத்து வரப்படும் நிலையில் 18.000 லீற்றர் வரையான எரிபொருள் தேவைப்படுவதாகவும் எரிபொருள் தேவை உள்ளூர் கடற்றொழிலாளர்கள் மற்றும் விவசாயிகளுக்கே அதிகமாக உள்ளதாகவும் சுட்டிக்காட்டப்படுகின்றது.

எனவே கரைதுறைப்பற்று, புதுக்குடியிருப்பு எரிபொருள் நிலையங்களில் கூடுதலான மண்ணெண்ணெய் விநியோகம் செய்வதற்கு அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் பொதுமக்களால் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. (9-350)



(படம்-அக்கராயன் செய்தியாளர்)

விடத்தல் பளையில் மீள்குடியேற்றம் மற்றும் வடக்கு அபிவிருத்தி அமைச்சின் 5 மில்லியன் ரூபா நிதி உதவியுடன் புதிதாக நிர்மாணிக்கப்பட்ட ஆரம்ப சுகாதார நிலையத்திற்கான கட்டடத்தை பாராளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன் கடந்த சனிக்கிழமை திறந்து வைத்தார்.

இந்த நிகழ்வில் பிராந்திய சுகாதார வைத்திய அதிகாரி மற்றும் பச்சிலைப்பள்ளி பிரதேச சபையின் தவிசாளர் சுப்பிரமணியம் சுரேன், சாவகச்சேரி உதவித் திட்டமிடல் பணிப்பாளர் மற்றும் பச்சிலைப்பள்ளி பிரதேச சபையின் உப தவிசாளர், உறுப்பினர்கள் மற்றும் பொது அமை ப்புகள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.




# அதிபரை நியமிக்க கோரிக்கை

(அக்கராயன்)

முல்லைத்தீவு வித்தியானந்தாக் கல்லூரிக்கு அதிபரை நியமிப்பதற்கு நடவடிக்கை எடுக்குமாறு கரைதுறைப்பற்று பிரதேச ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

முல்லைத்தீவு மாவட்டத்தில் உள்ள தேசிய பாடசாலைகளில் ஒன்றான முல்லைத்தீவு முள்ளியவளை வித்தியானந்தாக் கல்லூரி கடந்த ஆண்டு புரட்டாதி மாதத்தில் இருந்து அதிபர் இல்லாமல் இயங்கி வருகின்றது. தேசிய பாடசாலை என்பதன் காரணமாக வடமாகாண கல்வி அமைச்சு அதிபரை நியமிக்க முடியாது.

அரசாங்க கல்விச் சேவை ஆணைக்குழு அதிபரை நியமிக்க வேண்டும். வடமாகாண கல்விப் பணிப்பாளர் இதற்கான சிபார்சினை மட்டும் செய்யலாம். இந்நிலையில் அதிபர் இல்லாமல் இயங்கும் முள்ளியவளை வித்தியானந்தாக் கல்லூரி பல்வேறு பின்னடைவுகளை சந்தித்து வருவதாகவும் தேசிய பாடசாலைகள் எனக்காரணம் கூறி அதிபரை நியமிக்காமல் இருப்பதன் காரணமாக மாணவர்களின் கல்வி பாதிக்கப்படுகின்றது.

இந்நிலையில் அதிபரை நியமிப்பதற்கு இப் பிரதேச ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் கோரிக்கை விடுக்கப்பட்டது. (9-350)



கிளிநொச்சி கரைச்சி பிரதேச சபையின் நடமாடும் சேவை கடந்த திங்கட்கிழமை கிளிநொச்சி கணேசபுரம் பகுதியில் சபையின் தவிசாளர் அ.வேழ மாலிகிதன் தலைமையில் இடம் பெற்றது. பிரதேச சபையினால் சேவையைப் பெற்றுக்கொள்ளக் கூடிய 15 விடயங்களை உள்ளடக்கி குறித்த நடமாடும் சேவை ஆரம்பிக்கப்பட்டது. பிரதேச சபையினால் எடுக்கப்பட்ட தீர்மானத்திற்கமைய முதலாவது நடமாடும் சேவையாக குறித்த பகுதியில் முன்னெடுக்கப்பட்டது.

வீதி அபிவிருத்தி, கழிவகற்றல், ஆயுள்வேத மருத்துவம், வர்த்தக நிலையங்களுக்கான அனுமதி வழங்கல், சுகாதார பரிசோதனை, ஆதனவரி தொடர்பான ஆலோசனைகள் உள்ளிட்ட பல விடயங்கள் குறித்த நடமாடும் சேவையின் ஊடாக மக்களுக்கு வழங்கப்பட்டது. (படம்-பரந்தன் செய்தியாளர்)

# வெளிநாட்டு அகதிகள் நீர்கொழும்புக்கு செல்ல விருப்பம் தெரிவிப்பு

(நெளுக்குளம்)

வவுனியா பூந்தோட்டம் நலன்புரி நிலையத்தில் தங்கவைக்கப்பட்டுள்ள வெளிநாட்டு அகதிகளில் ஒரு தொகுதியினர் அங்கிருந்து நீர்கொழும்பிற்கு திரும்புவதற்கு விருப்பம் தெரிவித்துள்ளதாக புனர்வாழ்வு நிலையத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

கடந்த 21.04 கொழும்பில் இடம்பெற்ற தற்கொலை தாக்குதல் காரணமாக நீர்கொழும்பில் தங்க வைக்கப்பட்டிருந்த வெளிநாட்டு அகதிகள் 113 பேர் பூந்தோட்டம் புனர்வாழ்வு நிலையத்தில் தங்கவைக்கப்பட்டிருந்தனர்.

இதில் அண்மையில் வவுனியா விலிருந்து நீர்கொழும்பு முகாமிற்கு 20 பேர் தமது சுய விருப்பின் காரணமாக சென்றுள்ளனர்.

இந்நிலையில் தற்போது 15 பேர் பூந்தோட்டம் நலன்புரி நிலையத்திலிருந்து நீர்கொழும்பிற்கு தமது சுயவிருப்பில் செல்ல விரும்பம் தெரிவித்துள்ளதாக பூந்தோட்டம் புனர்வாழ்வு நிலையத் தகவல்கள் தெரிவித்துள்ளன.

வவுனியாவில் குறித்த அகதிகளை தங்கவைப்பதற்கு பல்வேறு தரப்பினரிடமிருந்தும் பலவிதமான எதிர்ப்புக்கள் வெளிவந்திருந்தமை என்பது குறிப்பிடத்தக்கது. (9-299)

# கர்நாடகாவில் ஆட்சிக் கவிழ்ப்பு மக்களுக்கு ஏற்பட்ட தோல்வி

## ராகுல் காந்தி தெரிவிப்பு





(டில்லி)

கர்நாடகத்தில் குமாரசாமி ஆட்சி கவிழ்ந்தது மக்களுக்கு ஏற்பட்ட தோல்வி என காங்கிரஸ் தலைவர் ராகுல் காந்தி தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பாக அவர் வெளியிட்டுள்ள டுவிட்டர் பதிவிலேயே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் வெளியிட்டுள்ள பதிவில், "பேராசை வெற்றி பெற்றுள்ளது. இது ஜனநாயகத்துக்கும், நேர்மைக்கும், கர்நாடக மக்களுக்கும் ஏற்பட்ட தோல்வி" எனத் தெரிவித்தார்.

கர்நாடக சட்டசபையில் நேற்று முன்தினம் செவ்வாயக்கிழமை நடைபெற்ற நம்பிக்கை வாக்கெ டுப்பில் முதல்வர் குமாரசாமி அரசு தோல்வியை தழுவியது.

அவருக்கு ஆதரவாக 99 வாக்குகளும் எதிராக 105 வாக்குகளும் கிடைத்தன. நம்பிக்கை வாக்கெடுப்பில் குமாரசாமி அரசு தோல்வியை தழுவியதால் அவர் தனது பதவியை இராஜினாமா செய்தார். இதனையடுத்து அவர் அளித்த இராஜினாமா கடிதத்தை ஆளுநர் வஜுபாய் வாலா ஏற்றுக் கொண்டார். (ஐ)

# நம்பிக்கைத் தீர்மானம் தோல்வி; ஜனநாயகத்திற்கு கிடைத்த வெற்றி

## எடியூரப்பா தெரிவிப்பு

(பெங்களூர்)

நம்பிக்கை தீர்மானம் தோல்வியடைந்தது, ஜனநாயகத்திற்கு கிடைத்த வெற்றி என்று எடியூரப்பா தெரிவித்துள்ளார்.

கர்நாடக சட்டசபையில் முதலமைச்சர் குமாரசாமி கொண்டு வந்த நம்பிக்கை வாக்கெடுப்பு தீர்மானம் தோல்வி அடைந்தது. அதன் பின்னர் கர்நாடக பா.ஜனதா தலைவரும், முதலமைச்சராக பொறுப்பேற்க உள்ளவருமான எடியூரப்பா நிருபர்களுக்கு பேட்டியளித்தார். அப்போது அவர் தெரிவித்ததாவது.


நம்பிக்கை வாக்கெடுப்பு தீர்மானம் தோல்வியடைந்தது ஜனநாயகத்திற்கு கிடைத்த வெற்றி ஆகும். மாநிலத்தில் கடந்த 14 மாதங்களாக நடைபெற்று வந்த குமாரசாமி அரசின் மோசமான செயற்பாடுகளால் மக்கள் வெறுப்பில் இருந்தனர்.


அடுத்து வரும் நாட்களில் வளர்ச்சி பணிகளை மேற்கொள்வோம். வரட்சியால் பாதிக்கப்பட்டுள்ள விவசாயிகளுக்கு உதவ நடவடிக்கை எடுக்கப்படும். விவசாயிகளின் நலனில் அதிக அக்கறை செலுத்துவோம் என்றும் எடியூரப்பா தெரிவித்தார்.

பா.ஜனதா சிரேஷ்ட தலைவர் ஆர்.அசோக் நிருபர்களிடம் தெரிவிக்கையில், "குமாரசாமி அரசு கவிழ்ந்துவிட்டது. இதன் மூலம் கர்நாடகத்தை பிடித்திருந்த கிரகணம் அகன்று விட்டது.

நாளை பா.ஜனதா எம்.எல்.ஏ.க்கள் கூட்டம் நடக்கிறது. அதில் சட்டசபை கட்சி தலைவர் தேர்ந்தெடுக்கப்படுவார். அதன் பின் நாங்கள் ஆட்சி அமைக்க ஆளுநரிடம் உரிமை கோருவோம்" என்றார். (ஐ)

# மும்பையில் கனமழை போக்குவரத்து பாதிப்பு





(மும்பை)

மும்பையில் நேற்றுக் காலை முதல் கனமழை பெய்து வரும் நிலையில் வீதிகள், தண்டவாளத்தில் தண்ணீர் தேங்கியதால் போக்குவரத்து பாதிக்கப்பட்டுள்ளது.

மகாராஷ்டிரா மாநிலத்தின் மும்பையில் கடந்த சில நாட்களாக கனமழை பெய்து வருகிறது.

இந்நிலையில், நேற்றுக் காலை முதல் மும்பையின் பல் வேறு பகுதிகளில் பரவலாக கனமழை பெய்து வருகிறது. குறிப்பாக, சயான், அந்தேரி உள்ளிட்ட பகுதிகளிலும், தானே உள்ளிட்ட புறநகர் பகுதிகளிலும் தொடர்ந்து மழை பெய்து வருகிறது. இதனால் பல இடங்களில் வீதிகளில் மழைநீர் தேங்கி உள்ளது.

அதிகாலை முதல் மழை கொட்டியதால் பாடசாலை கல்லூரி, அலுவலகம் செல்வோர் கடும் அவதிப்பட்டு வருகின்றனர். அங்கு போக்குவரத்து நெரிசலும் ஏற்பட்டுள்ளது.

கனமழையால் வீதிகள் மற்றும் தண்டவாளங்களில் தண்ணீர் சூழ்ந்துள்ளது. இதனால் போக்குவரத்து பாதிப்படைந்துள்ளது.

அந்தேரியில் கனமழை பெய்த நிலையில் நேற்று அதிகாலை தொடர்ந்து 3 கார்கள் மோதிக் கொண்டன. இதில் 8 பேர் காயமடைந்தனர் என அதிகாரிகள் தெரிவித்தனர். (ஐ)

## தென்கொரியா ...

# அத்துமீறி நுழைந்த... போர் விமானங்கள...

(சியோல்)

தென்கொரியா வான்பரப்பில் அத்துமீறி நுழைந்த ரஷ்ய, சீனப் போர் விமானங்களை விரட்டியடித்ததாக தென்கொரிய இராணுவ அமைச்சகம் தெரி வித்துள்ளது.



தென் கொரியாவின் கிழக்கு கடலோரப் பகுதியில் உள்ள வான்வழி மண்டலத்துக்குள் ரஷ்யா மற்றும் சீனாவின் போர் விமானங்கள் நுழைந்ததாகவும், தங்கள் இராணுவம் அவற்றை விரட்டியடித்ததாகவும் தென் கொரிய இராணுவ அமைச்சகம் தெரிவித்துள்ளது.

இதுகுறித்து அமைச்சகத்தின் சிரேஷ்ட அதிகாரி தெரிவிக்கையில், "3 ரஷ்யப் போர் விமானங்களும், சீனாவின் 2 போர் விமானங்களும் தென்கொரிய வான்பரப்புக்குள் அத்துமீறி நுழைந்தன. அதனைத்...

# ஈரானின் மற்றுமொ... விமானத்தையும்...

## அமெரிக்க அதிக...

(டெஹ்ரான்)

ஈரானின் மற்றுமொரு ஆளில்லா விமானத்தின் மீதும் அமெரிக்கக் கடற்படை கப்பல் தற்பாதுகாப்பு தாக்குதலை மேற்கொண்டது எனத் தெரிவித்துள்ள அமெரிக்க அதிகாரிகள் இந்த ஆளில்லா விமானமும் வீழ்த்தப்பட்டிருக்கலாம் எனத் தெரிவித்துள்ளனர்.

அமெரிக்காவின் மத்திய கட்டளை பீடத்தின் தளபதி ஜெனரல் கெனெத் மக்கன்சி இதனை தெரிவித்துள்ளார்.

கடந்த வியாழக்கிழமை ஒரு ஆளில்லா விமானத்தை நாங்கள் சுட்டு வீழ்த்தினோம். அது உறுதியான விடயம் எனத் தெரிவித்துள்ள மக்கன்சி இரண்டாவது ஆளில்லா விமானத்தின் மீதும் தாக்குதலை நடத்தினோம். அதுவீழ்த்தப்பட்டிருக்கலாம் எனத் தெரிவித்துள்ளார்.

இரு டிரோன்கள் மீது நாங்கள் வெற்றிகரமான தாக்குதல்களை ஏதிர்கொண்டுள்ளோம் என நாங்கள் நம்புகின்றோம். இன்னும் பல தாக்குதல்கள் இடம்பெற்றிருக்கலாம். ஆனால் இந்த...

# பாகிஸ்தானில் 40 பயங்... குழுக்கள் செயற்பட்டு வ...

## இம்ரான்கான் அதிர்ச்சித்தகவல்

(வோஷிங்டன்)

பாகிஸ்தானில் 40 பயங்கரவாதக் குழுக்கள் செயற்பட்டு வருகின்றன என்று பிரதமர் இம்ரான்கான் தெரிவித்தார்.

பாகிஸ்தான் பிரதமர் இம்ரான்கான் 3 நாள் அரசு பயணமாக அமெரிக்காவுக்கு விஜயம் செய்துள்ளார்.

வெள்ளை மாளிகையில் ஜனாதிபதி ட்ரம்பை, இம்ரான்கான் சந்தித்து பேசியபோது இரு நாட்டு இராணுவ ஒத்துழைப்பை பலப்படுத்துவது என இருவரும் உறுதி செய்தனர்.

பயங்கரவாதத்துக்கு எதிராக அமெரிக்காவுடன் இணைந்து பாகிஸ்தான் பணியாற்றி வருகிறது. அமெரிக்காவில் நடைபெற்ற இரட்டைக் கோபுரத் தாக்குதலில் பாகிஸ்தானுக்கு எந்த தொடர்பும் கிடையாது. அல்கொய்தா பயங்கரவாத அமைப்பு ஆப்கானிஸ்தானில் செயற்படுகிறது.

பாகிஸ்தானில் தலிபான் பயங்கரவா...

## ...பா வான்பரப்பில்
# ...ழந்த ரஷ்யா, சீனா
# ...கள் விரட்டியடிப்பு



...தொடர்ந்து தென்கொரிய இராணுவ விமானங்கள் அங்கு விரைந்து, அந்நிய நாட்டு விமானங்களை எச்சரிக்கும் வகையில் துப்பாக்கிச்சூடு நடத்தின. அதன் பின்னர் அந்த விமானங்கள் தென்கொரியா வான் பரப்பில் இருந்து திரும்பிச் சென்றன" எனத் தெரிவித்தார்.

மேலும் இந்த விவகாரம் தொடர்பாக தென்கொரியாவில் உள்ள ரஷ்யா மற்றும் சீனத் தூதரகங்களுக்கு மனு அனுப்பிக் கண்டனத்தைப் பதிவு செய்துள்ளதாகவும் இராணுவ அமைச்சகம் தெரிவித்துள்ளது. தென்கொரியாவில் ரஷ்ய இராணுவம் அத்துமீறி நுழைந்தது இதுவே முதல்முறை என்பது குறிப்பிடத்தக்கது. அதே சமயம் இந்த விவகாரம் தொடர்பாக ரஷ்யா மற்றும் சீனா எந்தவித கருத்தும் தெரிவிக்கவில்லை. (ஐ)

# நேபாளத்தில் நிலச்சரிவு எட்டுப் பேர் உயிரிழப்பு

(காத்மண்டு)

நேபாள நாட்டில் பெய்த கனமழை காரணமாக ஏற்பட்ட நிலச்சரிவில் சிக்கி 8 பரிதாபமாக உயிரிழந்தனர்.

நேபாளத்தில் கடந்த சில நாட்களாக பருவ மழை தீவிரம் அடைந்து வருகிறது. இதன் காரணமாக அந்நாட்டின் பல்வேறு பகுதிகளில் கனமழை கொட்டித் தீர்த்து வருகிறது.



இந்நிலையில், அந்நாட்டின் குல்கி மாவட்டத்தில் பெய்த கனமழை காரணமாக திடீரென நிலச்சரிவு ஏற்பட்டது. இந்த நிலச்சரிவில் 5 வீடுகள் மண்ணுக்குள் புதைந்தன. இதில் சிக்கி 8 பேர் பரிதாபமாக உயிரிழந்தனர். நிலச்சரிவில் சிக்கி 4 பேர் காணாமல் போயினர். மேலும் சிலர் படுகாயமடைந்தனர்.

தகவலறிந்த மீட்புக்குழுவினர் சம்பவ இடத்துக்கு விரைந்து காயமடைந்தவர்களை மீட்டு சிகிச்சைக்கு அனுப்பி வைத்தனர். மேலும் நிலச்சரிவில் சிக்கிய நபர்களை மீட்கும் பணியை தீவிரப்படுத்தினர். (ஐ)

# ...மொரு ஆளில்லா
# ...யும் தாக்கினோம்
## ...திகாரி தகவல்

இரண்டு தாக்குதல்களும் வெற்றிகரமானதாக அமைந்துள்ளன என நாங்கள் நம்புகின்றோம் என அவர் தெரிவித்துள்ளார்.

யுஎஸ்எஸ் பொக்சர் என்ற அமெரிக்க கடற்படை கப்பலில் இருந்து ஏவப்பட்ட ஆளில்லா விமான எதிர்ப்பு ஆயுதம் மூலமே ஈரானின் ஆளில்லா விமானங்கள் வீழ்த்தப்பட்டன என பென்டகன் அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

இதேவேளை கடந்த வியாழக்கிழமை ஆளில்லா விமானங்களை மாத்திரமல்லாமல் ஈரானின் ஹெலிகொப்டர் ஒன்றையும் சில கடற்படை படகுகளையும் அமெரிக்காவின் யுஎஸ்எஸ் பொக்சர் என்ற கடற்படை கப்பல் எதிர்கொண்டதாக அமெரிக்க அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

இதனைத் தொடர்ந்து பொக்சர் ஹெலிகொப்டர் ஒன்றை அனுப்பியது. அந்த ஹெலிகொப்டர் ஈரானின் ஹெலிகொப்டரிற்கு அருகில் சென்று அதனைப் பின்வாங்க செய்தது எனவும் அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். (ஐ)

# ...யங்கரவாத
# ...வருகின்றன

...திகள் கிடையாது. நாங்கள் அமெரிக்காவுடன் இணைந்து பயங்கரவாதத்துக்கு எதிராக பணியாற்றி வருகிறோம். துரதிர்ஷ்டவசமாக சில விடயங்கள் தவறாக நடந்து விட்டது.

இதற்கு எங்கள் நாட்டின் முற்கால அரசு தான் காரணம் என குற்றச் சாட்டுகிறேன். அங்கு உண்மையில் என்ன நடைபெறுகிறது என்பதை அமெரிக்காவிடம் சொல்லவில்லை.

பாகிஸ்தானில் பல்வேறு அமைப்புகளை சேர்ந்த 40 பயங்கரவாத குழுக்கள் செயற்பட்டு வருகின்றன. இதனால் பாகிஸ்தான் கடுமையான சூழலை எதிர்கொண்டுள்ளது. இதில் நாங்கள் வெற்றி பெறுவோமா? என எங்களை போன்றவர்கள்கவலைப்படுகின்றனர்

இந்நிலையில் பாகிஸ்தான் பயங்கரவாதத்துக்கு எதிராக அதிக நடவடிக்கை எடுக்க வேண்டும் என அமெரிக்கா எதிர்பார்க்கிறது.

பயங்கரவாதத்துக்கு எதிரான போரில் அமெரிக்கா வெற்றி பெற நாங்கள் உதவுகிறோம். சொந்த நாட்டில் உள்ள பயங்கரவாதிகளை நாங்கள் எதிர்த்து வருகிறோம்.

ஆப்கானிஸ்தான் விவகாரத்தை பொறுத்தவரை அது மிகவும் சிக்கலானது. ஆனால் நாங்கள் எங்களால் முடிந்த அளவு அதிகமாக உதவுவோம். ஒட்டு மொத்த நாடும், ராணுவமும், பாதுகாப்பு படைகள் என அனைத்தும் என் பின்னால் இருக்கிறது. ஆப்கானிஸ்தானில் அமைதியை நிலவ செய்வது என்ற அமெரிக்காவின் நோக்கமே எங்களின் நோக்கமும் ஆகும் என அவர் மேலும் தெரிவித்தார். (ஐ)

# மெக்சிக்கோவில் சிறிய விமானம் விழுந்து நான்கு பேர் உயிரிழப்பு

(மெக்சிகோசிட்டி)

மெக்சிகோ நாட்டில் சிறிய விமானம் விழுந்து நொறுங்கிய விபத்தில் பெண் உட்பட 4 பேர் பரிதாபமாக உயிரிழந்தனர்.

மெக்சிகோ நாட்டின் வடபகுதியில் உள்ள சிஹுவான் மாநிலம். இங்கு நேற்றுமுன் தினம் 4 பேர் சிறிய விமானம் ஒன்றில் பயணித்துக் கொண்டிருந்தனர்.

விமானம் புறப்பட்டுச் சென்ற சில நிமிடங்களில் நடுவானில் பறந்துகொண்டிருந்தபோது திடீரென வயல்வெளியில் விழுந்து நொறுங்கியது.

இந்தக் கோர விபத்தில் விமானத்தில் இருந்த 4 பேரும் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தனர். தகவலறிந்து அங்கு சென்ற மீட்புப் படையினர் பெண் உட்பட 4 பேரின் உடல்களை மீட்டனர். விபத்துக்கான காரணம் குறித்து விசாரணை நடைபெற்று வருகிறது. (ஐ)

# குடியேற்றவாசிகள் தொடர்பான உடன்படிக்கைக்கு எட்டு ஐரோப்பிய ஒன்றிய நாடுகள் இணக்கம்
## பிரான்ஸ் ஜனாதிபதி தெரிவிப்பு

(பாரிஸ்)

ஐரோப்பிய ஒன்றியத்தைச் சேர்ந்த 8 நாடுகள் மத்திய தரைக் கடலில் மீட்கப்படும் குடியேற்றவாசிகளின் மீள்குடியமர்த்தலை தம்மிடையே பகிர்ந்துகொள்ள இணங்கியுள்ளதாக பிரான்ஸ் ஜனாதிபதி இம்மானுவேல் மக்ரோன் தெரிவித்தார்.



ஆனால் மேற்படி நாடுகளில் இத்தாலி உள்ளடங்கவில்லை என அவர் தெரிவித்தார். பிரான்ஸின் பாரிஸ் நகரில் ஐரோப்பிய ஒன்றிய உள்துறை மற்றும் வெளிநாட்டு அமைச்சர்களுடன் இடம்பெற்ற பேச்சுவார்த்தைகளின்போது பிரான்ஸ் மற்றும் ஜேர்மனியால் முன்வைக்கப்பட்ட கொள்கைக்கு ஏனைய 6 நாடுகள் ஒப்புதலை அளித்துள்ளதாக மக்ரோன் தெரிவித்தார்.

ஐரோப்பிய ஒன்றியத்தில் குடியேற்றவாசிகள் தொடர்பான அளவு கடந்த வருகையை எதிர்கொண்டுள்ள நாடான இத்தாலி இந்தப் பேச்சுவார்த்தைகளை புறக்கணித்துள்ளது.

வலதுசாரி லீக் கட்சியின் தலைவரான இத்தாலிய உள்துறை அமைச்சர் மற்றியோ சல்வினி நாட்டில் குடிவரவு தொடர்பான கடும்போக்கை நோக்கி முன்னெடுத்துச் செல்வதற்கு தலைமை தாங்கி வருகிறார்.

அவர் பாரிஸ் நகரில் இடம்பெற்ற பேச்சுவார்த்தைகளில் பங்கேற்கவில்லை. அதேசமயம் ஐரோப்பிய ஒன்றிய நாடுகளான ஹங்கேரி மற்றும் போலந்து ஆகிய நாடுகள் குடியேற்றவாசிகள் தொடர்பில் கடும்போக்குக் கொள்கையை பின்பற்றி வருகின்றன.

இந்நிலையில் குடியேற்றவாசிகள் தொடர்பான சுமையை ஏற்க மறுத்துள்ள நாடுகளுக்கு ஐரோப்பிய ஒன்றியத்தின் கட்டமைப்பு நிதிகளை வழங்குவதற்குதான் இணக்கம் தெரிவிக்கப் போவதில்லை என மக்ரோன் தெரிவித்தார். ஐரோப்பிய ஒன்றிய உள்துறை மற்றும் வெளிநாட்டு அமைச்சர்களின் கூட்டத்தில் பிரான்ஸ் மற்றும் ஜேர்மனியால் முன்வைக்கப்பட்ட திட்டத்திற்கு 14 அங்கத்துவ நாடுகள் ஒப்புதல் அளித்துள்ளன.

அவற்றில் குரோஷியா, பின்லாந்து, பிரான்ஸ், ஜேர்மனி, அயர்லாந்து, லிதுவேனியா, லக்ஸம்பேர்க் மற்றும் போர்த்துக்கல் ஆகிய 8 நாடுகள் குடியேற்றவாசிகள் தொடர்பில் முன்னெடுக்கப்படும் ஸ்திரமான பொறிமுறைக்கு ஒத்துழைப்பை வழங்கவும் அதில் பங்கேற்கவும் இணக்கம் தெரிவித்துள்ளன. ஒப்புதலை அளித்துள்ள ஏனைய 6 நாடுகள் எவை என்பது தொடர்பில் விபரம் எதுவும் வெளியிடப்படவில்லை. (ஐ)

# ஜனாதிபதி வேட்பாளராகக் களமிறங்க சகல தகுதியும் எனக்கு உள்ளது

## சஜித் கூறுகிறார்



**(கொழும்பு)**

**ஐக்கிய தேசியக் கட்சியின் உயிர் நாடியாக இருக்கும் எனக்கு ஜனாதிபதித் தேர்தலில் வேட்பாளராகக் களமிறங்க சகல தகுதியும் உள்ளதென ஐக்கிய தேசியக் கட்சியின் பிரதித் தலைவரும் அமைச்சருமான சஜித் பிரேமதாஸ தெரிவித்துள்ளார்.**

ஐக்கிய தேசியக் கட்சியின் ஜனாதிபதி வேட்பாளராக அமைச்சர் சஜித் பிரேமதாஸ தெரிவு செய்யப்பட்டுள்ளார் எனவும் எனினும் ஜனாதிபதி வேட்பாளராகப் போட்டியிட அவருக்குத் தகுதி இல்லை எனக் கட்சியிலுள்ள சிலர் எதிர்ப்புத் தெரிவித்ததாகவும் தகவல்கள் வெளியாகியிருந்தன.

இந்நிலையில் இந்த விடயம் தொடர்பாக ஊடகமொன்றுக்கு கருத்து வெளியிடும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், "மக்கள் செல்வாக்கை அதிகம் கொண்டுள்ளவராகவும் ஐக்கிய தேசியக் கட்சியின் உயிர் நாடியாகவும் நான் இருக்கின்றேன். '2018 ஒக்டோபர் 26' அரசியல் சதிப் புரட்சியை முறியடித்து எமது கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவை மீண்டும் பிரதமர் கதிரையில் அமர்த்திய நடவடிக்கையில் எனது முழுமையான பங்கு இருந்தது. இதை பிரதமர் என்றுமே மறக்கமாட்டார்.

அரசியல் சதிப் புரட்சியின் போது ராஜபக்ஷ அணியினர் பல கோடி ரூபாய்களுக்கு என்னைப் பேரம் பேசி தமது பக்கம் இழுக்க முயன்றனர். ஆனால், ஐக்கிய தேசியக் கட்சியில் நான் கொண்டுள்ள உயிர்ப்பற்றுக் காரணமாக நீதியின் வழியில் நடந்தேன். கட்சிக்குத் துரோகமிழைக்காமல், தடம்புரளாமல் நின்றேன்.

இந்த நிலையில், ஜனாதிபதி வேட்பாளராகக் களமிறங்க எனக்குத் தகுதி இல்லை என்று சிலர் கூறுகின்றனர். பொறாமை பிடித்தவர்கள்தான் இப்படி என்னை விமர்சிக்கின்றார்கள். இந்த விமர்சனங்களைக் குப்பையில் தூக்கி வீசுங்கள்.

நான் முன்னாள் ஜனாதிபதி ரணசிங்க பிரேமதாஸவின் மகன். ஜனாதிபதித் தேர்தலில் வேட்பாளராகக் களமிறங்க சகல தகுதியும் எனக்கு உள்ளது. தந்தையின் வழியில் பயணிப்பேன். ஏழை மக்களின் கண்ணீரைத் துடைப்பேன். மூவின மக்களையும் அரவணைத்து நிரந்தர தீர்வைப் பெற்றுக் கொடுப்பேன்" என மேலும் தெரிவித்துள்ளார். (ஐ)

# 12 ஆயிரம் பட்டதாரிகளுக்கு வேலைவாய்ப்பு

## எஸ்.எம்.மரிக்கார் தகவல்



(கொழும்பு)

உள்வாரி மற்றும் வெளிவாரி பட்டதாரிகள் 12 ஆயிரம் பேருக்கு வேலைவாய்ப்புக்களைப் பெற்றுக்கொடுக்க அரசாங்கம் நடவடிக்கை எடுத்துள்ளதாக பாராளுமன்ற உறுப்பினர் எஸ்.எம். மரிக்கார் தெரிவித்தார்.

அலரிமாளிகையில் நேற்று முன்தினம் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

எதிர்வரும் 30,31 மற்றும் ஓகஸ்ட் முதலாம் திகதிகளிலேயே இவ்வாறு 12 ஆயிரம் பட்டதாரிகளுக்கு வேலைவாய்ப்புகளை பெற்றுக்கொடுக்க எதிர்பார்த்துள்தாகவும் 2013 ஆம் ஆண்டு முதல் 2018 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதிகளில் பட்டப்படிப்பினை நிறைவு செய்த மாணவர்களுக்கு இதனூடாக வேலைவாய்ப்பு கிடைக்கும்.


வெளிவாரிப் பட்டதாரிகளுக்கும் வேலைவாய்ப்பினை கொடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் அவர் இதன்போது மேலும் தெரிவித்தார். (ஐ)

# இந்தியாவிலிருந்து இலங்கைக்கு ரயில் எஞ்சின்கள், பெட்டிகள் இறக்குமதி

(கொழும்பு)

இலங்கை ரயில்வே சேவையில் ஒன்றிணைப்பதற்காக எஸ் 13 ரக இரட்டை எஞ்சின் பெட்டிகளும் எம் 11 ரக எஞ்சின்களும் இலங்கைக்குக் கொண்டுவரப்பட்டன.

இதுவரையில் எஸ் 13 ரக இரட்டை எஞ்சின் பெட்டிகளும் எம் 11 ரக எஞ்சின்களும் கொழும்புத் துறைமுகத்தில் இறக்கப்பட்டிருப்பதாக போக்குவரத்து மற்றும் சிவில் விமான சேவைகள் அமைச்சு தெரிவித்துள்ளது.



இதற்கு முன்னரும் இந்திய நிதி உதவியின் கீழ் எஸ் 13 ரக இரட்டை ரயில் பெட்டிகள் மூன்று இலங்கைக்குக்கொண்டு வரப்பட்டன.

இவ்வாறான எஸ் 13 ரக இரட்டை ரயில் பெட்டிகள் இரண்டு இந்தியாவில் இருந்து இறக்குமதி செய்யப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஐ)

# இன்று ஒரு தகவல்

தென்கச்சி கோ. சுவாமிநாதன்

## பதவிக் கர்வம்

ஒரே பாடசாலையிலே இரண்டு பேர் சேர்ந்து படித்தார்கள். அதிலே ஒரு பையன் பின்னர் ஒரு பெரிய பதவிக்கு வந்து விடுகின்றான். இன்னொருத்தன் சாதாரணமான நிலைமையிலே இருக்கின்றான்.

இவன் அவனைப் பார்ப்பதற்காகப் போகிறான். வாசலில் நிற்கின்றவரிடம் "என்னுடன் கூடப் படித்த நண்பனிடம் இன்னார் வந்திருக்கின்றேன்" என்று போய்ச் சொல்லு என்றான்.

அந்த ஆள் உள்ளே போய் வந்து ஐயா ரொம்ப வேலையாக இருக்கின்றார். இப்ப பார்க்க முடியாதாம். இன்னொரு நாளைக்கு வரச்சொல்லுகின்றார் என்றார். இவன் பேசாமல் திரும்பிப் போய் விட்டான்.

இது சாதாரணமாக நடக்கக் கூடிய நிகழ்ச்சி. இதற்கு என்ன காரணம் என்று நினைக்கின்றீர்கள்? பதவிக்கர்வம். "பெருக்கத்து வேண்டும் பணிவு" என்றார் திருவள்ளுவர். பதவி அதிகமாக அதிகமாகப் பணிவு அதிகமாக வேண்டும். அதுதான் பெருமை.

பதவிக்கர்வம் அந்த நிமிடத்திலே வேண்டும் என்றால் ஒரு சுகத்தைக் கொடுக்கலாம். பின்னர் அது ஒரு கட்டத்திலே அவமானத்திலே கொண்டு போய் விட்டுவிடும்.

மகாபாரதத்திலே வருகின்ற துருபதனே இதற்கு ஒரு நல்ல உதாரணம். துருபதன்-பாஞ்சால அரச குமாரன். துரோணர்-ஏழை.

பரத்வாஜ ஆச்சிரமத்திலே இவர்கள் இரண்டு பேரும் சேர்ந்து படிக்கின்றார்கள். மிகவும் நெருக்கமாகப் பழகுகின்றார்கள். நல்ல நண்பர்கள்.

குருகுல வாசம் முடிந்தது. துருபதன் பாஞ்சால தேசத்திற்கு ராஜாவாகி விடுகிறான். ஆனால் துரோணரோ வறுமையாலே மிகவும் கஷ்டப்படுகின்றார். தம் குழந்தைகளுக்கு பால் கொடுக்க ஒரு பசுகூட இல்லாத நிலைமையிலே ரொம்பத் தவிக்கின்றார். அவருடைய மனைவி பார்த்தார்!

"ஏன் இப்படி கவலைப்படுகின்றீங்கள்? துருபத ராஜாதான் உங்கள் நண்பன் என்று சொல்றீங்களே! அவரை போய்ப் பார்த்து விட்டு வாங்களேன்" என்றார்.

துரோணரும் சரி என்று சொல்லி விட்டு கிளம்பிப் போனார். துருபதனைப் பார்த்தார். "நண்பா என்னை ஞாபகம் இருக்கின்றதா?" என்றார். அப்போது பதவிக்கர்வம் துருபதனுக்கு கண்ணை மறைத்து விட்டது.

"ஓ! மூடரே! ஏழை-பணக்காரரோடும், மூடன்-அறிவாளியோடும், பயந்தாங்கொள்ளி-வீரனோடும் நட்பாக இருக்க முடியுமா?" என்று சொல்லி அவரை அவமானப்படுத்தி விட்டார்.

அதனுடைய விளைவு என்ன என்று தெரியுமா? காலம் மாறி விட்டது. துரோணர் அத்தினாபுரம் அரச குமாரர்களுக்கு ஆசிரியராகி விடுகிறார். அர்ச்சுனன் அவருடைய சிறந்த மாணவனாகி விடுகிறான்.

அவன் துருபதனை வென்று அவனைத் தேர்க் கல்லிலே கட்டி துரோணரிடம் கொண்டு வந்து நிறுத்தி விட்டான்.

அர்ச்சுனன் துரோணருக்குக் கொடுத்த குருதட்சணை இது! இவர் கேட்டதும் அதுதான். பழைய நட்பை மறந்த துருபதன் இப்போது தன்னுடைய இராச்சியத்தை இழந்து நின்றான். அவமானத்திலே துருபதன் தலைகுனிந்து நிற்கிறான். அப்போது துரோணர் சொல்கிறார்,

உன் இராச்சியத்திலே பாதியை நான் எடுத்துக் கொண்டேன். அதனால் இப்ப நாம் இரண்டு பேரும் சமம் ஆகி விட்டோம். இனிமேல் நாம் நண்பர்களாக இருக்கலாம் என்றார்.

இந்த புராணக் கதை வெறுமனே படிப்பதற்கோ கேட்பதற்கோ, மட்டுமல்ல, நம்மைப் பக்குவப்படுத்துவதற்கு!

பஜகோவிந்தத்திலே ஆதிசங்கரர் "மா குரு தன ஜனயௌவன கர்வம்" என்றார்.

அதாவது உன்னுடைய பணத்தைப் பற்றியோ, ஜன ஆதரவைப் பற்றியோ, உன் இளமையைப் பற்றியோ கவலைப்படாதே என்றார்.

ஏனென்றால் அடுத்த வரியிலேயே காலம் எல்லாவற்றையும் ஒரு நொடியில் அழித்து விடும் என்றார்.

இது புரியாமல் நடந்து கொள்வதனாலே தான் பல சந்தர்ப்பங்களிலே நாம் கஷ்டப்பட வேண்டி இருக்குது.

எனக்குத் தெரிந்த ஒருத்தர் தற்காலிகமாக அவருக்கு ஒரு தலைவர் பதவி கிடைத்தது. வேறு ஒன்றுமில்லை. ஒரு கூட்டத்திற்கு தலைமை தாங்குகின்ற பதவி.

அதற்கே அவர் தன்னைப் பற்றி மிகவும் பெரிதாக நினைக்க ஆரம்பித்து விட்டாரென்றால் பார்த்துக் கொள்ளுங்களேன்.

அவர் தலைமை தாங்கிக் கொண்டிருக்கிறார். ஒரு பேச்சாளர் எழுந்து வந்து மைக் முன்னால் வந்து நின்றார்.

பெரியோர்களே! தாய்மார்களே என்றார்! உடனே தலைவருக்குக் கோபம் வந்து விட்டது. முதலிலே தலைவர் அவர்களே என்று சொல்லுங்கள் என்றார்.

உடனே பேச்சாளர் மன்னித்துக் கொள்ள வேண்டும். தவறுதலாக நான் தலைவரையும் பெரியோர்கள் லிஸ்டிலே சேர்த்து விட்டேன் என்றார்.

# வடக்கு-கிழக்கில் தொல்பொருள் திணைக்களத்தால் ஏற்படுத்தப்படும் பிரச்சினைக்குத் தீர்வு எப்போது?

## நாடாளுமன்றில் டக்ளஸ் எம்.பி. கேள்வி

வடக்கு-கிழக்கில் தொல்பொருள் திணைக்களத்தால் ஏற்படுத்தப்படும் பிரச்சினைகளுக்கு தீர்வு எப்போது கிடைக்கும் என நாடாளுமன்றில் ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியின் செயலாளர் நாயகம் டக்ளஸ் தேவானந்தா கேள்வி எழுப்பியுள்ளார்.

நாடாளுமன்றில் நடைபெற்ற 27/2 கேள்வி நேரத்தின் போது வீடமைப்பு நிர்மாணத்துறை மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சர் சஜித் பிரேமதாஸவிடம் கேள்வி எழுப்பியிருந்த போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

வரலாற்றுச் சிறப்புமிக்க முல்லைத்தீவு, ஒட்டுசுட்டான் தான்தோன்றீஸ்வரர் ஆலயத்துடன் தொடர்புடைய ஈஸ்வர ஆலயம் அமையப்பெற்றிருந்ததான வாவெட்டி மலையானது முல்லைத்தீவு மாவட்டத்திலே உயர்ந்த மலையாகக் கருதப்படுகின்றது. இந்த மலையில் 1244 ஆம் ஆண்டு முதல் 1811 ஆம் ஆண்டு வரையிலான காலப்பகுதியில் வன்னியை ஆட்சி செய்திருந்த சிற்றரசர்களால் ஆலயம் அமைக்கப்பட்டு, வழிபாடுகள் மேற்கொள்ளப்பட்டு வந்தமைக்கான சான்றுகள் தற்போதும் அங்கு காணப்படுவதுடன், மலையின் உச்சியில் ஆலயம் அமைந்திருந்ததற்கான கற் தூண்கள், கொடி பீடம் ஆகியன காணப்படுகின்றன. இந்த மலைப் பகுதியானது தொல் பொருள் திணைக்களத்தின் தொல்பொருள் அடையாளச் சின்னமாக அடையாளப்படுத்தப்பட்டுள்ள நிலையில், கடந்த 10 ஆண்டுகளாக இம்மலைப் பகுதியில் கருங்கற்கள் அகழ்வுப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு நாளாந்தம் நூற்றுக்கணக்கான டிப்பர் வாகனங்களால் கற்கள் வெளியிடங்களுக்குக்கொண்டு செல்லப்படுவதாகக் கூறப்படுகின்றது. இதன் காரணமாக தொல்பொருள் இடங்கள் அழிக்கப்பட்டு வருவதாகவும் சில காலத்தில் முழு மலையும் அழிந்துவிடக் கூடிய அபாயம் ஏற்பட்டுள்ளதாகவும் அப்பகுதி மக்களால் குற்றஞ்சாட்டப்பட்டு வருகின்றது.

அதேநேரம், திருகோணமலை கன்னியா வெந்நீரூற்று, முல்லைத்தீவு செம்மலை நீராவியடிப் பிள்ளையார் கோவில், தண்ணீர் முறிப்புக்குளத்திற்கு அருகாமையிலுள்ள குருந்தூர் மலை, நுவரெலியா கந்தப்பளை மாடசாமி கோவில் மற்றும் வவுனியா வெடுக்குநாறி ஆதிலிங்கேஸ்வரன் ஆலயம் போன்ற இடங்களிலும் தொல்பொருள் திணைக்களம் சார்ந்து அண்மைக்காலமாக ஏற்படுத்தப்பட்டு வருகின்ற பிரச்சினைகள் காரணமாக மத மற்றும் இனங்களுக்கிடையிலான முரண்பாட்டு நிலைமைகள் தோற்றுவிக்கப்பட்டு வருகின்றன.

மேலும், இவை மட்டுமல்லாது வடக்கு, கிழக்கு மாகாணங்களில் தொல்பொருள் திணைக்களம் சார்ந்து பல்வேறு பிரச்சினைகள் உருவாக்கப்பட்டு, அத்தகைய எந்தவொரு பிரச்சினைக்கும் இதுவரையில் தீர்வுகள் எட்டப்படாத நிலையே காணப்படுகின்றது.

எனவே, இத்தகைய பிரச்சினைகள் எமது மக்களுக்கு உணர்வு ரீதியிலான தாக்கங்களையும், வாழ்வாதார மற்றும் வாழ்விடங்களுக்கான கேள்விக்குறியினையும் தொடர்ந்து ஏற்படுத்திக் கொண்டிருப்பதால், இப்பிரச்சினைகள் தீர்க்கப்படுவது மிகவும் அத்தியாவசியமாக இருக்கின்றது.

எனவே, நாட்டில் தொல்பொருள் இடங்கள் அடையாளப்படுத்துகின்றபோது, சிங்கள, தமிழ் மற்றும் முஸ்லிம் வரலாற்று ஆய்வாளர்களையும் இணைத்ததாக ஒரு அதிகார மிக்க குழுவை உருவாக்க முடியுமா?

மேற்படி குழுவைக் கொண்டு, இதுவரையில் வடக்கு, கிழக்கு மாகாணங்களில் தொல்பொருள் திணைக்களத்தினால் இனங்காணப்பட்டுள்ளதாகக் கூறப்படுகின்ற இடங்கள் தொடர்பில் மீள் பரிசீலனைகளைச் செய்ய முடியுமா?

அடையாளம் காணப்படுகின்ற தொல்பொருள் இடங்களைப் பாதுகாப்பதற்கென பலமிக்கதொரு பொறிமுறையை அமைக்க முடியுமா? என கோரிக்கை விடுத்துள்ளார். (9)

# இரணைமடுக்குள விசாரணை அறிக்கை விரைவுபடுத்தப்பட வேண்டும்-கணேஸ் வேலாயுதம்

(நெளுக்குளம்)

இரணைமடுக்குள விசாரணை அறிக்கை தொடர்பில் வடக்கு மாகாண ஆளுநர் கவனமெடுத்து விரைவாக வெளியிட வேண்டும் என மக்கள் முன்னேற்றக் கூட்டணி செயலாளர் கணேஸ்வரன் வேலாயுதம் கோரிக்கை விடுத்துள்ளார். அது தொடர்பாக அவர் அனுப்பியுள்ள அறிக்கையில்,

கடந்த வருடம் டிசெம்பர் மாதம் இரணைமடுக்குளத்திலிருந்து வெளியேறிய வெள்ளத்தினால் கிளிநொச்சி மாவட்ட மக்கள் முற்றாக பாதிக்கப்பட்டிருந்தனர்.

இது தொடர்பில் அதிகாரிகளின் அசமந்தப் போக்கு காரணமாக அனர்த்தங்கள் ஏற்பட்டதாக குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்பட்டிருந்தன. இதனால் இரணைமடுக்குள அனர்த்தம் தொடர்பில் வடமாகாண ஆளுனர் சுரேன் ராகவனால் 11.01.2019 இல் விசாரணைக் குழு நியமிக்கப்பட்டு விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு முதலாவது விசாரணை அறிக்கை ஆளுநரிடம் கையளிக்கப்பட்டிருந்தது.

முதலாவது அறிக்கையில் குள நிர்மாணத்தில் மோசடிகள் இடம்பெற்றிருப்பது தெரியவந்துள்ளதாக குறிப்பிட்ட வடமாகாண ஆளுநர் இரண்டாம் மூன்றாம் கட்ட விசாரணையினை மேற்கொள்ளப் பணித்திருந்தார்.

அதனைத் தொடர்ந்து இரண்டாம் மூன்றாம் கட்ட அறிக்கை ஆளுநருக்கு கிடைத்துள்ளதாக 29.06.2019 ஊடகமொன்றுக்கு தெரியப்படுத்தியிருந்தார்.

இது கிட்டத்தட்ட 300 பக்கங்களைக் கொண்டுள்ளதாகவும் குறித்த அறிக்கையினை சிங்கள மற்றும் ஆங்கில மொழிகளில் மொழிபெயர்ப்புச் செய்த பின் அதனை வெளியிடவுள்ளதாகவும் குறிப்பிட்டிருந்தார். அத்துடன் விசாரணை அறிக்கையை வெளியிடுவது தொடர்பில் சில பேர் ஒத்துழைப்பு வழங்கவில்லை எனவும் தெரிவித்திருந்தார்.

இவ்வாறு பாரியளவிலான மோசடிகள் இடம்பெற்றிருப்பது தெரியவந்தும் அறிக்கையினை வெளியிட்டு அதனுடன் தொடர்புடைய அதிகாரிகள் மீது நடவடிக்கை எடுப்பதற்கான ஏற்பாடுகளை இதுவரை ஆளுநர் மேற்கொள்ளாது இருப்பதன் காரணம் என்ன? உரிய அதிகாரிகள் மீது நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு தண்டனைகள் வழங்கப்பட்டால்தான் மீளவும் இவ்வாறான மோசடிகள் இடம்பெறுவதை தவிர்க்க முடியும்.

முல்லைத்தீவிலும் இன்னுமொரு செயற்றிட்டம் ஆரம்பிக்கவுள்ளதாக தகவல்கள் வெளிவந்துள்ளன. அது கிட்டத்தட்ட 500 மில்லியன் தொகையில் செயற்படுத்தப்படவுள்ளதாகவும் அறியப்பட்டுள்ளது.

இதேபோல் முன்னைய ஆண்டுகளில் நெல்சிப் திட்டம் கொண்டுவரப்பட்டு அத்திட்டத்திலும் பல்வேறு ஊழல்கள் இடம்பெற்றிருப்பது கண்டறியப்பட்டு விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டிருந்தன. தற்போது 3 வருடங்களாகியும் நெல்சிப் திட்ட அறிக்கையும் இதுவரை வெளியிடப்படவில்லை. மோசடிகளில் ஈடுபட்டவர்கள் மீதும் எந்தவொரு நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை எனத் தெரியவருகிறது.

தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் கீழ் நாம் அதற்கான தகவல்களையும் கோரியுள்ளோம். இதனைப்போலவே இரணைமடுக்குள விசாரணை அறிக்கைகள் மூடிமறைக்கப்பட்டு மோசடியில் ஈடுபட்டவர்கள் தண்டனைகளிலிருந்து தப்பித்து விடுவார்கள் என்ற அச்சம் ஏற்பட்டுள்ளது.

அறிக்கையினை மொழிபெயர்ப்பதாக குறிப்பிட்டு 3 வாரங்கள் கடந்துள்ள நிலையிலும் அறிக்கை தொடர்பில் எந்தவொரு நடவடிக்கையோ கருத்துமோ வெளியடப்படவில்லை. எனவே இது தொடர்பில் உரிய நடவடிக்கைகளை துரிதப்படுத்த வேண்டுமென மேலும் தெரிவித்துள்ளார். (9-299)

# கிராமிய வீதிகளை புனரமைக்கும் வேலைத்திட்டம் ஆரம்பம்



(நெளுக்குளம்)

பல தசாப்தகாலமாக புனரமைப்புச் செய்யப்படாத முத்தையன்கட்டு வீதி தார் வீதியாக புனரமைப்புச் செய்வதற்கான வேலைத்திட்டம் ஆரம்பிக்கப்பட்டது.

கிராமிய வீதிகளை தார் இட்டு புனரமைக்கும் வேலைத் திட்டத்தில் முத்தையன்கட்டு இடதுகரை வீதி இரண்டு கிலோ மீற்றர் தூரம் புனரமைப்புச் செய்வதற்கான 25.5 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கீட்டில் இவ் வேலைத்திட்டம் சிவமோகன் எம்.பியினால் ஆரம்பித்து வைக்கப்பட்டது.

கடந்த யுத்த காலத்தில் இந்தப் பாதையூடாக மக்கள் தங்களது உற்பத்திப் பொருட்களை வவுனியாவில் சந்தைப்படுத்தி வந்தார்கள். ஆனால் யுத்தம் நிறைவுற்ற பின் பாதை சீரின்மையால் பேருந்துகள் செல்வதில்லை. தற்போது புனரமைப்புச் செய்யப்படும் இந்த வீதியால் எமது உற்பத்திப் பொருட்களை நேரடியாக வவுனியாவில் சந்தைப்படுத்த முடியும் என்று மக்கள் தெரிவித்தார்கள். (9-299-350)

# முன்பள்ளி ஆசிரியர்களுக்கான நிரந்தர நியமனம் தொடர்பில் நாம் பேசுவோம்

## செல்வம்–எம்.பி

(முல்லைத்தீவு)

முன்பள்ளி ஆசிரியர்களுக்கு நிரந்தர நியமனம் கிடைப்பதற்கான ஒரு சந்தர்ப்பத்தை உருவாக்குகின்ற செயற்றிட்டங்கள் தொடர்பில் நாம் பேசுவோம் என வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன் தெரிவித்துள்ளார்.

முல்லைத்தீவு - ஐயங்கன்குளம், பாபு முன்பள்ளி சிறுவர் பூங்கா திறப்பு விழா நிகழ்வில் கலந்து கொண்டு கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் மேற்கண்டவாறு தெரி வித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் கருத்துத் தெரிவிக்கையில்,

முன்பள்ளி ஆசிரியர்கள் மற்றைய ஆசிரியர்களை விட கூடுதலாகப் போற்றப்பட வேண்டியவர்கள்.

ஏனெனில் எந்த ஒரு ஊதியமும் சரியான முறையில் கிடைக்காது தமது சொந்தப் பணத்தில் சேவையாற்ற வருகின்றவர்கள், உண்மையிலே அவர்களுக்கு ஒரு நிரந்தர நியமனம் கிடைப்பதற்கான வழி பிறக்க வேண்டும். அதற்கு நாம் தொடர்ந்து குரல்கொடுத்து வருகின்றோம்.

நிச்சயமாக அவர்களுக்கொரு நிரந்தர நியமனம் கிடைப்பதற்கான ஒரு சந்தர்ப்பத்தை உருவாக்குகின்ற செயற்றிட்டங்கள் தொடர்பில் நாம் பேசுவோம.

முன்பள்ளி ஆசிரியர்களை நிர ந்தரமாக்க முடியாத ஒரு சூழலிலே என்னுடைய மன வருத்தத்தினைத் தெரிவித்துக் கொள்கின்றேன் என மேலும் தெரிவித்தார். (9)

# மக்கள் எதிர்பார்க்கும் வேட்பாளரை உரிய நேரத்தில் களமிறக்குவோம்

## காவிந்த தெரிவிப்பு



(கொழும்பு)

மக்கள் எதிர்பார்க்கும் ஜனாதிபதி வேட்பாளரை உரிய நேரத்தில் களமிறக்குவோம் எனத் தெரிவித்த பாராளுமன்ற உறுப்பினர் காவிந்த ஜயவர்தன, ஐக்கிய தேசியக் கட்சி தலைமையிலான அரசாங்கத்திலே இளைஞர்களின் தேவைகள் நிறைவேற்றப்படும் என்றும்தெரிவித்தார்.

உத்தேச ஜனாதிபதித் தேர்தலில் யாரை வேட்பாளராகக் களமிறக்க வேண்டும் என்பது தொடர்பில் கட்சிக்குள் முறையான பேச்சுவார்த்தைகள் இடம் பெற்று வருகின்றன.

மாறுபட்ட பல கருத்துக்கள் காணப்படுகின்றன. ஒவ்வொரு தரப்பினரும் தங்களின் நிலைப்பாட்டை முன்வைத்துள்ளனர்.

இறுதியில் மக்கள் எதிர்பார்க்கும் ஒருவரை யே நாம் ஜனாதிபதி வேட்பாளராக களமிறக்குவோம் என்றும் அவர் தெரிவித்தார்.

ஐக்கிய தேசியக் கட்சியின் தலைமை காரியாலயத்தில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்துரைக்கையில் அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். (ஐ)

# தொடர்மாடி வீடுகளின் (Condominium) கூட்டுச் சொத்துரிமையும் அதன் பராமரிப்பும்

09

கலாநிதி க.தவலிங்கம்
தவிசாளர்–எல்லை நிர்ணய ஆணைக்குழு,
ஓய்வுநிலை நில அளவையாளர் நாயகம்.



❖ வேறு விவகாரங்கள் பற்றிய கலந்துரையாடல்.

❖ செயற்பாட்டுக் குழுவின் சரியான செயற்பாடு மற்றும் அதன் இருப்புக் குறித்த கலந்துரையாடல்

❖ உரிமையாளர்கள் / குடியிருப்பாளர்களுக்கான நெறிமுறைகளின் குறியீடு (ethics) அறிமுகப்படுத்தப்படலாம்.

### முகாமைத்துவ கழகத்தின் (Management Corporation) செயற்பாடும் அதன் விடயங்களில் கூட்டுரிமை ஆதன முகாமைத்துவ அதிகாரசபையின் (Condominium Management Authority) தலையீடும்

முகாமைத்துவ கழகத்தின் விடயங்கள் பற்றி அல்லது நிதி உறுதிப்பாடு பற்றிக் கூட்டுரிமை ஆதன முகாமைத்துவ அதிகாரசபைக்கு தன் சுய விருப்பு அல்லது முகாமைத்துவ கழகத்தின் உறுப்பினர்கள் பெரும்பாலானோரின் கோரிக்கையின் பிரகாரம் பரிசோதித்துப் பார்ப்பதற்கு அதிகாரம் உள்ளது. இத்தகைய கோரிக்கையொன்று கூட்டாட்சி சொத்தின் உரிமையாளர்களில் இருந்து சமர்ப்பிக்கப்படுவதெனின், உரிமையாளர்கள் 1/3 க்குக் குறையாத எண்ணிக்கையினர் கோரிக்கைக்காக கையொப்பமிட்டிருத்தல் வேண்டும்.

அவ்வாறே கூட்டுரிமை ஆதன முகாமைத்துவ அதிகாரசபைக்கு அத்தகைய விடயங்கள் பற்றி ஒரு தேடிப்பார்த்தலுக்காக எழுத்துருவிலான கட்டளை ஒன்றின் மூலம் தகுதியுள்ள ஒருவருக்கு அதிகாரம் வழங்கலாம்.

அத்தகைய பரீட்சிப்புப் பணிக்காக அதிகாரசபைக்கு அல்லது அதிகார சபையினால் அதிகாரமளிக்கப்பட்ட அதிகாரியொருவருக்கு

❖ முகாமைத்துவ கழகத்தின் எவரேனும் உறுப்பினரை அல்லது கூட்டு ஆதன சொத்தின் உரிமையாளர் அல்லது உறுப்பினர்களை விசாரணைக்காக அழைத்தல்

❖ முகாமைத்துவ கழகத்தின் பணிகளுடன் சம்பந்தப்பட்ட ஏதும் புத்தகமொன்றை அல்லது பதிவேடொன்றைச் சமர்ப்பிக்குமாறு கேட்டல்.

❖ கூட்டுரிமை ஆதனத்தின் உரிமையாளர்களது விசேட பொதுக்கூட்டமொன்றைக் கூட்டி இது தொடர்பாகக் கலந்துரையாடுதல்.

❖ முகாமைத்துவ கழகத்தின் கணக்குப் புத்தகங்களை அல்லது பதிவேடுகளைத்தனது பொறுப்பில்எடுத்தல்.

போன்ற விடயங்களில் தலையீடு செய்யும் விதத்தில் அதிகாரமுண்டென 1973ஆம் ஆண்டின் 11ஆம் இலக்க இருபிடிக்கூறுகள் சொத்தாண்மை சட்டத்தில் கூறப்பட்டுள்ளது.

இவ்வாறு முகாமைத்துவ கழகத்தின் விடயங்கள் அல்லது நிதி விடயங்கள் பற்றி உரியபடியான பரிசீலனை மேற்கொள்ளப்பட்டதன் பின்னர் பரிசீலனையின் அறிக்கைகள்/கட்டளைகள் பற்றி கூட்டுரிமை ஆதனச் சொத்துக்களின் உரிமையாளர்களுக்கு தெரியப்படுத்தல் வேண்டும். அவ்வாறு செய்யும்போது கூட்டுரிமை ஆதன முகாமைத்துவ அதிகாரசபையின் கட்டளைகளை முகாமைத்துவ கழகமும் அதன் உறுப்பினர்களும் பின்பற்றுதல் வேண்டும்.

முகாமைத்துவ கழகங்கள் தொடர்பாக மற்றும் அதன் நிதி விடயங்கள் தொடர்பாக மேற்கூறப்பட்ட வகையில் கூட்டுரிமை ஆதன முகாமைத்துவ அதிகார சபை செயற்படுவதற்கு பெரும்பாலும் இரு முக்கியமாக விடயங்களே காரணமெனக் காணப்பட்டுள்ளது.

அதில் முதலாவதாக முகாமைத்துவ கழகத்துக்குப் பணம் கிடைத்த விதம் மற்றும் அப்பணம் செலவிடப்பட்ட முறை தொடர்பான விடயங்கள் அடங்கிய கணக்குப் புத்தகங்கள் உரிய முறையில் பேணப்பட்டு வராமை மற்றும் மாதாந்தம் நடைபெறும் செலவுகள் பற்றிய சுருக்கம் முகாமைத்துவ கழக உறுப்பினர் அனைவரும் தெரிந்து கொள்வதற்காகக் காட்சிக்கு வைக்கப்படாமை போன்ற விடயங்களைக் குறிப்பிடலாம். இக் குறைபாடுகளினால் / தவறுகளினால் முகாமைத்துவ கழக உறுப்பினர்களிடையில் முகாமைத்துவ கழகத்தின் செயற்பாட்டுக் குழு அலுவலர்களின் முகாமைத்துவம் பற்றித் தவறான அபிப்பிராயங்கள் ஏற்படலாம்.

இரண்டாவது விடயம் முகாமைத்துவக் கழகத்தினால் நியமிக்கப்பட்ட கணக்குப் பரிசோதகர்களினால் முகாமைத்துவ கழகத்தின் கணக்குகள் ஆய்வு செய்யப்பட்டு பொதுக் கூட்டத்துக்குச் சமர்ப்பிக்கப்படாமையாகும். சில முகாமைத்துவ கழகத்தின் செயற்பாட்டுக் குழு அலுவலர்கள் கணக்காய்வு விடயங்கள் பற்றி அக்கறை காண்பிப்பது இல்லை.

இத்தகைய சந்தர்ப்பங்களில் முகாமைத்துவ கழகத்தின் உறுப்பினர்களிடையில் பிணக்கு நிலைமை உருவாவதுடன் அது முகாமைத்துவ கழ்க்த்தின் சரியான செயற்பாட்டுக்கு ஊறு விளைவிக்கும் என்பதைக் குறிப்பிடுதல் வேண்டும். ஆகையினால் அத்தகைய ஒரு நிலை ஏற்படுவதைத் தவிர்ப்பதற்காகத் வெளிப்படையாக செயற்படுதல் முகாமைத்துவக் கழகத்தின் செயற்பாட்டுக் குழு அலுவலர்களின் பொறுப்பாகும்.

இந்நிலைமைகளைத் தவிர்ப்பதற்காகச் செயற்பட வேண்டிய விதம் பற்றி கூட்டுரிமை ஆதனச் சொத்துச் சட்டத்தின் ஏற்பாடுகளினால் தெளிவாக்கப்பட்டுள்ளது.

முகாமைத்துவ கழகத்தின் பொதுக்கூட்டத்தில் தெரிவு செய்யப்பட்ட முகாமைத்துவக் கழகத்தின் செயற்பாட்டுக் குழு அல்லது சபையினர் உரிய முறையில் மாதம் ஒரு முறையேனும் கூடுதல் மிகவும் முக்கியமானது. அச் சபைக்கு கிடைத்த எல்லாப் பணம் சம்பந்தமான மற்றும் சபையினால் அப் பணம் செலவு செய்யப்பட்ட சம்பந்தமான கணக்குப் புத்தகங்களை வைத்திருத்தல் மிகவும் முக்கியமானதொன்றாகும். இக் கொடுக்கல் -வாங்கல் சம்பந்தமான கணக்குச் சுருக்க அறிக்கையொன்று கூட்டுரிமை ஆதனச் சொத்தின் அறிவித்தல் பலகையில் காட்சிக்கு வைக்கப்படுதல் மிகவும் முக்கியமான ஒரு விடயமாகும்.

கூட்டுரிமை ஆதன உரிமையாளர் ஒருவரின் வேண்டுகோளின் பிரகாரம் கணக்குப் புத்தகங்கள் வேண்டிய அல்லது நியாயமான சந்தர்ப்பங்களில் பரிசீலனை செய்யப்படுவதற்கு இடமளிக்கப்படுதல் வேண்டும். முகாமைத்துவ கழகத்தின் வருமானம் மற்றும் செலவுகள் தொடர்பான கணக்கு அறிக்கை ஒவ்வொரு ஆண்டினதும் பொதுச் சபைக் கூட்டத்தில் கணக்குச் சபையினால் சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும். அவை முகாமைத்துவ கழகத்தினால் நியமிக்கப்பட்ட கணக்குப் பரிசோதகர்களினால் கணக்காய்வு செய்யப்படுதல் வேண்டும். வருடாந்தப் பொதுக்கூட்டமொன்றுக்குப் பின்னர் முப்பது நாட்களுக்குள் பொதுக் கூட்டத்தில் சமர்ப்பிக்கப்பட்ட முகாமைத்துவ கழகத்தின் கணக்காய்வு செய்யப்பட்ட கணக்குகளும் அப் பொதுக்கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட ஆலோசனைகள் தொடர்பான அறிக்கைகளும் பொதுக் கூட்டத்தில் சான்றுபடுத்தப்பட்டு அவற்றின் உண்மையான பிரதிகள் முகாமைத்துவ கழகத்தினால் கூட்டுரிமை ஆதன முகாமைத்துவ அதிகார சபைக்குச் சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும்.

மேலும் ஒவ்வொரு 12 மாதத்திற்கு ஒருமுறை முகாமைத்துவ கழகத்தின்/கூட்டுத்தாபனத்தின் பொதுக் கூட்டம் நடத்தப்படுதல் வேண்டும். விசேட சந்தர்ப்பம் ஒன்றில் மேலும் மூன்று மாதங்கள் அதற்காக பெறப்படலாம். எனினும் அத்தகைய சந்தர்ப்பம் ஒன்றில் பிற்போடப்படும் / தவணை போடப்படும் காரணம் கூட்டுரிமை ஆதன் முகாமைத்துவ அதிகார சபைக்கு அறிவிக்கப்பட்டு இணக்கம் பெறப்படுதல் வேண்டும். இந்த எல்லாப் பொதுக்கூட்டங்களும் கூட்டுரிமை ஆதன முகாமைத்துவ அதிகாரசபைக்கு அறிவிக்கப்படுதல் வேண்டும். விசேட விடயங்கள் தொடர்பாக முடிவெடுப்பதற்கு விசேட பொதுக் கூட்டமொன்றை தேவையான போது நடத்தலாம். இவ்வாறு செயற்படுவதன் மூலம் முகாமைத்துவ கூட்டுத்தாபனத்தின் விடயங்கள் தொடர்பாக தேவையற்ற பிணக்குகள் ஏற்படுவதை தவிர்க்கலாம்.

### முகாமைத்துவ கழகத்துக்கு (Management Corporation) பணம் தேவைப்படுவதேன் ?

இதுபற்றி முன்னர் கூறப்பட்டிருந்தாலும் இங்கு இவ்விடயம் விரிவாக அலசப்படுகின்றது. பொதுப் பாவனையிடங்களின் நிர்வாகம், அதாவது முகாமை மற்றும் நிர்வாகம் போன்ற விடயங்களுக்காக நிதி தேவை. கழிவுகளை அகற்றுதல், சிறுவர் பூங்காக்களைப் பேணுதல், பொது இட நீர்வடிகால்களின் திருத்தவேலை, பொதுக்கூறுகளில் உள்ள மின் விளக்குகளுக்கான மின்சாரக் கட்டணங்கள் செலுத்துதல், அடிக்கடி ஏற்படும் புதுப்பித்தல்கள், கட்டட நிறப்பூச்சு போன்றவற்றிற்காக நிதி தேவை அவ்வாறே முகாமைத்துவ கழகத்தில் வசிப்பவர்களுக்கு பாதுகாப்புச் சேவைகளை வழங்குதல், முகாமைத்துவ கழகத்தின் வருமானம் மற்றும் செலவுகள் தொடர்பான கணக்குப் பரிசோதனைக்காகக் கட்டணங்களைச் செலுத்துதல் வேறு பல நாளாந்த கட்டணங்களைச் செலுத்துவதற்காக நிதி தேவைப்படுகின்றது.

அதாவது கூரை வெளிச்சுவர்கள், உள் நடைப்பாதை, ஏறுபாதைகள், பாதுகாப்பு அரண்கள் (வேலிகள்), நீர்பாய்ச்சு அறை, நீர்க் குழாய்கள், வடிகால்கள், கழிவு வடிகால்கள், நீர்த்தாங்கிகள், பொது தாங்கிகள் பொது மலக்குழாய்கள் போன்ற கூட்டுரிமை ஆதன சொத்தின் மிகமுக்கியமான பொதுப் பிரதேசங்களைப் பேணுதல் மற்றும் புதுப்பித்தலுக்காக நிதி தேவை. இந்நிதிக்குப் பணம் பெற்றுக் கொள்ளக் கூடிய முக்கியமான வழிகள் சில உள்ளன. அவையாவன.

1. உரிமையாளர்களிடமிருந்து மாதந்தோறும் அறவிடப்படும் உறுப்புரிமைப் பணம்.

2. உரிமையாளர்களிடமிருந்து அறவிடப்படும் தண்டம், வட்டி போன்ற பணம்.

3. கூட்டுரிமை ஆதன சொத்தின் முகாமைத்துவ கழகத்தின் முடிவுகளின் பிரகாரம் ஏதும் சொத்தை விற்பதன் மூலம் கிடைத்த பணம்.

4. இடம்பெயர் தொலைபேசிக் கம்பங்கள், அறிவித்தற் பலகைகள் போன்றவற்றை குத்தகைக்கு வழங்குவதற்காக ஒப்பந்தங்கள் செய்து பெறும் பணம்.

5. கொடுப்பனவுகள் என்ற வகையில் பெறப்பட்ட பணம் என்பனவாகும்.

(தொடரும்...)

# துறைமுக நகரத்தை நிறுத்துவதாகக்கூறிய அரசு தற்போது மேலும் விஸ்தரித்துள்ளது -விமல்



(கொழும்பு)

துறைமுக நகரத் திட்டத்தை நிறுத்துவதாகத் தெரிவித்து ஆட்சிக்கு வந்த அரசாங்கம் தற்போது அதற்கான இடத்தை மேலும் அதிகரித்து வழங்கியுள்ளது. என்றாலும் நாட்டுக்கு பொருளாதாரத்தை ஈட்டிக்கொடுக்கும் மத்திய நிலையமாக மாற்றியமைக்கவே இதனை நாங்கள் அன்று ஆரம்பித்தோம். எமது அரசாங்கம் இருந்திருந்தால் துறைமுக நகரத்திட்ட வேலைகள் முடிந்திருக்கும் என எதிர்க்கட்சி பாராளுமன்ற உறுப்பினர் விமல் வீரவன்ச தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று முன்தினம் உள்ளக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சின் நிர்வாக மாவட்டங்கள் சட்டத்தின் கீழ் மீதான பிரேரணையில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் அங்கு தொடர்ந்து தெரிவிக்கையில்,

துறைமுக நகரத் திட்டத்தை மகிந்த ராஜபக்ஷ அரசாங்கம் அன்று சீன அரசாங்கத்துடன் ஒப்பந்தம் செய்து ஆரம்பித்த போது, எமக்கு பல்வேறு விமர்சனங்கள் தெரிவிக்கப்பட்டன. சிவப்புச்சட்டைக்காரர்களும் விமர்சித்தனர். இவ்வாறான விமர்சனங்கள் அனைத்தும் அரசியல் குரோதத்தினால் மேற்கொள்ளப்பட்டதாகும்.

நாங்கள் ஆட்சிக்கு வந்தால் துறைமுக நகரத்திட்டத்தை நிறுத்துவதாக பிரதமர் ரணில் விக்கிரமசிங்க அன்று தெரிவித்திருந்தார். ஆனால் இன்று அதனை ஆதரிப்பவர்களுடன் இணைந்து செயற்பட வேண்டிய நிலை அவருக்கு ஏற்பட்டிருக்கின்றது. அத்துடன் மேலும் துறைமுக நகரத் திட்டத்துக்கு கூடுதலான இடம் வழங்கப்பட்டிருக்கின்றது. அதனை நாங்கள் எதிர்க்கவில்லை.

ஏனெனில் நாட்டின் பொருளாதாரத்துக்கு வருமானத்தை ஈட்டிக்கொடுக்கும் மத்திய நிலையமாக ஏற்படுத்துவதற்கே எமது அரசாங்கம் இதனை ஆரம்பித்தது.

என்றாலும் சீனாவை விமர்சித்து துறைமுக வேலைத்திட்டத்தை ஒரு மாத காலமாக இடைநிறுத்திய அரசாங்கம், இறுதியில் நட்டஈடும் வழங்க வேண்டிய நிலை ஏற்பட்டது. அத்துடன் நாங்கள் சீனாவுக்கு அந்தக் காணிகளை உரித்துரிமையாக கொடுத்ததாகத் தெரிவித்து இவர்கள் ஒப்பந்தத்தை மாற்றிக்கொண்டு 99 வருடங்களுக்கு குத்தகைக்கு வழங்கியுள்ளனர். அத்துடன் அம்பாந்தோட்டைத் துறைமுகத்தையும் 99 வருடங்களுக்கு சீனாவிடம் வழங்கியுள்ளனர். இந்த ஒப்பந்தம் மேலும் 99 வருடங்களுக்கு நீடிக்கவும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கின்றது.

எனவே நாட்டுக்கு நன்மை தரக்கூடிய விடயங்களை அரசியல் குரோதத்துடன் பார்க்காமல் செயற்பட்டால் மாத்திரமே நாட்டின் பொருளாதாரத்தைக் கட்டியெழுப்ப முடியும். இல்லாவிட்டால் அதன் பாதிப்பை எமது சந்ததியினரே அனுபவிக்க வேண்டி வரும். அதனால் எமது அரசாங்கம் ஆட்சியில் இருந்திருந்தால் இந்தத் துறைமுக நகரத்திட்டம் இந்தளவுக்கு நிறைவடைந்திருக்கும் என மேலும் தெரிவித்தார். (ஐ)

# ஐ.தே.கவை தோல்வியடையச்செய்யக்கூடிய வேட்பாளரையே மகிந்த தெரிவுசெய்வார்

## தினேஸ் குணவர்த்தன நம்பிக்கை



(கொழும்பு)

பிரதமர் ரணில் அணியினரைப் படுதோல்வியடையச் செய்யக்கூடிய வேட்பாளரையே முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தெரிவுசெய்வாரென மகிந்த அணியின் நாடாளுமன்ற உறுப்பினர் தினேஷ் குணவர்த்தன தெரிவித்தார்.

ஜனாதிபதித் தேர்தலில் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன சார்பில் யாரைக் களமிறக்குவது என்பது தொடர்பாக பல்வேறு கருத்துக்கள் முன்வைக்கப்பட்டுள்ள நிலையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

"ஜனாதிபதி வேட்பாளர் யார் என்பது தொடர்பாக எமது அணிக்குள் குழப்பம் இருக்கின்றமை உண்மைதான். ஆனால், ஐக்கிய தேசியக் கட்சியைப் போன்று எமது அணிக்குள் பெரிய குழப்பம் இல்லை. எமது அணியில் எந்த வேட்பாளர் களமிறங்கினாலும் அவர் ரணில் அணியினரைத் தோற்கடிக்கக்கூடியவராகவே இருக்க வேண்டும். எனவே, சிறந்த வேட்பாளரைத் தெரிவு செய்யக்கூடிய தகுதி மகிந்த ராஜபக்ஷவுக்கே உள்ளது. அவரே வேட்பாளரைத் தெரிவு செய்வார்.

மகிந்த ராஜபக்ஷ ஆட்சியில் இந்த நாடு அபிவிருத்தி கண்டது. பொருளாதாரம் வளர்ச்சியடைந்தது. ஆனால், தற்போது எல்லாம் தலைகீழாக மாறியுள்ளது. இதற்கு ரணிலின் ஊழல், மோசடி ஆட்சியே பிரதான காரணம். இதற்கெல்லாம் விரைவில் முடிவுகட்டப்படும்.

ஜனாதிபதித் தேர்தலில் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன சார்பில் வேட்பாளர் களமிறங்குவது உறுதி. ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி விரும்பினால் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவுடன் கூட்டணி அமைக்கலாம். ஆனால், ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன சார்பிலேயே வேட்பாளர் தெரிவுசெய்யப்படுவார்" என மேலும் தெரிவித்தார். (ஐ)

# யானை தாக்கியதில் பெண்ணொருவர் பலி

(திருமலை)

திருகோணமலை குச்சவெளி திரியாய பகுதியில் யானை தாக்கியதில் பெண் ஒருவர் உயிரிழந்துள்ளதுடன் மற்றொரு நபர் படுகாயமடைந்து வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

குறித்த பெண் நேற்று வீட்டில் இருந்த வேளையில் யானைத் தாக்குதல் இடம்பெற்றதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

உயிரிழந்த பெண் 72 வயதுடையவர் என்பதுடன் காயமடைந்தவர் 46 வயதுடைய வீட்டுக்கு அருகாமையில் இருந்தவர் எனவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

படுகாயமடைந்த நபர் குச்சவெளி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர். (ஐ)

# இரத்தம் மாற்றி ஏற்றியதால் சிறுவன் பரிதாபமாக உயிரிழப்பு

## அறுவர் கைது




(ஏறாவூர்)

மட்டக்களப்பு வைத்தியசாலையில் இரத்தம் மாற்றி ஏற்றியதால் சிறுவன் உயிரிழந்த சம்பவம் தொடர்பாக அறுவர் கைது செய்யப்பட்டுள்ளதாக மட்டக்களப்புப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

மட்டக்களப்பு வைத்தியசாலையின் அவசர சிகிச்சைப் பிரிவின் வைத்தியர்கள் மூவர் உட்பட அறுவர் சந்தேகத்தின் பேரில் நேற்று புதன்கிழமை காலை கைது செய்யப்பட்டுள்ளனர்.

குறித்த அறுவரும் குறித்த சம்பவத்தின் பின்னர் இடமாற்றம் செய்யப்பட்டிருந்த நிலையிலேயே. இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளனர்.

ஏறாவூர் பொலிஸ் பிரிவிலுள்ள வந்தாறுமூலை பலாச்சோலையைச் சேர்ந்த 9 வயதுடைய ஜெயக்காந்தன் விதுலஷ்சன் என்ற சிறுவன். கடந்த ஜனவரி மாதம் 3 ஆம் திகதி விபத்தில் காயமடைந்த நிலையில் மேலதிக சிகிச்சைகளுக்காக மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருந்தார்.

அங்கு மேற்கொள்ளப்பட்ட சிகிச்சைகளின்போது. அவருக்கு இரத்தம் ஏற்றப்பட்டுள்ளது. அதன் பின்னர் காயம் தீவிரமடைந்தமையினால். அதிதீவிர சிகிச்சைப் பிரிவுக்கு மாற்றப்பட்டு சிகிச்சையளிக்கப்பட்டுள்ளது.

இதனையடுத்து சுகமாகி வந்த சிறுவன். மீண்டும் நோய்வாய்ப்பட்டுள்ளார். அதனையடுத்து அவசர சிகிச்சைப் பிரிவுக்கு மாற்றப்பட்ட சிறுவனின் கிட்னி பகுதியில் சிறிய கசிவு ஏற்பட்டுள்ளதாகவும் எனினும் அதனால் எந்தப் பாதிப்பும் இல்லையென்றும் வைத்தியர்கள் தெரிவித்துள்ளனர்.

அதன்பின்னர் அவரது நிலைமை மிகவும் மோசமடைந்துள்ளது. இதன் காரணமாக பெற்றோர் வைத்தியரிடம் விசாரித்துள்ளனர்.

இதன்போது குறித்த சிறுவனுக்கு தவறான இரத்தம் ஏற்றப்பட்டதாக வைத்தியர்கள் தெரிவித்துள்ளனர்.

இரத்தம் மாற்றி ஏற்றியதால்தான் கிட்னி இரண்டும் பாதிப்படைந்துள்ளதாகவும் வைத்தியர்கள் தெரிவித்தனர்.

மேலும் இரத்தம் மாற்றி ஏற்றப்பட்டதாலேயே தனது மகன் மரணித்ததாக பொலிஸாருக்கு அறிக்கை வழங்கியுள்ளதாக சட்டவைத்திய அதிகாரி தன்னிடம் தெரிவித்ததாகவும் உயிரிழந்தவரின் தந்தை தெரிவித்துள்ளார். நேற்றைய தினம் கைது செய்யப்பட்ட வைத்தியர்கள் உள்ளிட்ட அறுவரும் இடமாற்றம் செய்யப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ஐ)

# பிணைமுறிமோசடி விவகாரம்; அர்ஜுன் மகேந்திரனுக்கு பிடியாணை

(கொழும்பு)

மத்திய வங்கி பிணைமுறி கொடுக்கல்-வாங்கல் மோசடி தொடர்பாக குற்றம் சாட்டப்பட்ட முன்னாள் மத்திய வங்கி ஆளுநர் அர்ஜுன் மகேந்திரனுக்கு பிடியாணை பிறப்பிப்பது குறித்த தீர்மானம் அடுத்தமாதம் அறிவிக்கப்படவுள்ளது. அந்த வகையில் ஓகஸ்ட் மாதம் 9 ஆம் திகதி பிடியாணை பிறப்பிப்பது குறித்த தீர்மானம் அறிவிக்கப்படும் என நீதிமன்றம் அறிவித்துள்ளது.

2015 ஆம் ஆண்டில், தனது மருமகனுக்கு சொந்தமான நிறுவனம் ஒன்றுக்கு சட்டவிரோதமான முறையில் திறைசேரிப் பத்திரங்களை அனுப்பியதாக அர்ஜுன் மகேந்திரன் மீது குற்றம் சாட்டப்பட்டது.

இதனால் 2015 மற்றும் 2016 ஆம் ஆண்டுகளில் பத்திர ஏலங்களின்போது குறைவான வட்டி விகிதத்தில் பெற விருப்பம் தெரிவித்த முதலீட்டாளர்களைத் தவிர்த்து விநியோகிக்கப்பட்டதன் விளைவாக, ஒட்டுமொத்தமாக அரசாங்கத்துக்கு சுமார் 1.6 பில்லியன் ரூபாய்க்கும் மேலதிக நட்டம் ஏற்பட்டுள்ளதாக அறிக்கைகள் தெரிவிக்கின்றன.

அந்தவகையில் சிங்கப்பூரில் தஞ்சமடைந்துள்ள அர்ஜுன் மகேந்திரனை ஒப்படைப்பது குறித்து சிங்கப்பூர் பிரதமரிடம் தனிப்பட்ட முறையில் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன அண்மையில் இரண்டாவது முறையாக கலந்துரையாடி இருந்தமை குறிப்பிடத்தக்கது. (ஐ)

# இறக்குமதியான கழிவுப்பொருட்கள் அடங்கிய கொள்கலன்களுக்கும் கடந்த அரசாங்கத்திற்கும் எவ்வித தொடர்புமில்லை

## பந்துல சுட்டிக்காட்டு



(கொழும்பு)

இரகசியமான முறையில் இறக்குமதி செய்யப்பட்டுள்ள பெருமளவிலான கழிவுப் பொருட்கள் அடங்கிய கொள்கலன்களுக்கும் கடந்த அரசாங்கத்திற்கும் எவ்வித தொடர்பும் கிடையாது. 2013.07.11 ஆம் திகதி வெளியிடப்பட்ட 1818.30 இலக்க வர்த்தமானியில் குப்பை இறக்குமதி மற்றும் மீள் ஏற்றுமதி தொடர்பில் எவ்விடத்திலும் குறிப்பிடப்படவில்லை என பாராளுமன்ற உறுப்பினர் பந்துல குணவர்த்தன சுட்டிக்காட்டினார்.

எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்துரைக்கையில் அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

சிங்கப்பூர் நாட்டுடனான சுதந்திர வர்த்தக ஒப்பந்தத்தின் ஊடாகவே வெளிநாட்டில் இருந்து பெருமளவிலான கழிக்கப்பட்ட பொருட்கள் இரகசியமான முறையில் இறக்குமதி செய்யப்பட்டுள்ளன என்று எம்மால் தகுந்த ஆதாரத்துடன் தெளிவுபடுத்த முடியும்.

ஐக்கிய தேசியக் கட்சி அரசாங்கம் இரகசியமான முறையில் செய்துக் கொண்ட செயற்பாடுகள் பகிரங்கப்படுத்தப்படும் போது அதன் ஆரம்பம் கடந்த அரசாங்கத்திலே ஏற்பட்டது என்று குறிப்பிட்டு தம்மை நியாயப்படுத்திக் கொள்வது பழக்கமாகி விட்டதொரு விடயமாகும்.

இறக்குமதி செய்யப்பட்டுள்ள கழிவுப் பொருட்களுக்கான அனுமதி தொடர்பான வர்த்தமானி கடந்த அரசாங்கத்திலே வெளியிடப்பட்டது என்று ஐக்கிய தேசிய கட்சியின் பின்வரிசை பாராளுமன்ற உறுப்பினர் முஜிபுர் ரஹ்மான் குறிப்பிட்டுள்ளமை தவறானதாகும்.

கடந்த அரசாங்கத்தில் 2013.07.11 ஆம் திகதி 1818.30 இலக்கத்தில் வெளியிட்ட வர்த்தமானியில் எவ்விடத்திலும் பிறநாட்டு கழிக்கப்பட்ட பொருட்கள் இறக்குமதி செய்யப்பட்டு அவை மீண்டும் மீள் ஏற்றுமதி செய்யப்படும் என்று குறிப்பிடப்படவில்லை.

எனவே இவ்விடயம் தொடர்பில் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன சுயாதீனமான விசாரணைகளை முன்னெடுக்க வேண்டும் என மேலும் தெரிவித்தார். (ஜ)

# பயங்கரவாதத் தாக்குதல் தொடர்பில் தகவல்கள் வழங்கியவருக்கு பணப்பரிசு

(கொழும்பு)

உயிர்த்த ஞாயிறன்று மேற்கொள்ளப்பட்ட பயங்கரவாதத் தாக்குதல் தொடர்பில் தகவல்கள் வழங்கிய நபரைப் பாராட்டும் விதமாக பணப்பரிசில் வழங்க பதில் பொலிஸ்மா அதிபர் அனுமதி வழங்கியுள்ளதாக பொலிஸ் தலைமையகம் அறிவித்துள்ளது.

கடந்த ஏப்ரல் 21 ஆம் திகதி பயங்கரவாதத் தாக்குதல் தொடர்பில் தகவல்கள் வழங்கிய நபர் பாராட்டப்படவில்லை என குறித்த நபரின் குரல் பதிவு அண்மையில் ஊடகங்கள் செய்தி வெளியிட்டன.

இந்நிலையில் குறித்த செய்தி தொடர்பில் பொலிஸ் தலைமையகம் கவனம் செலுத்தியுள்ளதுடன் குறித்த நபர் பொலிஸாரிற்கு இரண்டு தகவல்கள் வழங்கியதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதனடிப்படையில் ஒரு தகவலுக்கு 25 இலட்சம் ரூபா என்பதன் அடிப்படையில் 50 இலட்சம் ரூபா வழங்க பதில் பொலிஸ்மா அதிபர் அனுமதி வழங்கியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஜ)

# கொழும்புடன் இணைந்தது துறைமுக நகர நிலப்பரப்பு

## அமைச்சரவையில் அங்கீகாரம்

(கொழும்பு)

கடலுக்குள் புதிதாக உருவாக்கப்பட்ட கொழும்புத் துறைமுக நகர நிலப்பரப்பை கொழும்பு பிரதேச செயலர் பிரிவுடன் இணைப்பதற்கான தீர்மானம் நாடாளுமன்றத்தில் நேற்று முன்தினம் நிறைவேற்றப்பட்டது.

உள்நாட்டு விவகாரங்களுக்கான அமைச்சர் வஜிர அபேவர்த்தன இந்தப் பிரேரணையை நாடாளுமன்றத்தில் சமர்ப்பித்திருந்தார்.

இதற்கமைய, கொழும்புத் துறைமுக நகரை அமைப்பதற்காக, கடலுக்குள் உருவாக்கப்பட்ட 446.61 ஏக்கர் நிலப்பரப்பு, கொழும்பு நிர்வாக மாவட்டத்தில், கொழும்பு பிரதேச செயலர் பிரிவின் கீழ் கொண்டு வரப்பட்டுள்ளது.

இந்தப் பிரேரணை நாடாளுமன்றத்தில் அங்கீகரிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (ஜ)

# தெஹிவளை மிருகக் காட்சிச்சாலைக்கு கொண்டு வரப்பட்ட கருஞ்சிறுத்தை



(கொழும்பு)

உலகம் முழுவதும் நூற்றுக்கு வெறும் ஆறு சதவீதம் மட்டுமே காணப்படும் கறுஞ் சிறுத்தைகளில் ஒன்று, நேற்று முன்தினம் தெஹிவளை மிருகக் காட்சிச்சாலைக்குக் கொண்டு வரப்பட்டுள்ளது.

இரண்டு வயதுடைய இந்த கருஞ்சிறுத்தையானது, நெதர்லாந்திலிருந்து இலங்கைக்குக் கொண்டு வரப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

அத்துடன் இது நேற்று முன்தினத்திலிருந்து பொதுமக்கள் பார்வைக்கு விடப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஜ)

# facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 1787

### ராணி




### தினேஷ்




### சரண்





### சங்கர்




### ராஜா




### கந்தன்




நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

# மகிந்த மனதார விரும்பினால் வேட்பாளராகக் களமிறங்குவேன்

## சமல் ராஜபக்ஷ அதிரடி


(கொழும்பு)

**முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ மனதார விரும்பினால் எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் வேட்பாளராகப் போட்டியிடுவேன் என முன்னாள் சபாநாயகரும், மகிந்த ராஜபக்ஷவின் சகோதரருமான சமல் ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.**

"ஶ்ரீலங்கா பொதுஜன முன்னணியின் ஜனாதிபதி வேட்பாளராக சமல் ராஜபக்ஷ இருக்க வேண்டும் என்ற எனது நிலைப்பாட்டில் எந்தவித மாற்றமும் இல்லை.

அதேவேளை, பிரதமராக மகிந்த ராஜபக்ஷ நியமிக்கப்பட வேண்டும் என்ற எனது நிலைப்பாட்டிலும் மாற்றம் இல்லை" என்று மகிந்த அணியின் நாடாளுமன்ற உறுப்பினர் வாசுதேவ நாணயக்கார தெரிவித்திருந்தார்.

இது தொடர்பில் சமல் ராஜபக்ஷவிடம் வினவியபோதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.



அவர் மேலும் தெரிவித்ததாவது,

முப்பது வருடப் பயங்கரவாத யுத்தத்திலிருந்து இந்த நாட்டை மீட்டெடுத்ததிலும் நாட்டை மீளக் கட்டியெழுப்பியதிலும் ராஜபக்ஷ குடும்பத்துக்கு முக்கிய பங்குண்டு.

ராஜபக்ஷ குடும்பத்தில் உள்ள அனைவரும் ஜனாதிபதி வேட்பாளராகப் போட்டியிடுவதற்கு முழுத் தகுதியுடையவர்கள்.

எனவே, முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ மனதார விரும்பினால் எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் வேட்பாளராகப் போட்டியிடுவேன் எனத் தெரிவித்துள்ளார். (ஐ)

# நாடு திரும்பினார் கோத்தபாய ராஜபக்ஷ



(கொழும்பு)

மருத்துவ சிகிச்சையை முடித்துக் கொண்டு சிங்கப்பூரிலிருந்து முன்னாள் பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ நேற்று முன்தினம் இரவு 11.45 மணிக்கு கட்டுநாயக்க விமான நிலையத்தை வந்தடைந்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

சிங்கப்பூர் விமான சேவைக்குச் சொந்தமான எஸ்.கியூ 468 எனும் இலக்க விமானத்தில் அவர் நாட்டுக்கு வருகை தந்துள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

இவரை ஶ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் வேட்பாளராகக் களமிறக்க வேண்டும் என சில தரப்புக்களால் முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவுக்கு அழுத்தங்கள் வழங்கப்பட்டு வருகின்றமையும் குறிப்பிடத்தக்கது. (ஐ)

# கல்முனை செயலகத்தை தரமுயர்த்தக்கோரி போராட்டத்தில் ஈடுபட்ட தேரரை சந்தித்த விக்னேஸ்வரன்



(கல்முனை)

கல்முனை வடக்கு உப பிரதேச செயலகத்தை தரமுயர்த்த வேண்டும் என போராட்டத்தில் ஈடுபட்ட கல்முனை சுபத்திரா ராமய விகாராதிபதி ரன்முத்துகல சங்கரத்ன தேரரை நேரில் சென்று சந்தித்து முன்னாள் வடக்கு மாகாண முதல்வர் சி.வி. விக்னேஸ்வரன் கலந்துரையாடினார்.

நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை அம்பாறை மாவட்டத்திற்கு விஜயம் செய்த நிலையில் அவர் கல்முனையில் அமைந்துள்ள சுபத்திரா ராமய விகாரை வளாகத்தில் தேரரை சந்தித்து கலந்துரையாடினார்.

இதன்போது கல்முனை சுபத்திரா ராமய விகாராதிபதி ரன்முத்துகல சங்கரத்ன தேரர் சிங்கள மகா வித்தியாலய நிலைமை தற்போது மோசமாக இருப்பதாக தெரிவித்ததுடன் கிழக்கில் பெண் தலைமைத்துவக் குடும்பங்களின் வாழ்வாதாரம், இளைஞர், யுவதிகளின் வேலைவாய்ப்பு, வேலையற்ற பட்டதாரிகளின் பிரச்சினை, கல்முனை உப பிரதேச செயலக பிரச்சினைகள் உள்ளிட்டவைகளை ஆழமான விளக்கத்துடன் முன்வைத்தார்.

இதனைச் செவிமடுத்த முன்னாள் முதல்வர் சி.வி.விக்னேஸ்வரன் சங்கரத்ன தேரர் நன்றாகத் தமிழ் பேசக் கூடியவர் என்ற வகையில் இப்பகுதி மக்களின் பிரச்சினைகளை ஆழமாக புரிந்து கொண்டுள்ளதை வரவேற்பதாகவும் அவர் தெரிவித்தார்.

மேலும் அப்பகுதி மக்களின் குறைநிறைகளை கேட்டறிந்து கொண்டதுடன் எதிர்காலத்தில் சகல வளங்களுடன் அப்பிரதேசங்களை அபிவிருத்தி அடைய முயற்சிகளை மேற்கொள்வதாக தெரிவித்தார். (ஐ)

# செய்தித்துளிகள்

## சந்தேகத்திற்கிடமானவர்கள் 6 பேர் பொலிஸாரால் கைது

(புத்தளம்)

புத்தளம், வனாத்தவில்லு லெக்டோ தோட்டத்தில் சந்தேகத்துக்கிடமான முறையில் தங்கியிருந்த 6 பேர் நேற்று அதிகாலை கைது செய்யப்பட்டதாக வனாத்தவில்லு பொலிஸார் தெரிவித்துள்ளனர். தோட்டத்திலுள்ள தென்னங்கன்றுகளுக்கு நீர் ஊற்றுவதற்காகவும் கோழிப் பண்ணைகளில் வேலை செய்வதற்காகவும் தாம் தோட்டத்தில் இருந்ததாகக் கைது செய்யப்பட்ட சந்தேக நபர்கள் தெரிவித்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

கைது செய்யப்பட்டவர்களில் தோட்ட உரிமையாளர் மற்றும் அவரது மூன்று புதல்வர்களும் அடங்குவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த ஜனவரி மாதம் 16 ஆம் திகதி லெக்டோ தோட்டத்திலிருந்து பயங்கரவாத குழுக்களுக்குச் சொந்தமானது எனக் கருதப்படும் டெட்டனேட்டர் உள்ளிட்ட வெடிபொருட்கள் குற்றப்புலனாய்வு திணைக்களத்தினரால் மீட்கப்பட்டிருந்தன. வனாத்தவில்லு பொலிஸாரினால் நேற்றுக் கைது செய்யப்பட்டவர்களில் ஜனவரி மாதம் கைது செய்யயப்பட்டு தற்போது பிணையில் விடுக்கப்பட்டுள்ள இருவரும் அடங்குவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. கைது செய்யப்பட்ட சந்தேக நபர்கள் தொடர்பிலான மேலதிக விசாரணைகளை வனாத்தவில்லு பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ஐ)

## புகையிரதத்துடன் மோதி ஒருவர் பலி

(கண்டி)

கண்டி-வில்லியம் கொபல்லவ புகையிரத குறுக்கு வீதியில் புகையிரதத்தில் மோதுண்டு ஒருவர் பலியாகியுள்ளார்.

பேராதெனியில் இருந்து கண்டி நோக்கிப் பயணித்த புகையிரதத்தில் மோதுண்டே நேற்று முன்தினம் மாலை குறித்த நபர் உயிரிழந்ததாகத் தெரிவிக்கப்படுகின்றது.

உயிரிழந்தவர் ஹலவதுர-முருத்தகாமுல்ல பகுதியைச் சேர்ந்த 59 வயதுடைய நபர் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஐ)

## துப்பாக்கிகள் மாயமான விவகாரம்; குற்றப்புலனாய்வு விசாரணை

(பாணந்துறை)

பாணந்துறை வடக்கு பொலிஸ் நிலையத்திலிருந்த துப்பாக்கிகள் 2 காணாமல் போன விடயம் தொடர்பில், விசாரணைகளை முன்னெடுக்க குற்றப்புலனாய்வுப் பிரிவிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் ருவான் குணசேகர தெரிவித்துள்ளார்.

கடந்த 6 ஆம் திகதி ரி-56 ரக துப்பாக்கிகள் இரண்டு காணாமல் போன நிலையில், மேல்மாகாண சிரேஷ்ட பிரதி பொலிஸ்மா அதிபரின் கீழ் ஆரம்பகட்ட விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டதற்கமைய கடந்த 15 ஆம் திகதி இந்த பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி, பணி நீக்கம் செய்யப்பட்டார். இந்த நிலையிலேயே, இது தொடர்பான விசாரணைகளை முன்னெடுக்குமாறு குற்றப்புலனாய்வு பிரிவினருக்கு பதில் பொலிஸ்மா அதிபர் பணித்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஐ)

## சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி ரூபா | மருதனார்மடம் ரூபா | கொடிகாமம் ரூபா | கிளிநொச்சி ரூபா |
|---|---|---|---|---|
| கத்தரிக்காய் | 60 | 70 | 40 | 60 |
| உருளைக்கிழங்கு | 140 | 120 | 100 | 120 |
| பச்சைமிளகாய் | 200 | 400 | 200 | 350 |
| தக்காளி | 100 | 100 | 70 | 100 |
| மரவள்ளிக்கிழங்கு | 150 | 120 | 110 | 120 |
| கோவா | 80 | 80 | 60 | 80 |
| கரட் | 160 | 100 | 120 | 160 |
| பூசணி | 50 | 80 | 60 | 80 |
| புடோல் | 80 | 70 | 60 | 120 |
| வாழைக்காய் | 100 | 140 | 60 | 120 |
| சின்ன வெங்காயம் | 100 | 130 | 140 | 120 |
| பெரிய வெங்காயம் | 80 | 120 | 110 | 120 |
| பாகற்காய் | 140 | 60 | 150 | 160 |
| வெண்டிக்காய் | 40 | 80 | 70 | 120 |
| கருணைக் கிழங்கு | 60 | 110 | 60 | 120 |
| பயற்றங்காய் | 40 | 80 | 30 | 80 |
| லீக்ஸ் | 60 | 80 | 70 | 100 |
| பீற்றூட் | 80 | 100 | 60 | 100 |
| கறிமிளகாய் | 150 | 100 | 200 | 200 |
| முருங்கைக்காய் | 60 | 80 | 30 | 80 |
| போஞ்சி | 120 | 120 | 110 | 200 |
| கத்தரிதம்புள்ள | 50 | 60 | 30 | 50 |
| கீரை - 1பிடி | 30 | 20 | 20 | 30 |
| தேசிக்காய் | 180 | 250 | 250 | 300 |
| தேங்காய் (ஒன்று) | 30 | 30 | 25 | 20-40 |
| இராசவள்ளி | 200 | 180 | 140 | 200 |
| வெங்காயப்பூ | 120 | 200 | 100 | 200 |
| முள்ளங்கி | 80 | 70 | 30 | 80 |
| பொன்னாங்காணி | 40 | 30 | 20 | 30 |
| வல்லாரை | 15 | 50 | 20 | 30 |
| ஈரப்பலா | 50 | 80 | 120 | 60 |

# சிறுவர் அரங்கம்

## தெரு நாய்களைத்துன்புறுத்த வேண்டாம்



கோவிந்தாபுரம் என்னும் சிற்றூர். அந்த ஊரில் பெரும்பான்மையான மக்கள் விவசாயம் செய்து வாழ்ந்து வந்தனர். விவசாயத்திற்கு ஏற்றவாறு அந்த ஊரில் பெரிய ஆறு ஒன்றும் நிறைய வாய்க்கால்களும் உண்டு. வாய்க்கால்களில் ஓடும் நீரில் விவசாயமும் ஆற்றில் ஓடும் தண்ணீரில் குடிதண்ணீர் மற்றும் பல தேவைகளை அங்குள்ள மக்கள் பூர்த்தி செய்து கொள்வர்.

அந்த ஊரில் சிவனேசன் என்னும் விவசாயி வாழ்ந்து வந்தார். அவருக்கு மனைவியும் பூபதி என்னும் ஒரு மகனும் பூங்கொடி என்னும் மகளும் உண்டு. பூங்கொடி இரண்டு வருடக் குழந்தை. பூபதி ஆறாம் வகுப்பு படித்துக்கொண்டிருந்தான்,

சிவனேசன் ஊரில் குடியிருந்தாலும் காலை எழுந்தவுடன் தோட்டம் சென்று விடுவார். அவர் மனைவி, பூபதியை பாடசாலைக்கு அனுப்பி விட்டு, சிவனேசனுக்கு காலைச் சாப்பாடும், பாப்பாவான பூங்கொடியையும் கையில் தூக்கிக்கொண்டு அதன்பின் தோட்டம் செல்வார்.

பூபதி நல்ல பையன், ஒழுங்காகப் பாடசாலைக்குச் சென்று கொண்டிருப்பான். ஆனால் அவனுக்கு ஒரே ஒரு கெட்ட பழக்கம் உண்டு. இவன் செல்லும்வழியில்தெரு நாயோ, பூனைகளோ இருந்தால் போதும், உடனே கல்லை எடுத்து வீசி அதனை காயப்படுத்துவான்.

ஒரு சில நாய்கள் எதிர்த்தாலும் இவன் எறியும் கல்லை கண்டு பயந்து போய் ஓடி விடும்.

இதனால் இவன் வருகிறான் என்றால் அந்தத் தெருவில் இருக்கும் நாய், பூனைகள் ஓடி ஒளிந்து கொள்ளும். இவனுக்கு அதை பார்க்க ஒரே மகிழ்ச்சியாக இருக்கும்.

இவன் அம்மாவோ பூங்கொடிக்கு சாப்பாடு ஊட்டும் பொழுது அங்கு இருக்கும் ஒன்றிரண்டு நாய்களுக்கும் ஒரு கைப்பிடி சோறு போடுவாள். அதனால் தினமும் பூங்கொடிக்கு சாப்பாடு ஊட்டும்போது இரண்டு மூன்று நாய்கள் வந்து விடும். அம்மா ஆளுக்கு ஒரு உருண்டை சாப்பாடு போடுவாள். அதை பார்த்து பூங்கொடியும் கை கொட்டி சிரித்து அம்மாவிடம் சாப்பாடு வாங்கிக்கொள்வாள். நாய்களுக்கு உள்ளுக்குள் பயம் இருக்கும். எங்கே பூபதி அங்கு வந்து விடுவானோ என்று. அவன் அங்கு வந்தால் முதலில் கல்லைத்தான் எடுப்பான். அவன் அம்மாவே ஒரு முறை இவனை கண்டித்துள்ளார். வேண்டாம், அதனை இம்சிக்காதே, அது பாட்டுக்கு அமைதியாக இருக்கும்போது அதனை ஏன் துன்புறுத்துகிறாய் என்று பல முறை சொல்லி விட்டார்கள். இவன் அதை கேட்பதாக தெரியவில்லை.

இவர்கள் ஊரின் பக்கத்தில் இருக்கும் டவுனுக்கு சர்க்கஸ் கம்பனி ஒன்று வந்தது.

பத்து நாள் சர்க்கஸ் நடக்கப்போவதாக அறிவித்தார்கள். அந்த ஊரை சுற்றியுள்ள கிராமங்களிலிருந்து மக்கள் கூட்டம் கூட்டமாக சென்று சர்க்கஸை கண்டு களித்தனர். சிவனேசன் குடும்பமும் ஒரு நாள் மாலை, பூபதியுடனும் பூங்கொடியுடனும் அந்த சர்க்கஸை கண்டு களித்து வந்தனர். பூபதிக்கு ஒரே சந்தோசம், அங்குள்ள மிருகங்கள் செய்த சர்க்கஸ் வேலைகள் தான் அவனுக்கு பிடித்திருந்தது. ஒரு முதலை வாய்க்குள் தலையை விட்டு எடுக்கும் காட்சி அவனுக்கு பார்க்கவே திகிலாக இருந்தது. யானை சைக்கிள் ஓட்டியது அவனுக்கு வேடிக்கையாக இருந்தது, வரும்போது அம்மாவிடமும் அப்பாவிடமும் அதை பற்றியே பேசிக்கொண்டு வந்தான்.

இரண்டு நாட்கள் ஓடியிருக்கும், பூபதிக்கு அன்று பாடசாலை விடுமுறை, நண்பர்களுடன் விளையாட போய் விட்டான். அவன் அம்மா அப்பாவை தோட்டத்துக்கு அனுப்பிவிட்டு இவர்கள் துவைக்க போட்டிருந்த துணிகளை எடுத்துக்கொண்டும் பூங்கொடியை இடுப்பில் வைத்துக் கொண்டும் துவைப்பதற்காக ஆற்றுக்குச் சென்றாள். இவளை இடுப்பில் வைத்துக்கொண்டு சென்றதை கண்ட ஒரு சில நாய்கள் இவர்களைத் தொடர்ந்து நடந்து வந்தன.

பூங்கொடியை வெட்ட வெளி இடத்தில் உட்கார வைத்து விட்டு ஆற்றில் குறைந்த அளவு தண்ணீர் ஓடும் இடத்தில் நின்று கொண்டு, அங்குள்ள கல்லில் துணிகளை துவைக்க ஆரம்பித்தாள். வேலை மும்முரத்தில் நேரம் ஓடிக் கொண்டிருந்தது.

ஏதோ நினைத்தவள் தலையை மேலே தூக்கிப் பார்க்க அவளுக்கு இதயமே நின்று விட்டது போல் இருந்தது. காரணம் முதலை ஒன்று கரையில் இருந்த பூங்கொடியின் அருகில் நின்று அவளை கவ்விப் பிடிப்பதற்கு தயாராக இருந்தது.

"ஐயோ என் பிள்ளை" என்று ஓலமிட்டு அழுதவாறு குழந்தையை நோக்கி ஓடி வரவும் முதலை பூங்கொடியைப் பிடிப்பதற்கு வாயைக் கொண்டு செல்லவும் எங்கிருந்தோ பாய்ந்து வந்த இரண்டு நாய்கள், முதலையின் முகத்திலேயே விழுந்தன. முதலை திடீரென வந்த இந்த தாக்குதலால் நிலை குலைந்தது.

அதற்குள் சத்தம் கேட்டு ஓடி வந்த அங்குள்ளவர்கள், முதலில் குழந்தையை தூக்கிக் கொண்டு ஓடி விட்டனர்.

அந்த இரு நாய்களுக்கும் முதலையால் காயம் ஏற்பட்டாலும் முதலையைச் சுற்றி வளைத்து குலைக்க ஆரம்பித்து விட்டன.

அதற்குள் மேலும் பல நாய்கள் வந்து விட முதலை எங்கும் நகர முடியாமல் என்ன செய்வது என்று தெரியாமல் தடுமாற ஆரம்பித்து விட்டது.

இதற்குள் சர்க்கஸில் இருந்த முதலை எங்கோ தப்பித்து விட்டது என்று, பக்கத்து டவனில் தங்கியிருந்த சர்க்கஸ்கரார்கள் அங்கு வர முதலை பிடிபட்டு விட்டது.

அந்த ஊர்க்காரர்களிடம் மன்னிப்பு கேட்டு விட்டு அவர்கள் முதலையைத் தூக்கி சென்று விட்டனர்.

பூங்கொடியின் அம்மா குழந்தையை அணைத்துக் கொண்டு, அந்த நாய்களை நன்றியுடன் பார்த்தாள். நாய்களுக்கு முதலையின் பல் பட்டு ஒரு சில காயங்கள் ஆகியிருந்தன.

இருந்தாலும் துணிச்சலுடன் சண்டையிட்டு தன் குழந்தையை காப்பாறியிருக்கிறதல்லவா.

இப்பொழுதெல்லாம் பூபதி அந்த தெருவில் இருக்கும் நாய்களை கல்லால் அடிப்பதோ துன்புறுத்துவதோ கிடையாது. காயம் பட்ட நாய்கள் இவன் அருகில் வந்து ஒட்டி உறவாடுகிறது. காரணம் டவுனில் இருந்த மிருக வைத்தியரிடம் அப்பாவுடன் சென்று இந்த நாய்களுக்கு மருந்து வாங்கி வந்து இவனே போட்டு குணப்படுத்தி இருந்தான்.

## விடுகதைகளும் விடைகளும்

- இருட்டிற்கு அழைப்பார்கள், வெளிச்சம் வந்தால் அணைப்பார்கள். அது என்ன?

**விளக்கு**

- சின்னக் கதவுகள், இலட்சம் முறை மூடித்திறந்தாலும் ஓசை வராத கதவுகள். அது என்ன?

**கண் இமைகள்**

- தாகம் தீர்க்கும் தண்ணீர் சொம்பு அந்தரத்தில் தொங்குது. அது என்ன?

**இளநீர்**

- அடர்ந்த காட்டில் ஒற்றையடிப் பாதை. அது என்ன?

**தலைவகிடு**

- நித்தம் வரும் விருந்தாளி மாலையில் மறைந்து போவான். அவன் யார்?

**சூரியன்**

## நற்சிந்தனைகள்

- வெற்றியை புகழ்ந்து பாராட்டும் கலையை கற்றுக் கொள்ள வேண்டும். நாம் செய்ய வேண்டியதும், செய்ய முடிகிறதுமான காரியமும் இதுவாகும்.

- நாம் ஒழுங்காக செய்ததைவிட ஒழுங்குபட செய்யாத காரியத்தில்தான் கூடுதல் கவனம் செலுத்தி கவலைப் பட்டு வருகிறோம்.

- வெற்றிகரமாக வாழ விரும்பினால் - செம்மையான செயற்பாடு. என்பதற்கு விடைகொடுக்க வேண்டி வரும்.

- செம்மையோ செம்மை என்ற மனோபாவம் நம்மிடமிருந்து விடுபடுவதற்கான பயிற்சியை மேற்கொள்வோம். திருத்தம், செம்மை என்பதை விடுத்து நன்றாக சிறப்பாக செயற்படுவதில் நாட்டம் கொள்வோம்.

கஷ்டம் வரும்போது கண்ணை மூடாதே அது உன்னை கொன்று விடும்.
கண்ணை திறந்துபார் அதை வென்று விடலாம்.
- அப்துல் கலாம்.

வலம்புரி
T.P : 021 567 1530
website : www.valampurii.lk

## ஆடி அமாவாசை விரதத்துக்கு விடுமுறை வழங்குங்கள்

மாதந்தோறும் பூரணை விரதம் என்றால் அன்றைய தினம் விடுமுறை வழங்கப்படுகிறது.

கௌதம புத்த பிரான் பூரணை நாளில் பரிநிர்வாணம் அடைந்தார் என்பதால் அந் நாளில் பௌத்தர்கள் வழிபடுவதற்கு வசதியாக விடுமுறை வழங்கப்படலாயிற்று.

இஸ்லாமியர்கள் வெள்ளிக்கிழமைகளில் மதியம் தொழுகையில் ஈடுபட வேண்டும் என்ற நியதியின் காரணமாக, முஸ்லிம் பாடசாலைகளுக்கு வெள்ளிக்கிழமை தோறும் அரை நேர விடுமுறை.

தவிர, வெள்ளிக்கிழமைகளில் நண்பகலுக்குப் பின் பொதுப் பரீட்சைகள் நடத்தவும் தடை.

கத்தோலிக்கச் சமயத்தை இங்கு பரப்பிய குடியேற்றவாதிகளின் சட்டப்படி விடுமுறை நாளான ஞாயிற்றுக்கிழமைகளில் வழிபாட்டை ஒழுங்குபடுத்தியதால் ஒவ்வொரு ஞாயிறும் விடுமுறையாயிற்று.

இந்துக்கள் தேடுவாரற்றவர்கள் என்ற காரணத்தால், சிவராத்திரி என்ற சைவ விரதத்துக்கு மட்டும் விடுமுறை வழங்கப்படுகிறது.

இங்கு நாம் பண்டிகை விடுமுறை பற்றி சிலாகிக்கவில்லை. அப்படி சிலாகித்தால் அதிலும் சிங்கள, முஸ்லிம் இனங்களுக்கான விடுமுறைகளே அதிகம் எனலாம்.

இதை நாம் கூறும்போது, அவர்களுக்கு வழங்கப்படுகின்ற விடுமுறை உங்களுக்குமல்லவா? என்று நீங்கள் யாரேனும் கேட்கலாம்.

இங்கு விடுமுறை என்பது முக்கியமன்று. மாறாக அந்த விடுமுறையினூடு ஏற்படுகின்ற வழிபாட்டுப் பண்பாடு, குடும்பங்களில் ஏற்படுகின்ற ஒற்றுமை, விரத அனுஷ்டிப்பிலான ஈடுபாடு என்பனவே முதன்மை பெறுகின்றன.

இந்த வகையில் இந்துக்களின் முக்கிய விரதமாக விளங்கும் ஆவணி மாதத்து விநாயக சதுர்த்தி விரதம் இந்தியாவில் விடுமுறைக்குரிய நாள். ஆனால் இலங்கையில் ஆவணிச் சதுர்த்தி விரதம் உதாசீனம் செய்யப்படுகிறது.

ஆவணி விநாயகர் சதுர்த்தி விரதத்துக்கு விடுமுறை வழங்கப்படும்போது, விநாயக வழிபாடு வலுப்பெறுவதுடன் அறிவின் அடையாளமாக இருக்கின்ற விநாயகனை வழிபடாற்ற வேண்டும் என்ற மனப்பக்குவம் மாணவர்களிடையே ஏற்படும்.

இது ஒருபுறமிருக்க, அமாவாசை விரதம் என்பது இந்துக்களின் வாழ்வியலில் மிகவும் முக்கியமானது.

அதாவது தந்தையை இழந்தவர்கள் தமது தந்தையை நினைந்து பிதிர்க்கடன் செய்து அவரின் முத்தியின்பத்துக்காக விரதம் அனுஷ்டிக்கின்ற நாள்.

அதிலும் ஆடி மாதத்தில் வருகின்ற ஆடி அமாவாசை விரதம் மிகவும் முக்கியமானது என்பதுடன் நம் நாட்டில் இலட்சக்கணக்கான இந்துக்கள் இவ்விரத நாளில் தர்ப்பணம் செய்து புனித தீர்த்தங்களில் நீராடி, தந்தையையும் தந்தை வழி மூதாதையர்களையும் நினைவு கூர்ந்து; அவர்களின் தென்புலத்து வாழ்வுக்காக விரதம் இருப்பர்.

எனினும் அந்த விரதத்தைக்கூட கூடியிருந்து அனுஷ்டிப்பதற்கு அரச, வர்த்தக, பொது விடுமுறை வழங்கப்படுவதில்லை. இஃது மிகப் பெரும் குறைபாடாகும்.

எனவே ஒவ்வொரு ஆடி மாதத்து அமாவாசை விரத நாளில் விடுமுறை வழங்குவதற்கு எங்கள் வடக்கின் ஆளுநர் கலாநிதி சுரேன் ராகவன் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்பது இந்துக்களின் கோரிக்கை. இதை அவர் நிறைவேற்றுவார் என நம்பலாம்.

# பட்டதாரிகளுக்கான ஆட்சேர்ப்பில் வெளிவாரி பட்டதாரிகள் புறக்கணிப்பு

## மனித உரிமை ஆணைக்குழுவில் முறைப்பாடு

(யாழ்ப்பாணம்)

புதிதாக ஆட்சேர்ப்புச் செய்யப்பட்ட பட்டதாரிகளில் தாம் முழுமையாகப் புறக்கணிக்கப்பட்டுள்ளதாக வெளிவாரிப் பட்டதாரிகள் தெரிவித்துள்ளனர்.

இவ்வாறு பாதிக்கப்பட்ட பட்டதாரிகள் நேற்று (புதன் கிழமை) யாழ். மாவட்டச் செயலகத்திற்கு முன்பாக ஒன்று கூடி கலந்துரையாடியதுடன் யாழ்ப்பாணம் மனித உரிமை ஆணைக்குழுவில் முறைப்பாட்டையும் பதிவுசெய்தனர்.

நாடு முழுவதும் 16 ஆயிரம் பட்டதாரிகளை உள்வாங்கும் நோக்கில் எதிர்வரும் 29, 30ஆம் திகதிகளில் நியமனம் வழங்கப்படவுள்ள பட்டதாரிகளின் பெயர்ப் பட்டியல்கள் மாவட்டச் செயலகத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

இவ்வாறு அனுப்பிவைக்கப்பட்டுள்ள பட்டியலில் வெளிவாரிப் பட்டப்படிப்பினை பூர்த்திசெய்த எந்தவொரு பட்டதாரிகளும் உள்வாங்கப்படவில்லை என பட்டியல்கள் மூலம் கண்டறியப்படுவதாக அவர்கள் சுட்டிக்காட்டுகின்றனர்.

தற்போது அனுப்பி வைக்கப்பட்டுள்ள பட்டியலில் அண்மையில் மாகாண சபைகளில் நியமனம் வழங்கப்பட்ட சிலரின் பெயர்களும் உள்ளடங்குவதாகவும் அவர்கள் தெரிவித்துள்ளனர்.

இதன் காரணமாக புறக்கணிக்கப்பட்ட வெளிவாரிப் பட்டதாரிகள் அடுத்த கட்டமாக மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகள் தொடர்பாக ஆராய்ந்துள்ளனர். (ம-3)

## வவுனியா பறநாட்டாங்கல் பகுதியில் வீடு ஒன்று முற்றாக எரிந்து நாசம்

(குருமன்காடு)

வவுனியா, பறநாட்டாங்கல் பகுதியில் தீயில் எரிந்து வீடு ஒன்று முற்றாக நாசமடைந்துள்ளது. நேற்று மாலை குறித்த அனர்த்தம் இடம்பெற்றுள்ளது.

வவுனியா, பறநாட்டாங்கல் பகுதியில் உள்ள அரை நிரந்தர வீடு ஒன்றில் வசித்து வந்த குடும்பத்தினர் தோட்ட வேலைக்கு சென்றிருந்த நிலையில் குறித்த வீடு தீப்பிடித்து எரிந்துள்ளது.

வீடு தீப்பிடித்து எரிவது தொடர்பில் அயலவர்கள் வீட்டாருக்கு தெரியப்படுத்தியதையடுத்து அங்கு வந்த அவர்கள் அயலவர்களின் உதவியுடன் தீயை அணைக்க முயன்றுள்ளனர். அத்துடன் வவுனியா நகரசபை தீயணைப்பு பிரிவினருக்கும் தகவல் வழங்கியுள்ளனர்.

சம்பவ இடத்திற்கு வந்த தீயணைப்பு பிரிவினர் தீயை கட்டுப்படுத்த முயன்ற போதும அந்த முயற்சி வெற்றியளிக்கவில்லை. வீட்டில் இருந்த ஆவணங்கள், இலத்திரனியல் பொருட்கள், பாடசாலை மாணவர்களின் உபகரணங்கள், வீட்டு தளபாடங்கள் என அனைத்தும் முழுமையாக தீயில் எரிந்து சாம்பலாகின.

சம்பவ இடத்திற்கு சென்ற ஓமந்தைப் பொலிஸார் இது தொடர்பான விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். மின்னொழுக்கே தீவிபத்துக்கு காரணமாக இருககலாம் என ஆரம்ப கட்ட விசாரணைகளில் தெரிய வந்துள்ளது.

இதேவேளை, சம்பவ இடத்திற்கு சென்ற மாவட்ட அனர்த்த நிவாரண சேவைகள் நிலையத்தினர், கிராம அலுவலர் ஆகியோர் குறித்த வீட்டில் வசித்து வந்த குடும்பத்தினரை பிறிதொரு இடத்தில் தற்காலிகமாக தங்க வைப்பதற்கான ஏற்பாடுகளை மேற்கொண்டுள்ளதுடன் அம்மக்களின் அவசிய தேவைகள் குறித்தும் கவனம் செலுத்தியுள்ளனர். (ம-250)

## வெளிவாரி பட்டதாரிகள் புறக்கணிக்கப்பட்டது ஏன்?

### மகிந்த ராஜபக்ஷ கேள்வி

(கொழும்பு)

நாங்கள் 70 ஆயிரம் பட்டதாரிகளுக்கு தொழில் வாய்ப்புக்களை ஏற்படுத்திக் கொடுக்க நடவடிக்கை எடுத்த போது வெளிவாரி உள்வாரி என பார்க்கவில்லை என எதிர்க்கட்சித் தலைவர் மகிந்த ராஜபக்ஷ தெரிவித்தார்.

அத்துடன் அரசாங்கம் பட்டதாரிகளுக்கு தொழில் வாய்ப்புக்களை வழங்க நடவடிக்கை எடுத்திருப்பதாக தெரிவிக்கப்பட்டுள்ளபோதும் வெளிவாரி பட்டதாரிகளை புறக்கணித்திருக்கின்றது.

ஆகவே வெளிவாரி பட்டதாரிகளை நிராகரிப்பது எந்த அடிப்படையில் என்பதை அரசாங்கம் தெரிவிக்க வேண்டும் எனவும் கேட்டுக் கொண்டார்.

பாராளுமன்றத்தில் நேற்று நிலையியற் கட்டளை 27/2இன் கீழ் உரையாற்றுகையிலேயே இவ்வாறு குறிப்பிட்டார். (ம-3)

## தமிழர்களுக்கு அரசியல் தீர்வு என்பது ஐ.தே.க. அரசின் தேர்தல் பிரசாரமே

### அங்கஜன் இராமநாதன் தெரிவிப்பு

(கொழும்பு)

தமிழ் மக்களுக்கு அரசியல்தீர்வு இன்னும் மூன்று வருட காலத்திற்குள் வழங்கப்படும் என்று குறிப்பிடுவது ஐக்கிய தேசிய கட்சியின் தேர்தல் பிரசாரமாகும்.

கறுப்பு ஜூலையினை வெள்ளை ஜூலையாக மாற்ற முயற்சிப்பதால் மாத்திரம் தமிழருக்கு எதிரான வன்முறைகளை ஒருபோதும் மறந்து விட முடியாது என பாராளுமன்ற உறுப்பினர் அங்கஜன் இராமநாதன் தெரிவித்தார்.

ஸ்ரீலங்கா சுதந்திர கட்சியின் தலைமை காரியாலயத்தில் நேற்று புதன்கிழமை இடம் பெற்ற ஊடகவியலாளர சந்திப்பில் கலந்துகொண்டு கருத்துரைக்கையில் அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

1983ம் ஆண்டு தமிழ் மக்களுக்கு எதிரான கட்டவிழ்த்து விடப்பட்ட இன கலவரம் பாரிய பேரழிவினை ஏற்படுத்தியது.பல விதங்களில் தமிழ் மக்கள் பெரிதும் பாதிக்கப்பட்டார்கள். தமிழ் மக்களை பாதுகாக்கும் எவ்வித நடவடிக்கையினையும் அப்போதைய ஐக்கிய தேசிய கட்சி தலைமையிலான அரசாங்கம் முன்னெடுக்கவில்லை.

மாறாக பிரச்சினைகளை தீவிரப்படுத்தி தமிழ் இனபடுகொலையினை அரங்கேற்றி தமிழரின் பாரம் பரியங்களும் திட்டமிட்ட வகையில் இல்லாதொழிக்கப்பட்டது.

கறுப்பு ஜூலை இனகலவரத்தினையும்,அதற்கான பொறுப்பினையும் ஐக்கிய தேசிய கட்சி இன்று வரையில் ஏற்றுக் கொள்ளவில்லை.

தற்போது கறுப்பு ஜூலை அரசியல் தேவைக்காக வெள்ளை ஜூலையாக்கப்பட்டுள்ளது . தற்போது தமிழர்களின் உரிமைகள் தொடர்பில் கருத்துரைப்பதால் மாத்திரம் ஏற்பட்ட விளைவுகளை ஒருபோதும் மறந்து விட முடியாது என அவர் தெரிவித்தார். (ம-3)

## மதூஷின் நண்பர் சி.ஐ.டியால் கைது

மாக்கந்துரே மதூஷ் மற்றும் கஞ்சிப்பனை இம்ரான் ஆகியோரின் நெருங்கிய சகா ஒருவரை குற்றப்புலனாய்வு பிரிவினர் கைது செய்துள்ளனர்.

தர்காநகரத்தைச் சேர்ந்த 36 வயதுடைய லந்து வாஹந்தி சுஞ்சீவ புஸ்பகுமார என்பவரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளார். (ம-03)

## போக்குவரத்து விதிகளை மீறியவருக்கு 50 ஆயிரம் ரூபா தண்டம் விதித்தது சாவகச்சேரி நீதிமன்றம்

(யாழ்ப்பாணம்)

போக்குவரத்து விதிகளை மீறிய நபர் ஒருவருக்கு சாவகச்சேரி நீதிவான் நீதிமன்றம் 50 ஆயிரம் ரூபா அபராதம் விதித்து தீர்ப்பளித்துள்ளது.

கொடிகாமம் பொலிஸ் நிலையத்துக்குட்பட்ட பிரதேசத்தில் போக்குவரத்து விதிகளை மீறிய நபர் ஒருவரை நேற்றையதினம் சாவகச்சேரி நீதவான் நீதிமன்றில் கொடிகாமம் பொலிஸார் முற்படுத்தியபோதே நீதிவான் மேற்படி அபராதத் தொகையை செலுத்துமாறு தீர்ப்பளித்தமை குறிப்பிடத்தக்கது. (ம-03-10-114)

## சத்திய தரிசனம்

### வந்தால் வரட்டும் சோதனை



❖ மனிதனை சூழ்நிலை தான் உருவாக்குகிறது என நினைக்கின்றனர். ஆனால், அவனுடைய மனம் அதைவிட முக்கியமான காரணமாக இருக்கிறது.

❖ எல்லா ஆசைகளையும் இறைவனிடமே அர்ப்பணித்து விடுங்கள். மனச் சமநிலையுடன் இருக்க அமைதியைத் தரும் பழக்கங்களை மேற்கொள்ளுங்கள்.

❖ நீங்கள் நல்ல செயலைச் செய்தும் கூட உங்களை சிலர் கோபிக்கலாம். "இது தான் உலகின் இயல்பு" என்று புன்னகையுடன் ஏற்றுக் கொள்ளப் பழகுங்கள்.

❖ சோதனை நேர்ந்தால் வளைந்து கொடுக்காதீர்கள். எல்லாம் நன்மைக்காகவே என்று எண்ணி குறிக்கோளை நோக்கி விரைந்து செல்லுங்கள்.

❖ என்ன செய்தாலும் மற்றவர் நம்மைப் பாராட்ட வேண்டும் என்று எதிர்பார்த்துக் காத்திருக்க வேண்டாம். உங்களுக்கு நீங்களே உற்ற நண்பனாகச் செயற்படுங்கள்.

❖ அறிவாளியாக இருந்தாலும், செல்வந்தராக இருந்தாலும் அவர்களது அறிவும், செல்வமும் ஏழை, எளியவர்களுக்கு பயன்படுவதாக இருக்கவேண்டும்.

# சஜித்தின் அரைச்சதம் கைகொடுக்க சம்பியனாகியது ஹரிபோல் அணி




அச்சுவேலி ரொக்கெட் விளையாட்டுக்கழகம் யாழ்.மாவட்ட ரீதியாக நடத்தப்பட்ட "சம் ஒப் றொக்" கிரிக்கெட் சுற்றுப்போட்டியின் இறுதிப்போட்டி கடந்த ஞாயிற்றுக் கிழமை பிற்பகல் 4 மணியளவில் தலைவர் சுல்பிகான் தலைமையில் அச்சுவேலி ரொக்கெட் மைதானத்தில் அச்சுவேலி கோல்ட்ஸ்ரார் அணிக்கும் உடுவில் ஹரிபோல் அணிக்கும் இடையில் இடம்பெற்றது.

இறுதிப்போட்டியானது 10 பந்துப்பரிமாற்றம் கொண்டதாக இடம்பெற்றது. நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற கோல்ட்ஸ்ரார் அணியினர் முதலில் களத்தடுப்பை தீர்மானித்தனர்.

இதனடிப்படையில் நிர்ணயிக்கப்பட்ட பந்துப்பரிமாற்றங்களில் உடுவில் ஹரிபோல் அணியினர் அட்டகாசமான முறையில் அதிரடியாக ஆடி ஆறு இலக்குகளை இழந்து 116 என்ற இமாலய இலக்கை நிர்ணயித்தனர்.

இதில் சஜித் அதிரடியாக 24 பந்துகளில் 51 ஓட்டங்களையும், பிறாக்கன் 19 ஓட்டங்களையும் அதிகபடியாக பெற்றுக்கொடுத்தனர். பந்து வீச்சில் கோல்ட்ஸ்ரார் அணி சார்பாக சாரங்கன் 4 இலக்குகளை கைப்பற்றினர்.

117 என்ற வெற்றி இலக்கை நோக்கி துடுப்பெடுத்தாடிய கோல்ட்ஸ்ரார் உடுவில் ஹரிபோல் அணியின் துல்லியமான பந்து வீச்சுக்கு முகம் கொடுக்கமுடியாமல் 46 ஓட்டங்களுக்குள் சகல இலக்குகளையும் இழந்து தோல்வியை தழுவியது. பந்துவீச்சில் ஹரிபோல் அணிசார்பாக பிரதாப் 3, கனிஸ்ரன் 3, பிறாக்கன் 2, அனோயன் மற்றும் றயின்சன் ஆகியோர் தலா ஒரு இலக்குகளையும் கைப்பற்றினர்.

இறுதிப்போட்டியின் ஆட்ட நாயகனாக ஹரிபோல் அணியின் சயித் தெரிவு செய்யப்பட்டார். தொடர் நாயகனாக கோல்ட்ஸ்ராரின் நட்சத்திர துடுப்பாட்ட வீரர் வினோதன் தெரிவு செய்யப்பட்டார். சிறந்த பந்துவீச்சாளராக கோல்ட்ஸ்ரார் அணியின் சாரங்கன் தெரிவு செய்யப்பட்டார்.(ம-க)

## தேசிய மட்ட பளுதூக்கல் போட்டி
## அச்சுவேலி புனித தெரேசாளுக்கு தங்கம்



தேசிய மட்ட பளுதூக்கலில் அச்சுவேலி புனித தெரேசாள் மகளிர் கல்லூரி இரு தங்கப் பதக்கங்களைக் கைப்பற்றிச் சாதனை படைத்துள்ளது.

இலங்கை பாடசாலைகள் பளுதூக்கும் சம்மேளனம் நடத்திய அகில இலங்கை பாடசாலைகளுக்கு இடையிலான தேசிய மட்ட பளுதூக்கலில் 16 வயதிற்குட்பட்ட பிரிவில் அச்சுவேலி புனித தெரேசாள் மகளிர் கல்லூரியை சேர்ந்த சூ.நிதுஷா, டி.பிரகவி ஆகியோர் தங்கப் பதக்கங்களை கைப்பற்றி பாடசாலை சாதனையை பதிவு செய்தனர்.

இலங்கை பாடசாலைகள் பளுதூக்கும் சம்மேளனம் நடத்திய தேசிய மட்ட பளுதூக்கல் போட்டிகள் கடந்த ஞாயிற்றுக் கிழமை கேகாலை ராஜகிரிய மகா வித்தியாலய உள்ளக விளையாட்டரங்கில் நடைபெற்றது.

இதில் 16 வயதிற்குட்பட்ட பெண்களிற்கான பளுதூக்கல் போட்டியில் அச்சுவேலி புனித தெரேசாள் மகளிர் கல்லூரியைச் சேர்ந்த சூ.நிதுஷா 64 கிலோ நிறைப் பிரிவில் தங்கப் பதக்கத்தையும் டி.பிரகவி 76 கிலோ நிறைப் பிரிவில் தங்கப் பதக்கத்தையும் கைப்பற்றினர்.(க-60)

**அன்பு வாசகர்களே!**

உங்கள் பிரதேச விளையாட்டுச் செய்திகளை Valampurisp@gmail.com அல்லது 076 636 3378 என்னும் Viber இலக்கத்துக்கு அனுப்பி வையுங்கள்.

உங்களை உலகறியச் செய்ய நாம் தயார்

## வேகப்பந்து வீச்சாளர் நுவான் குலசேகர சகல விதமான போட்டியிலிருந்தும் ஓய்வு




இலங்கை கிரிக்கெட் வீரர் நுவான் குலசேகர சர்வதேச கிரிக்கெட் போட்டிகளில் இருந்து உடனடியாக ஓய்வு பெறுவதாக அறிவித்துள்ளார்.

இலங்கை கிரிக்கெட் அணிக்காக 184 ஒருநாள் போட்டிகளில் விளையாடியுள்ள குலசேகர 199 விக்கெட்களை எடுத்துள் ளார். 21 டெஸ்ட் போட்டிகளில் விளையாடி 48 விக்கெட்களும், 58 இருபது-20 போட்டிகளில் 66 விக்கெட்களையும் வீழ்த்தியுள்ளார்.

இதோடு ஒருநாள் போட்டிகளில் 4 அரைச்சதத்துடன் 1327 ஓட்டங்களை எடுத்துள்ளார். கடைசியாக குலசேகர 2017 ஆம் ஆண்டு ஜூலை மாதம் இலங்கை கிரிக்கெட் அணிக்காக ஒருநாள் போட்டிகளில் விளையாடினார்.

ஐ.சி.சி.யின் சர்வதேச ஒரு நாள் போட்டி பந்து வீச்சாளர்கள் தரவரிசையில் முதலிடம் பிடித்த ஒரேயொரு இலங்கை வீரர் குலசேகர தான்.

இந்நிலையில் சர்வதேச கிரிக்கெட் போட்டிகளில் இருந்து ஓய்வு பெறுவதாக அவர் அறிவித்துள்ளார்.

அண்மையில் தான் இலங்கை அணியின் மலிங்க தனது ஓய்வு முடிவை அறிவித்த நிலையில் குலசேகரவின் ஓய்வு முடிவு ரசிகர்களை வருத்தத்தில் ஆழ்த்தியுள்ளது.

இதனிடையில் இலங்கை மற்றும் பங்களாதேஷ் அணிகளுக்கிடையிலான சர்வதேச ஒரு நாள் போட்டி தொடர்பில் விளக்கமளிக்கும் ஊடக சந்திப்பு கொழும்பு தாஜ் சமுத்ரா ஹோட்டலில் நடைபெற்றது.

அப்போது இலங்கை கிரிக்கெட் நிறுவன செயலாளர் மொஹான் டி சில்வா, நுவான் குலசேகர தனக்கு பிரியாவிடைப் போட்டியொன்றில் விளையாட வேண்டி எழுத்து மூலமாக கேட்டுக்கொண்டுள்ளதாக தெரிவித்தது குறிப்பிடத்தக்கது. (க)

# இலங்கை பாதுகாப்பான நாடு பங்களாதேஷ் தொடக்க வீரர்



இலங்கை கிரிக்கெட் விளையாடுவதற்கு எப்போதும் அழகான நாடு என பங்களாதேஷ் கிரிக்கெட் அணியின் தொடக்க வீரர் தமிம் இக்பால் தெரிவித்துள்ளார்.

பங்களாதேஷ் கிரிக்கெட் அணி இலங்கையில் சுற்றுப்பயணம் செய்து 3 ஒருநாள் போட்டிகள் கொண்ட தொடரில் விளையாட உள்ளது. இரு அணிகளுக்கும் இடையிலான முதல் ஒரு நாள் போட்டி நாளை கொழும்பில் நடக்கவுள்ளது.

இதற்கு முன்பாக நடந்த பயிற்சி ஆட்டத்தில், பங்களாதேஷ் அணி 5 விக்கெட் வித்தியாசத்தில் இலங்கை லெவன் அணியை வீழ்த்தியது. இந்நிலையில், இலங்கையில் பாதுகாப்பான சூழல் நிலவுவதாக பங்களாதேஷ் அணியின் சிரேஷ்ட வீரர் தமிம் இக்பால் தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பாக மேலும் அவர் கூறுகையில், 'இலங்கையில் பாதுகாப்பான சூழல் உள்ளது. எல்லோரும் நேர்மறையான எண்ணங்களை கொண்டுள்ளார்கள் என்று நினைக்கிறேன். எங்கள் அணி வீரர்கள் இலங்கைக்கு வர எதிர்பார்த்திருந்தனர். அவர்கள் யாரும் இங்கு வரக்கூடாது என்று நினைத்ததில்லை.

இலங்கை எப்போதும் கிரிக்கெட் விளையாடுவதற்கு அழகான நாடாக இருந்து வருகிறது. பாதுகாப்பிலும், வசதியிலும் நாங்கள் நன்றாக இருக்கிறோம். இந்த நேரத்தில் கிரிக்கெட்டை தவிர வேறு எதையும் நாங்கள் நினைக்கவில்லை' எனத் தெரிவித்துள்ளார். (க)

## ஐ.சி.சி.டெஸ்ட் துடுப்பாட்ட தரவரிசை முதலிடத்தை தக்கவைத்தார் கோலி

டெஸ்ட் துடுப்பாட்ட தரவரிசைப் பட்டியலில் இந்திய அணித் தலைவர் விராட் கோலி முதலிடத்தை தக்க வைத்துள்ளார்.

ஐ.சி.சி. டெஸ்ட் துடுப்பாட்ட வீரர்களுக்கான தரவரிசைப் பட்டியலை வெளியிட்டுள்ளது. இதில் இந்திய கிரிக்கெட் அணித் தலைவர் விராட் கோலி 922 புள்ளிகளுடன் தனது முதலிடத்தை தக்க வைத்துள்ளார்.

அவருக்கு அடுத்த இடத்தில் நியூசிலாந்து அணியின் தலைவர் கேன் வில்லியம்சன் (913) உள்ளார். மூன்றாவது இடத்தில் இந்திய வீரர் புஜாரா (881) உள்ளார்.

அதனைத் தொடர்ந்து தரவரிசைப் பட்டியல் ஸ்டீவ் ஸ்மித் (அவுஸ்திரேலியா) - 857 புள்ளிகள், ஹென்றி நிக்கோலஸ் (நியூசிலாந்து) - 778 புள்ளிகள், ஜோ ரூட் (இங்கிலாந்து) - 763 புள்ளிகள், டேவிட் வோர்னர் (அவுஸ்திரேலியா) - 756 புள்ளிகள், ஐடன் மார்க்ரம் (தென்னாபிரிக்கா) - 719 புள்ளிகள், குவிண்டான் டி காக் (தென்னாபிரிக்கா) - 718 புள்ளிகள், பாப் டு பிளிசிஸ் (தென்னாபிரிக்கா) - 702 புள்ளிகள் ஆகியோர் உள்ளனர். (க)

## ஐ.எஸ் அமைப்பு...

அவர் மேலும் தெரிவிக்கையில்,

"உயிர்த்த ஞாயிறு தாக்குதல்கள் குறித்து முன்கூட்டியே கிடைத்த எச்சரிக்கைகள் குறித்து எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் எனக்கு திருப்தியளிக்கவில்லை. முன்கூட்டியே புலனாய்வு தகவல்கள் கிடைத்தன அவற்றை உரிய அதிகாரிகளிற்கு தெரியப்படுததினோம்.

தேசிய தவ்ஹீத் ஜமாத்தின் தலைவர் சஹ்ரான் வேறு சில குற்றங்களிற்காக விசாரிக்கப்பட்டார்.

வீடியோ ஆதாரங்களை அடிப்படையாக வைத்து தாஜ் சமுத்திரா ஹோட்டலும் இலக்கு வைக்கப்பட்டது என்ற முடிவிற்கு விசாரணையாளர்கள் வந்துள்ளனர். தாஜ்சமுத்திராவில் இரண்டு தடவை குண்டை வெடிக்கச் செய்வதற்கான முயற்சிகளில் தற்கொலை குண்டுதாரி ஈடுபட்டார். ஆனால் அவை வெற்றியளிக்கவில்லை.

தாஜ் சமுத்திரா ஹோட்டலில் சில முக்கிய பிரமுகர்கள் காணப்பட்டதன் காரணமாகவே அங்கு குண்டு தாக்குதல் இடம்பெறவில்லை என எங்களுக்கு தகவல் எதுவும் கிடைக்கவில்லை என அவர் தெரிவித்துள்ளார். (ம-3)

## வீதியைக் கடக்க...

இடம்பெற்ற இச் சம்பவத்தில் கலைமதி, நவிண்டிலைச் சேர்ந்த முகுந்தன் திசாந் (வயது-19) என்ற இளைஞரே பலியானார்.

நவிண்டிலைச் சேர்ந்த மேற்படி இளைஞர் பல்கலைக்கழகம் செல்லும் சகோதரியை பஸ்சிற்கு அனுப்புவதற்காக மோட்டார் சைக்கிளில் அழைத்து வந்து நெல்லியடி பஸ் நிலையத்தில் இறக்கிவிட்டு மீண்டும் வீட்டிற்கு செல்வதற்காக நெல்லியடி பஸ் நிலையத்தில் இருந்து அமரர் முருகேசு சிவசிதம்பரத்தின் சிலை இருக்கும் எதிர்பக்கத்திற்கு மோட்டார் சைக்கிளை செலுத்தியுள்ளார்.

அச் சமயம் பருத்தித்துறை பக்கமாக இருந்து யாழ் நோக்கி வேகமாக வந்த டிப்பர் வாகனம் நெல்லியடி சந்தியில் மோட்டார் சைக்கிளை மோதித் தள்ளியது.

இதில் படுகாயமடைந்த நிலையில் இரத்த வெள்ளத்தில் கிடந்த இளைஞரை உடனடியாக பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதித்த போதும் அவர் உயிரிழந்தார்.

இச் சம்பவம் தொடர்பில் விசாரணைகளை மேற்கொண்ட நெல்லியடி பொலிஸார் டிப்பர் வாகனத்தை செலுத்தி வந்த 22 வயதுடைய இளைஞரை கைது செய்துள்ளனர். (ம-60,78)

## ஐ.நா சிறப்பு...

பட்டது. இருப்பினும் ஐ.நா. சிறப்பு அறிக்கையாளர் கிளெமென்ற் நயா லெட்சோசிவூல் பிரதம நீதியரசரை சந்தித்துள்ளார்.

ஐ.நா. சிறப்பு அறிக்கையாளர் மற்றும் உயர்நீதிமன்ற நீதிபதிகளுக்கு இடையே சந்திப்பை ஏற்பாடு செய்ய வெளியுறவு அமைச்சு முயன்றது என எதிர்க்கட்சி பாராளுமன்ற உறுப்பினர் தினேஷ் குணவர்தன நேற்று முன்தினம் பாராளுமன்றத்தில் தெரிவித்திருந்தார்.

கொழும்பு உயர் நீதிமன்றத்தின் தலைமை நீதிபதி மற்றும் நீதிபதிகளுடன் ஒரு சந்திப்பை ஏற்பாடு செய்யுமாறு வெளியுறவு அமைச்சகம் நீதி அமைச்சிடம் கோரிக்கை விடுத்ததாக எதிர்க்கட்சி தெரிவித்துள்ளது.

இதேவேளை ஒரு வெளிநாட்டவர் தலைமை நீதியரசர் மற்றும் பிற நீதிபதிகளை கேள்வி கேட்க முடியாது என்றும் எதிர்க்கட்சி பாராளுமன்ற உறுப்பினர் பந்துல குணவர்த்தன தெரிவித்திருந்தார்.

அமைதியாக ஒன்றுகூடுவதற்கான உரிமை தொடர்பான ஐ.நா. சிறப்பு அறிக்கையாளர் கிளெமென்ற் நயா லெட்சோசிவூல் 9 நாள் பயணத்தை மேற்கொண்டு கடந்த 18ஆம் திகதி இலங்கை வந்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (ம-3)

## ஐ.நா விசேட...

வடமாகாண ஆளுநர் என்ற ரீதியில் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுடனும் அரசாங்கத்துடனும் இணைந்து மாகாணத்தினுள் வசிக்கும் பொதுமக்களின் வாழ்க்கையினை மேம்படுத்த முன்னெடுக்கும் நிலம், நீர், நிதி மற்றும் நீதி தொடர்பான செயற்பாடுகள் தொடர்பில் ஐநா விசேட பிரதிநிதிக்கு இதன்போது விளக்கமளித்தார்.

காணியற்ற மக்களுக்கு காணிகளையும், குடிநீர் மற்றும் விவசாயத்திற்கு தேவையான நீரினை வழங்குவதற்கு வடமராட்சி களப்பு திட்டம் உள்ளிட்ட திட்டங்கள் குறித்தும், வடமாகாணத்தில் கூட்டுறவு அபிவிருத்தி வங்கியொன்றை ஸ்தாபிப்பது குறித்தும் செயற்பட்டு வருவது தொடர்பில் ஆளுநர் இதன்போது விரிவாக விளக்கமளித்தார்.

இதேவேளை இலங்கையில் ஏப்ரல் மாதம் இடம்பெற்ற பயங்கரவாத தாக்குதல்களுக்கு பின்னர் தடைப்பட்டிருந்த பாதுகாப்பு படைகளின் வசமிருந்த பொதுமக்களின் காணிகள் படிப்படியாக விடுவிப்பது தற்போது மீண்டும் ஆரம்பிக்கப்பட்டுள்ளதனையும் இதன்போது ஆளுநர் சுட்டிக் காட்டினார். (ம-3)

## இளம் பெண்...

வைரஸ் காய்ச்சல் காரணமாக இளம் பெண் மருத்துவர் ஒருவர் மரணமடைந்துள்ளார். தெல்லிப்பளை ஆதார வைத்தியசாலையில் கடமையாற்றும் மருத்துவர் திருமதி தெய்வாம்பிகை சண்முகரட்ணம் (வயது-41) என்பவரே வைரஸ் காய்ச்சல் காரணமாக மரணமடைந்தவராவார். (ம-3)

## 5 ஜி திட்டத்துக்கு..

தில் நேற்று ரிட் மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

நாவாந்துறையை சேர்ந்த பொதுமகனான செல்லப்பர் பத்மநாதன் என்பவர் சார்பில், சட்டத்தரணி வி.மணிவண்ணன் வழக்கை தாக்கல் செய்தார்.

சட்டவலுவற்றதான இந்த திட்ட ஒப்பந்தம் மீது இடைக்கால தடை விதிக்கவும், தொலைத்தொடர்பு கோபுரங்களை அமைப்பதை உடனடியாக நிறுத்தவும், திட்டத்தை நிறுத்தவும் உத்தரவிட மனுவில் கோரப்பட்டுள்ளது.

மனுவின் பிரதிவாதிகளாக யாழ் மாநகர சபை, முதல்வர், ஆணையாளர், ஈடொட்கோ நிறுவனம் ஆகியன பெயரிடப்பட்டுள்ளன.

அடுத்த வாரம் இந்த வழக்கு விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்படும். (ம-3)

## உங்களுக்கு...

வந்திருக்குமா? என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பன் பாராளுமன்ற உறுப்பினர் சார்ள்ஸ நிர்மலநாதன் கடும் கோபத்துடன் கேள்வி எழுப்பியுள்ளார்.

நேற்றைய தினம் இடம்பெற்ற பாராளுமன்ற அமர்வின்போதே அவர் இவ்வாறு கேள்வி எழுப்பியுள்ளார். (ம-3)

## மாநகர முதல்வ...

குறிப்பிட்டு பிரேரணையொன்று சமர்ப் பிக்கப்பட்டுள்ளது.

தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் உறுப்பினர் ரஜீவ்காந்தினால் இந்த பிரேரணை சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

யாழ் மாநகரசபை முதல்வர் ஆர்னல்ட்டின் நிர்வாகம் மீது பல தரப்பும் தொடர்ந்தும் அதிருப்தி வெளியிட்டு வரும் நிலையில், நேற்றைய தினம் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி இந்த பிரேரணையை சமர்ப்பித்துள்ளது.

இந்த பிரேரணை தனக்கு எதிரானது என்பதால், முதல்வரால் விவாதத்திற்கு எடுத்துக் கொள்ளப்படாமல் விடவும் வாய்ப்பிருக்கிறது. (ம-3)

## சந்திரிகா...

யினர் தற்போது முதலைக் கண்ணீர் வடிக்கின்றனர் என ஸ்ரீலங்கா சுதந்திர கட்சியின் பொதுச்செயலாளர் தயாசிறி ஜயசேகர தெரிவித்துள்ளார்.

ஸ்ரீலங்கா சுதந்திர கட்சியின் தலைமைக் காரியாயலத்தில் நேற்று புதன்கிழமை இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

தமிழரின் அரசியல் தீர்வு குறித்து முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க முன்வைத்த பிரேரணையை தீயிட்டு கொளுத்தியவர்கள் இப்போது, தமிழ் மக்களின் அரசியல் தீர்வு குறித்து கவனஞ் செலுத்துவது வேடிக்கையாக உள்ளதாகவும் அவர் கூறியுள்ளார்.

அத்துடன் தமிழ் மக்களுக்கு எதிராகவே கறுப்பு ஜுலை இனக் கலவரம் தோற்றம் பெற்றது எனத் தெரிவித்த அவர், இதற்கு தற்போதைய அரசாங்கத்தில் உள்ள முக்கிய தரப்பினர்கள் நிச்சயம் பொறுப்புக்கூற வேண்டும் என்றும் அவர் குறிப்பிட்டார். (ம-3)

## நாவற்குழி சிவ...

ஒன்று நேற்று புதன்கிழமை அதிகாலை திருட்டுப் போயுள்ளது.

அதிகாலை 3.15 மணியளவில் திருவாசக அரண்மனையின் பின்பக்க அறை ஜன்னல் ஒன்றினைப் பிரித்து உள்நுழைந்த திருடர்கள் அறைக் கதவினை திறந்து ஆதி மூலத்திற்கு அருகாமையில் பரிபாலனத்தின் இடது பக்கத்தில் காணப்பட்ட சுமார் ஒன்றரை அடி உயரமும் 15 கிலோகிராம் எடையுமுடைய ஐம்பொன் பிள்ளையார் சிலையினை திருடிச் சென்றுள்ளனர்.

சிலையின் பெறுமதி சுமார் ஒன்றரை இலட்சம் எனத் தெரிவிக்கப்படுகிறது. திருவாசக அரண்மனையில் இரண்டு இரவு நேரக் காவலாளிகள் கடமையில் இருந்த சமயம் இந்தத் துணிகரத் திருட்டு இடம் பெற்றுள்ளது.

குறித்த திருட்டுச் சம்பவம் அரண்மனையில் பொருத்தப்பட்டுள்ள பாதுகாப்புக் கமராவில் பதிவாகியுள்ளது. திருடர்கள் முகத்தில் துணியை கட்டி திருட்டை அரங்கேற்றியுள்ளனர்.

மேலதிக விசாரணைகளை சாவகச்சேரி பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர். (ம-3,30,114)

## வாள்வெட்டுடன்...

பொலிஸார் நேற்றுக் காலை கைது செய்துள்ளனர்.

கைது செய்யப்பட்டவர்களிடம் பல்வேறு விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றதாகவும் மானிப்பாய் பொலிஸார் தெரிவித்தனர்.

கடந்த சனிக்கிழமை மானிப்பாய் சுதுமலைப் பகுதியில் வாள்வெட்டினை மேற்கொள்வதற்காக சென்ற கொடிகாமம் பகுதியைச் சேர்ந்த வாள்வெட்டு குழுவினர் மீது பொலிஸார் மேற்கொண்ட துப்பாக்கிச் சூட்டுப் பிரயோகத்தில் கொடிகாமம் கச்சாய் பகுதியைச் சேர்ந்த 23 வயதான செ.குவிகஜன் உயிரிழந்தார்.

சம்பவத்தின் பின்னர், மானிப்பாய் பொலிஸாரினால் மேற்கொள்ளப்பட்ட விசாரணையின் பின்னர் சாவகச்சேரி பகுதியைச் சேர்ந்த 3 பேர் கைது செய்யப்பட்டிருந்தனர்.

அவர்களிடம் மேற்கொள்ளப்பட்ட விசாரணையின் பின்னரே, நேற்றைய தினம் இந்த இரு இளைஞர்களும் கைது செய்யப்பட்டுள்ளனர்.

சுமார் 19 வயது முதல் 23 வயது வரையான இளைஞர்களே கைது செய்யப்பட்டவர்கள் என்றும், கைது செய்யப்பட்டவர்களிடம் விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டதன் பின்னர், நீதிமன்றில் ஆஜர்ப்படுத்துவதற்கான நடவடிக்கையை முன்னெடுக்கவுள்ளதாகவும் யாழ்ப்பாணம் பொலிஸார் மேலும் தெரிவித்தனர். (ம-3,101)

## முன்னாள் புலி...

அமைப்பின் முன்னாள் உறுப்பினருக்கு எதிராக ஜேர்மனி குற்றச்சாட்டு பதிவு செய்துள்ளது.

ஜி. நவநீதன் என்பவருக்கு எதிராகவே இவ்வாறு குற்றச்சாட்டு பதிவு செய்யப்பட்டுள்ளது.

கைது செய்யப்பட்டவர் 2002 முதல் 2009ஆம் ஆண்டு வரையான காலப் பகுதியில் தமிழீழ விடுதலைப் புலிகளின் புலனாய்வுத் துறையில் கடமையாற்றியுள்ளதுடன், லக்ஷ்மன் கதிர்காமரை கொலை செய்வதற்கான தவல்களை வழங்கியதாகத் தெரிவித்தே ஜேர்மனி அவருக்கு எதிராக இந்த குற்றச்சாட்டை பதிவு செய்துள்ளது.

அத்துடன் போரின் இறுதிக்கட்டத்தில் விடுதலைப் புலிகளின் முக்கிய நபர்கள் இலங்கையில் இருந்து தப்பிச் செல்ல சந்தேக நபர் உதவியுள்ளார் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம-3)

## ஐ.தே.க தலைமையில் புதிய கூட்டணியா?

### கபீர் ஹாசிம் கேள்வி

(கொழும்பு)

ஐக்கிய தேசியக் கட்சியின் தலைமையில் புதிய கூட்டணி ஒன்று அமைக்கப்படவிருக்கும் தகவல் குறித்து தமக்கு எதுவும் தெரியாது என கட்சியின் தவிசாளரான கபீர் ஹாசிம் தெரிவித்துள்ளார்.

எதிர்வரும் ஜனாதிபதி தேர்தலை முன்னிட்டு ஐக்கிய தேசியக் கட்சியின் தலைமையில் கூட்டணி ஒன்று அமைக்கப்பட உள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

இந்த கூட்டணி எதிர்வரும் ஓகஸ்ட் ஐந்தாம் திகதியன்று அறிவிக்கப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்த நிலையிலேயே கட்சியின் தவிசாளர் அது குறித்து தனக்கு எதுவும் தெரியாது உன தெரிவித்துள்ளார்.

அத்துடன் கூட்டணி அமைக்கப்படவுள்ளமை தொடர்பில் ஊடகங்கள் மூலமே தெரிந்து கொண்டதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

ஆனால் இது குறித்து கபீர் ஹாசிமுடன் தனிப்பட்ட ரீதியில் பேசப்பட்டதாக பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

இதேவேளை ஐக்கிய தேசியக் கட்சியை காப்பாற்ற வேண்டுமானால் சஜித் பிரேமதாஸ ஜனாதிபதி வேட்பாளராக்கப்பட வேண்டும் என்று கபீர் ஹாசிம் கோரி வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (ம-3)

வலம்புரி
விளம்பரத் தொடர்புகளுக்கு
021 221 7603
021 567 1532

தன நிதானய
திகதி 2019-07-24
சீட்டிழுப்பு இலக்கம் 178
ஆங்கில எழுத்து: X
வெற்றி இலக்கங்கள்: 21 38 53 67
தேசிய லொத்தர் சபை

கொவிசெத
திகதி 2019.07.24
சீட்டிழுப்பு இலக்கம் 2188
ஆங்கில எழுத்து: E
வெல்லப்பட்ட இலக்கங்கள்: 14 18 24 33
தேசிய லொத்தர் சபை

ஜாதிக சம்பத
சீட்டிழுப்பு திகதி 24-07-2019
சீட்டிழுப்பு இலக்கம் 959
ஆங்கில எழுத்து: Q
வெற்றி இலக்கங்கள்: 9 2 9 2 7 9
தேசிய லொத்தர் சபை

மெகா பவர்
திகதி 2019/07/24
சீட்டிழுப்பு இலக்கம் 0410
வெற்றி எழுத்து: E
சுப்பர் இலக்க: 19
வெற்றி இலக்கங்கள்: 14 25 28 39

**DCM** யாழ்நகர்

**அளவையியல்**

இறுதிக்கருத்தரங்கு

26.07.2019 : 2.00 – 5.00

27.07.2019 : 9.00 – 4.00

யாழ் முன்னணி பிரபல ஆசிரியர்கள்

S.சயந்தன்
R.P.சர்மா
T.T.நீதன்

அனுமதிகளை அலுவலகத்தில் பெறவும்

077 011 9434 – நிர்வாகி



**விரைவு பொதிகள் சேவை**

**விசேட விலை குறைப்பு**



DELIVERY IN 3-5 DAYS

UK – 550 /=Kg
கனடா - 950 /=Kg
ஜேர்மனி - 650 /=Kg
நெதர்லாந்து- 700 /=Kg
இத்தாலி- 700 /=Kg (நிபந்தனைகளுக்கு உட்பட்டது)

● யாழ்ப்பாணம் ● கிளிநொச்சி ● நெல்லியடி ● கொடிகாமம் ● வல்வெட்டித்துறை ● பருத்தித்துறை ● மானிப்பாய் ● திருகோணமலை ● சாவகச்சேரி ● சுன்னாகம் ● மருதங்கேணி

0768226240

V2 TRAVELS



வலம்புரி
விளம்பரத் தொடர்புகளுக்கு
021 221 7603
021 567 1532



**காண்டம் பார்த்தல்**

உங்கள் வாழ்வில் நடந்த மற்றும் நடக்கப் போகின்ற அனைத்து விடயங்களையும் மிக வும் துல்லியமாக கணித்துத் தருகின்றோம்.

தொடர்பு: 076 835 1932, 021 223 2222 (உரும்பிராய்)

(9694)


## வல்வெட்டித்துறை..

ஒருவரும் கைது செய்யப்பட்டுள்ளார்.

இராணுவத்திற்கு கிடைத்த தகவலின் பிரகாரம், வல்வெட்டித்துறை பொலிஸார் நேற்றுக் காலை குறித்த நபரைக் கைது செய்துள்ளனர்.

கைதுசெய்த நபரிடம் விசாரணைகளை முன்னெடுத்து வருவதுடன், பருத்தித்துறை நீதிமன்றில் ஆஜர்ப்படுத்துவதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றதாகவும், யாழ்ப்பாணம் பொலிஸார் மேலும் தெரிவித்தனர். (ம-60. 101)


**வேலைக்கு ஆள்**

**தேவை**

முல்லைத்தீவுப் பகுதியில் தோட்ட வேலைக்கு ஆள் தேவை.
வயதானவர்களும் ஊனமுற்றவர்களும் விண்ணப்பிக்கலாம்.

சம்பளம் மாதம் 25000/=

தொலைபேசி (C-7092)

0771681697, 0766205322





வங்கியில் அடகு வைத்த நகைகளை மீட்க முடியவில்லையா? நாம் மீட்டுத் தருகின்றோம்



**றாஜ் நகை மாடம்**

யாழ்ப்பாணம், நெல்லியடி, பருத்தித்துறை, சாவகச்சேரி, கொடிகாமம், கிளிநொச்சி, மானிப்பாய், சுன்னாகம், அச்சுவேலி, சங்கானை, உடுப்பிட்டி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார், திருகோணமலை ஆகிய பகுதிகளில்

வங்கியில் அடகு வைக்கப்பட்ட அடகு நகைகளை நகைக்கேற்ப பெறுமதியைப் பார்த்து வங்கியிலேயே பணத்தை தந்து வாங்கப்படும்.

தொடர்பு: றாஜ் - 077 679 6623

(9690)



**பயிற்சியுடன் உடனடி வேலை வாய்ப்பு**

தகுதி - 30 வயதிற்கு உட்பட்டவர்கள் - O/L, A/L எடுத்தவர்கள் விரும்பத்தக்கது



**விமானப் பயணச்சீட்டுக்கள்**
**விரைவுப் பொதிகள் சேவை**
**விசா சேவைகள்**

**V2 TRAVELS**

எமது கிளைகள்: கிளிநொச்சி, சாவகச்சேரி, நெல்லியடி, திருகோணமலை, கொடிகாமம், கோப்பாய், சுன்னாகம், மானிப்பாய், பருத்தித்துறை, வல்வெட்டித்துறை, மருதங்கேணி, புத்தூர்

● எமது அனைத்து கிளைகளிலும் 6 மாத கால பயிற்சியுடன் வேலை வாய்ப்புக்கள் உண்டு.
● பயிற்சிக்கால ஊக்கத்தொகை -7'500/-
● பயிற்சியின் முடிவில் சான்றிதழ் வழங்கப்படும்.
● பயிற்சியின் முடிவில் வேலைவாய்ப்பு வழங்கப்படும்
● சம்பளம் -15'000/- (C-7017)

16/1, மாநகரசபைக்கட்டடம் கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

0768226243
v2vacancies@gmail.com



**A/L 2019......**

**மாணவர்களுக்கான**

**ஊடகக்கற்கை கருத்தரங்கு**

காலம்: 26.07.2019 (வெள்ளிக்கிழமை)
9 am - 4 pm

இடம் : DMI (ஆரியகுளம் சந்தி

➤ பாடத்திட்டம் துரித மீட்டல்
➤ பகுதி 1, பகுதி 2 பயிற்சி

கற்றல் கையேடு வழங்கப்படும்

பரீட்சைக்கு தோற்றவுள்ள கலைப்பிரிவு, தொழில்நுட்ப பிரிவு மாணவர்கள் பங்குபற்றலாம்.

ஆசிரியர்: K.V. நவநீதன்

076 881 2343



**ALLIANCE FRANÇAISE DE JAFFNA**

பிரெஞ்சு மொழியை பிரெஞ்சு முறையில் கற்றுக்கொள்ளுங்கள்

af **பிரெஞ்சு மொழி**

➤ பிரெஞ்சு கற்பதற்கு வடமாகாணத்தில் **FRENCH EMBASSY**யின்கீழ் இயங்கும் சர்வதேச நிறுவனம் **ALLIANCE FRANÇAISE** மட்டுமே
➤ அங்கிகரிக்கப்பட்ட **CERTIFICATES & INTERNATIONAL DIPLOMAS (DELF, DALF)**
➤ யாரும் படிக்கலாம்.www.ambafrance-lk.org



(9674)

021 222 8093 61,கச்சேரி-நல்லூர் வீதி,யாழ்ப்பாணம்



**Video Editer**

**தேவை**

Video Editing
தெரிந்தவர்கள் மற்றும்
Video Editing
பழக விரும்புபவர்களும்
விண்ணப்பிக்கலாம்.

இடம் : நல்லூர் (9699)

077 116 6090
021 222 4211



**Wanted admin.clerk (female only)**


Able to handle accounts. Fluency in English.
Experience will be considered.
Forward your application along with your CV, photograph and contact number.



154,Brown Road, Jaffna. Or send
E-mail to :- aerolankajaf@ gmail.com
Tel.No.0772444172/0212226242 (C-7087)


# மரண அறிவித்தல்

பிறப்பு 1943 - 08 - 24



இறப்பு 2019 - 07 - 23

## செல்லத்துரை வைரமுத்து

**(முன்னாள் உரிமையாளர் - திருப்பதி ஹாட்வெயர்ஸ் ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்)**

யாழ்ப்பாணம் ஆனைப்பந்தியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட செல்லத்துரை வைரமுத்து 23.07.2019 செவ்வாய்க்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான செல்லத்துரை - திருப்பதி தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான செல்வத்துரை (விதானையார் 3ம் வாய்க்கால், பன்னங்கண்டி, பரந்தன்) - சேதுப்பிள்ளை தம்பதியரின் அன்பு மருமகனும் திலகவதியின் அன்புக் கணவரும் காலஞ்சென்ற றிஜிகாந் மற்றும் ரவீந்திரநாத் (பொறியியலாளர் - லண்டன்), மிராளன் (Director of Product Management, Ceymplon Private Limited) ஆகியோரின் அன்புத் தந்தையும் தனபாலசிங்கம் (லண்டன்), பரராஜசிங்கம் (லண்டன்) ஆகியோரின் அன்புச் சகோதரனும் சுதர்சனா (கணக்காளர் - லண்டன்), காயத்திரி (அபிவிருத்தி உத்தியோகத்தர் - பிரதேச செயலகம், பளை) ஆகியோரின் மாமனாரும் மாலினி (லண்டன்), புனிதராணி (லண்டன்) ஆகியோரின் மைத்துனரும் அஸ்வினி (லண்டன்), விதுஷன் (லண்டன்), நித்திஸ் ஆகியோரின் அன்புப் பேரனும் வித்தியா (லண்டன்), யாழினி (லண்டன்), விஜிதா (லண்டன்), றஜீவன் (லண்டன்) ஆகியோரின் அன்புப் பெரியப்பாவும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (26.07.2019) வெள்ளிக்கிழமை காலை 10 மணியளவில் அன்னாரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக கோம்பயன்மணல் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப் படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

(C-7093)

138/1, பருத்தித்துறை வீதி.
ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம்.

தகவல்: வை.மிராளன் (மகன்)
077 244 4162, 021 221 7457

# மரண அறிவித்தல்



## மோசஸ் அன்ரனிப்பிள்ளை

**(குமார்)**

**(ஓய்வுநிலை பொலிஸ் CID இன்ஸ்பெக்ரர்)**

பிறப்பு: 04.09.1937

இறப்பு: 23.07.2019

உயரப்புலம் ஆனைக்கோட்டையைப் பிறப்பிடமாகவும் கவுண்ஸ்லோ இலண்டனை வதிவிடமாகவும் கொண்ட மோசஸ் அன்ரனிப்பிள்ளை (குமார்) அவர்கள் 23.07.2019 அன்று நீர்கொழும்பில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற மோசஸ் மரியம்மா தம்பதியினரின் அன்பு மகனும் காலம் சென்றவர்களான கண்மணி, மனோண்மணி, அழகரட்ணம், பூபாலசிங்கம் மற்றும் அருள்மணி அவர்களின் ஆசைச் சகோதரனும் மேரி, அஞ்சலா இராஜதுரை, (ஓய்வுநிலைபெரும்பாக உத்தியோகத்தர் கமநல சேவை நிலையம் - நல்லூர் இலண்டன்) Dr. புஸ்பநாதன் (இலண்டன்) ஆகியோரின் ஆசை சின்னையாவும், காலம் சென்றவர்களாகிய B.A.பெர்னாண்டோ, S.P.சின்னத்துரை, G.S.பிள்ளை (ஓய்வுநிலை பொலிஸ் இன்ஸ்பெக்டர்) மற்றும் பூமலர், அமராவதி ஆகியோரின் அன்பு மைத்துனரும் தர்மசீலன் (பயஸ்) (ஓய்வுநிலை பொலிஸ் இன்ஸ்பெக்டர்), தங்கத்துரை, றீற்றா, சரோஜினி (கனடா) காலஞ்சென்ற றீற்றா றஜனி மற்றும் ஜெயசீலன் (நோர்வே) விஜயசீலன் (ஜேர்மன்), அருட்தந்தை S.A.றொஷான் (முகாமையாளர் யாழ். புனித வளன் கத்தோலிக்க அச்சகம்) தர்ஷிகா (அமெரிக்கா), நிஷாந்தன் (நியூசிலாந்து) ஆகியோரின் ஆசை மாமாவும் காலம்சென்ற அழகேஸ்வரன், அழகேஸ்வரி, அழகேந்திரி, அழகுநாயகி, அழகுராணி, அழகேந்திரன், அழகுரேவதி, லோயிற் சுரேஸ்குமார் (கனடா) புளோரின் சாந்தினி (அமெரிக்கா) இயேசுரன் ரமேஸ்குமார் (கனடா) ஆகியோரின் சிறிய தந்தையுமாவார்.

அன்னாரின் நல்லுடல் உறவினர், நண்பர்களின் அஞ்சலிக்காக நீர்கொழும்பு வெஸ்ரன் மலர்ச்சாலையில் 24.07.2019 காலை 8 மணிமுதல் மாலை 4.30 மணிவரை வைக்கப்பட்டு தொடர்ந்து அன்னாரின் சொந்த இல்லமாகிய "செல்லம்ஸ்" உயரப்புலம் ஆனைக்கோட்டையில் 25.07.2019 முதல் அஞ்சலிக்காக வைக்கப்பட்டு 26.07.2019 வெள்ளிக்கிழமை மாலை 3 மணிக்கு ஆனைக்கோட்டை புனித அடைக்கல நாயகி ஆலயத்தில் இரங்கற் திருப்பலி ஒப்புக் கொடுக்கப்பட்டு காக்கைதீவு கத்தோலிக்க சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

(9697)

திருமதி அருள்மணி செபஸ்தியாம்பிள்ளை
சகோதரி 0777209956
மேரி அஞ்சலா இராஜதுரை
பெறாமகள் 0765321600

தகவல்:-
அருட்பணி S.A. றொஷான்
(ஞானப்புதல்வன்) 0773043470
தர்மசீலன் (பயஸ்) மருமகன் 0718483424

இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 25.07.2019 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.